உ

# பன்னிரு கட்டுரை.

# WELVE LITERARY ESSAYS.

BY

R. P. SETHU PILLAI, B. A., B. L.

3406
பாகனேரி.

ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
இயற்றியது.

மீரானியா அச்சுக்கூடம்,
திருநெல்வேலி.

Rights Reserved) 1928. (Price As. 12

# முகவுரை.

அமிழ்தினுமினிய தமிழ் மொழியில் சொல் நயம் பொருள் நயம் வாய்ந்த நூல்கள் பெரும்பாலும் பாவகையிலேயே அமைந்திருத்தலால், அவை கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்குப் பயன்படாதனவாயிருக்கின்றன. இத்தகைய உயரிய நூல்களின் நயத்தை யாவரும் அறிந்து இன்புறுமாறு, உரைநடையில் அமைத்து உதவுதல் தமிழ்ப் பற்றுடையாரது தலையாய கடனாகும். இக்கருத்துக் கொண்டு தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரது திருக்குறளிலும், கல்வியிற் பெரிய கம்பரது கவிகளிலும் அமைந்த அரும்பொருள்களை ஆதரவாகக்கொண்டு சில கட்டுரைகள் வரைந்து, ''குமரனி''லும், ''செந்தமிழ்ச்செல்வி''யிலும் வெளியிட்டேன். அக் கட்டுரைகளைக்கண்ணுற்ற எனது நண்பர்கள் அவற்றைத் தொகுத்து நூல்வடிவாக வெளியிட வேண்டுமென்று விரும்பினர். அவ்வாறே அக்கட்டுரைகளில் பன்னிரண்டு கட்டுரைகளை எடுத்துத் தொகுத்து கலாசாலை மாணவர்களுக்கும் பயன்படுமாறு கட்டுரைகளில் அமைந்த கவிகளுக்குப் பொழிப்புரையும் சேர்த்துப் பன்னிருகட்டுரை என்னும் பெயரால் இச் சிறுநூலை வெளியிடத் துணிந்தேன். இந்நூலிற் காணப்படும் குற்றம களைந்து குணத்தைக் கொள்ளுமாறு அருங்கலை வல்ல அறிஞரை வேண்டுகின்றேன்.

ரா. பி. சேதுப்பிள்ளை.

உ

# பன்னிருகட்டுரை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆண்மையும் அருளும் | .... | 1 |
| 2. | ஒருசடையும் திரிசடையும் | .... | 7 |
| 3. | கர்ணனும் கும்பகர்ணனும் | .... | 18 |
| 4. | செவிச்சுவையும், கவிச்சுவையும் | .... | 25 |
| 5. | செஞ்சொற்சதங்கை | .... | 31 |
| 6. | செந்தமிழ்நாடு | .... | 36 |
| 7. | தவழும்புகழ் | .... | 43 |
| 8. | நல்மரமும், நச்சுமரமும் | .... | 49 |
| 9. | பந்து விளையாட்டு | .... | 55 |
| 10. | பயிர்வண்டும், படர்கொடியும் | .... | 62 |
| 11, | வண்மையும் வறுமையும் | .... | 68 |
| 12. | வீணைக்கொடியோன் | .... | 74 |

# ஆண்மையும் அருளும்

நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாக இம் மாநிலத்தில் மண்ணாலும் பெண்ணாலும் மாயப்போர் நிகழ்ந்து வருகின்றது. உலகிலுள்ள மக்கள் ஒருவயிற்றுப் பிறந்தார்போல் ஒற்றுமையாய் வாழத்தலைப்பட்டால் போர் ஒடுங்குமென்று மும்மையும் உணர்ந்த முதறிஞர் கருதுகின்றார்கள். ஆருயிரைக்கொல்லும் அரும் படை நிறைந்த அமர்க்களம்புகுந்து, மாற்றாரைக் கொன்று, கொடுமை செய்து வென்றி பெறுவதை நினையும்போது அறிஞர் நெஞ்சம் அழிவது இயல்பேயன்றோ? இதனாலேயே இந்நாட்டில் முறை திறம்பாது அரசாண்ட மன்னர் மற்றைய அரசரோடு மலைய நேர்ந்தக்கால் அறநெறி விலகாது அமர் விளைத்தார்கள். அருளும் ஆண்மையும் இனிதமைந்த அரசர் மாற்றாரோடு பொருவதன்முன்னம் மதிநலம் வாய்ந்த தூதுவரை அவர்பால் அனுப்பி நீதிபெற முயன்றார்கள்.

இவ்வாறு வெம்போர் விலக்கும் விழுமிய கருத்துடன் வேற்றரசரிடம் செல்லும் வினைஞரை வெல்வதும் கொல்வதும் ஆகாதென்று அரசநீதி முறையிடுகின்றது. அயோத்தி மன்னனது தூதுவனாகி இலங்கைமா நகருக்குச் சென்ற அனுமன்மீது, சீற்றமுற்று அவனைச் சிதைக்கக் கருதிய மன்னனை நோக்கி, வினையின் நீங்கிய விளங்கிய அறிவு வாய்ந்த வீடணன்,

"மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன்றாம் என
ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டினான்."

என்று கவியரசர் கூறுமாற்ருல், தூதரைக்கொல்லும் பாவம் மாதரைக் கொல்லும் மாபெரும் பாவத்தை ஒப்பதாகும் என்பது இனிதுணரப்படும். இவ்வாறு தூது போக்கியும் நேர்மை எய்தாத நிலையிலேயே அருள் நிறைந்த அரசர், வேறு வகையின்றி வெம்போர் புரியத்துணிவார்கள்.

மாற்றரசர், செம்மைசான்ற நெறிவிலகிப் புன்மையே புரியினும் அவரது சிறுமையைப் பொறுத்து, ஒல்லும் வகையால் போர் ஒழிக்க முயல்வதே அறம் திறம்பாத அரசர் செயலாகும். இத்தகைய பெருமை, அயோத்தி அண்ணலாய இராமனிடமும், குருகுல முதல்வனுய தருமனிடமும் தலைசிறந்து விளங்கக் காணலாம். தாய்மொழியைத் தலைக்கொண்டு நாடு துறந்து காடு புகுந்த வீரனது காதலியை, இலங்கை வேந்தன் வஞ்சனையால் கவர்ந்து அசோகவனத்தில் வைத்தான். மங்கையை இழந்த மன்னன், மலையும் காடும் அலைந்து திரிந்து, மதங்க வனத்தில் வானர மன்னனைத் துணைக்கொண்டு, கடல்சூழ்ந்த இலங்கையில் தன் காதலி சிறையிருப்பதை அறிந்து, கருங்கடலைக் கடத்தற்குக் கல்லால் அணை அமைத்து, வானர சேனையோடு இலங்கையின் நகர்ப்புறம் எய்தினுன். ஆயினும், தனக்குத் தவறிழைத்த இலங்கை வேந்தன் மீது அமர் தொடங்கு முன்னே, அம்மன்னன் திருமகளை விடுவானே என்று அறியுமாறு அங்கதனை இலங்கைக்குத் தூதனுப்பத்துணிந்தான். இவ்வாறே சூதினுல் அரசிழந்து, பன்னீராண்டு படர்கானகத்தில் துயர் உழந்து, அப்பால் ஓராண்டு ஒருவருமறியாது ஊர் நடுவே கரந்துறைந்து முடிந்த பின்னும், வாய்மை தவறிய வணங்காமுடி மன்னன்மீது, போருக்கு எழுவதன் முன்னமே குருகுல மன்னன் கண்ணனைத் தூதனுப்பிக் கடும்போர் விலக்கக்கருதினுன்.

விதிக்கும் விதியாகும் வில்லைத் தாங்கிய இளைய வீரனைத்துணைக்கொண்ட இணையற்ற இராம வீரன், இலங்கை நாதனது புயவலியும் படைவலியும் கண்டு பயந்து அவன்பால் தூதனுப்பினான் அல்லன். அவ்வாறே தண்டேந்திய வீமனையும் தனுவேந்திய விசயனையும் துணையாகக் கொண்ட தருமன், நூற்றுவராய் விளங்கிய மாற்றார் படைவலிகண்டு மயங்கிக் கண்ணனைத் தூதனுப்பினான் அல்லன். கடும்போரால் விளையும் கொடுமையையும் கொலையையும் விலக்கக் கருதிய விழுமிய அருளாலேயே, இருவரும்மானமும் கருதாது தூது போக்கினார் என்பது இனிது விளங்கும்.

இத்தகைய கரையிறந்த கருணையையும் வரையிறந்த பொறுமையையும் கண்ட வலிமைசான்ற தம்பியர் வருத்தமுற்றுக் கோபத்தாற் கொதித்தார்கள். மாற்றார் படையைக் கண்டுகலங்காத தம்பியர், மூத்தோர் கருணையைக் கண்டு கலங்கினார்கள். மானமாய அணிபுனைந்த தம்பியர்,மாற்றரசரிடம் வில்லாட இசைந்தனரேயன்றிச் சொல்லாட இசைந்தாரல்லர். தேவியை விடுகின்றானோ அன்றி ஆவியை விடுகின்றானோ என்றறிந்து வருமாறு இராமன் தூதனுப்பத் துணிந்தபோது எவர்க்கும் இளையாத இலக்குவன், வீரனை நோக்கி, "ஐயனே! இலங்கை அரக்கன் உன் தேவியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்; அந்தணரை அலறவைத்தான்; இந்திரனுக்கு இடர் விளைவித்தான்; மாயத்தால் உன் மனையாளைக் கவர்ந்து மயங்க வைத்தான்; சஞ்சலத்தால் நைந்த மங்கைக்கு, அஞ்சல் என்று அபயமளித்த கழுகின் வேந்தனைக் கருணையின்றிக் கொன்றான். இத்தகைய பாவியின் ஆவியைப் போக்காது அருள் காட்டலாகுமோ" என்று ஏக்கமுற்றுரைத்தான். இவ்வுரையை அமையக்கேட்ட அயோத்தி அண்ணல், புன்னகை

பூத்து "புயவலி அமைந்தோரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்வதே ஏற்றதாகும்; அதுவே அறமுமாகும்" என்றுமாற்றம் உரைத்தான்.

இவ்வாறே வம்பு செறிந்த வணங்காமுடி மன்னன்பால் கண்ணனைத் தூதனுப்பத் துணிந்தபோது, தண்டேந்திய தம்பி தருமனைநோக்கி, "ஐயனே! பன்னலம் திகழும் பாஞ் சாலி பாவியர் கைப்பட்டு

"ஆறுகி இருதடங்கண் அஞ்சன
வெம்புனல்சோர அளகம்சோர
வேறான துகில் தகைந்த கைசோர
மெய்சோர வேறோர் சொல்லும்
கூறாமல் கோவிந்தா கோவிந்தா என்று
அரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்தூற உடல் புளகித்து
உள்ளமெலாம் உருகினாளே"

அப்பொழுது தலைகவிழ்ந்து பொறுத்திருந்து நமக்கும் நம் மரபினுக்கும் என்றும் தீராத வசை தந்தீர்; அப்பால், பதின்மூவாண்டு காட்டிலும் நாட்டிலும் கழித்த பின்னரும் அமர் புரிந்து மாற்றரசர் உடலம் துணித்து உலகாளத்துணி யாது இன்னும் தூதனுப்பிப் பணிந்து இரந்து புவிபெற்று உண்டு இருப்பதற்குத் துணிகின்றீரே! அந்தோ! அரவு யர்த்தோன் கொடுமையினும், முரசுயர்த்தோய், உமது அருளுக்கு அஞ்சினேன். ஐயோ, என் தமையன் வாடுகி ன்ற மடப்பாவை வரமுடித்தான்; இளையவர்கூறிய வஞ்சின முடித்தான்; ஐயனே!

"மலைகண்டதென என்கை மறத்தண்டின்
வலிகண்டும் மகவான் மைந்தன்
சிலைகண்டும் இருவர் பொருந்திறல் கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற

நிலைகண்டும், இவள்விரித்த குழல் கண்டும்
இமைப்பொழுதின் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன் குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றாயே''

என்று கொதித்துக் கூறினான். அப்போது "அரச நெறியுணர்ந்த தருமனது உரைவழிநிற்றலே தக்கதாகும்" என்று கண்ணன் எடுத்துரைக்க வீமனும் அடங்கிநின்றான்.

அப்பால் போர் நிகழ்ந்தகாலத்தில் மானத்தால் மனங் கொதித்த தம்பியைத் துணைக்கொண்டு அயோத்தி மன்னனும் இலங்கை வேந்தனை வென்றான். செம்மை இகந்த சுயோதனன் செயல்கண்டு சிந்தை யழிந்த தம்பியரைத் துணைக்கொண்டு, குருகுல வேந்தனும் மாற்றாரைவென்றான்.

அறம் திறம்பாத இவ்வரசர் இருவரும் பொறுமையென்னும் பெருமைக்கோர் இருப்பிடமாய் இலங்கினார்கள். மாற்றார் சிறுமை செய்யினும் அச்சிறுமையைத் தம் பெருமையாற் பொறுத்து அறநெறியில் தலைநின்றார்கள். பகைவரது மிகையால் போர் செய்ய நேர்ந்தபோதும், அறம் திறம்பாத முறையில் அமர் நிகழ்த்தினார்கள். படைக்கல மிழந்து எளியனாய் எதிர் தோன்றும் பகைவனை அருள் வாய்ந்த அரசர், எஞ்ஞான்றும் தமது படைக்கலத்தால் நலிவதில்லை. வெள்ளிமலை யெடுத்த வீரன் படைக்கலமிழந்து எளியனாய் எதிரே போர்க்களத்தில் நிற்கக்கண்ட கோசல நாட்டு வள்ளல், அருள் அளாவிய ஆண்மையோடு,

"ஆளையா உனக் கமைந்தன
மாருத மறைந்த
பூளையாயின கண்டனை
இன்றுபோய்ப் போர்க்கு
நாளைவாவென நல்கினன்.''

என்று கவியரசர் கூறுமாறு பகையரசனுக்கு விடைகொடுத் தனுப்பினான்.

இவ்வாறே வில்லாண்மையில் தலைசிறந்து விளங்கிய விசயன், படைக்கலம் இழந்து எளியனாய் நின்ற கர்ணனது நிலைகண்டு, தளர்ந்துஅந்நிலையில் அவன்மீது அம்பெய்தலைத் தவிர்த்த ஆண்மை இராமனது உயரிய அருளை நிகர்ப்ப தாகும்.

"அன்று போர்புரி சேனையின்
பதியான வீரனை நீ
இன்றுபோய் இனி நாளை வா என
இனி தியம்பினனால்
வென்றி கூர்வரி வின்மையால் அடல்
வெவ்வரக் கரைமுன்
கொன்ற காளையை ஒத்த பேரிசை
கொண்ட ஆண்மையினான்."

என்று வில்லி, வில்லியின் பெருமையைப் போற்றிப் புகழ்ந் தார். இவ்வாறு அருளும் ஆண்மையும் அமைந்த அறநெறி மறநெறியோடு மாறுபடும்பொழுது இறுதியில் அறமே வெல்லும் என்பது ஒருதலையாம். "பொறுத்தார் பூமியாள் வார்" என்னும்பொய்யா மொழிக்குக் குருகுலக் குரிசிலும், கோசல நாட்டு வீரனும் இணையற்ற சான்றாய் அமைவது இதனால் இனிது அறியப்படும்.

"ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்."

# ஒரு சடையும் திரி சடையும்.

கார்மேகத்தின் இடையே இலங்கும் கதிரொளிபோல இரக்கம் அற்ற அரக்கர் வாழ்ந்த இலங்கைமா நகரத்தில் திரிசடை என்னும் நல்லாள் தோன்றினாள். இம்மங்கை தன் தந்தையாய விபீஷணனது அறிவும் தகைமையும் இனிது அமையப்பெற்று விளங்கினாள். மதுவுண்டு மயங்கும் இலங்கைமா நகரில் அம்மதுவைக் கண்ணெடுத்தும் பாராத கன்னியாய் அமைந்தாள். ஊனைத்தின்று ஊனைப் பெருக்கும் அரக்கர் நிறைந்த அந்நகரத்தில் புலால் உணவை அறவே ஒழித்த புனித நங்கையாய் இலங்கினாள். இம் மங்கை வாழ்ந்த மனையின் தன்மையைத் தன் மெய்யுணர் கண்களால் கண்ட மாருதி,

> "நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
> தந்தன கண்டிலென் தருமதானமும்
> வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து
> அந்தணர் இல்லெனப் பொலிந்த தாமரோ"

என்று போற்றிப் புகழ்ந்தான். இத்தகைய நல்லொழுக்கம் வாய்ந்த நல்லாள் அழகிலும் சிறந்து நாளொருமேனியாய் வளர்ந்து வந்தாள்.

இலங்கைவேந்தன் சீதையாகிய திருமகளை வஞ்சனையால் கவர்ந்து, அசோகவனமென்னும் அழகிய வனத்தில் சிறைவைத்தான். அகன்ற கடலும் உயர்ந்த மதிலும் சீதையின் சிறைகாப்பதற்குப் போதாவென்றெண்ணிப் பல்லாயிரம் அரக்கியரை அவ்வனத்தில் காவலாய் அமைத்தான். இக்கருமனத்தரக்கியர் இடையே, புலிக்குழாத்தினடுவே அகப்பட்ட புல்வாய்போலச் சீதை மயங்கினாள். இவ்வரக்

கியர் இலங்கைவேந்தன் ஏவலால் இரவும் பகலும் சீதையை இறவாது காத்துவந்தார்கள். கருத்துப்பருத்த மேனியும் வளைந்து இதழதுக்கும் எயிறுகளும் உடைய அரக்கியரைக் கண்டு சீதை அஞ்சி நடுங்கினாள். இடிமுழக்கம்போன்ற அவரது குரலைக்கேட்டு ஏக்கமுற்று வாடினாள். தலைவனைப் பிரிந்து அருந்துயரில் ஆழ்ந்த திருமகள் அரக்கியரது கொடுமையால் ஆற்றொணாத் துயரடைந்து வெந்த புண்ணில் வேல் எறிந்தாற்போல வெய்துயிர்த்தாள்.

இத்தகைய துன்பத்தால் நலிந்த மங்கைக்குத் திரிசடை உயிர்த்தோழியாய் அமைந்தாள். சீதையை மனச்சிறையில் அமைத்த இலங்கை மன்னன், தான் காதலித்த மங்கையின் மென்மைக்கும் செம்மைக்கும் ஏற்ற முறையில் நல்லியல் வாய்ந்த ஓர் தோழியைத் துணையாக அமைக்கக் கருதி அப்பணியைத் திரிசடைக்கு அளித்தான். நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமைந்த சீதையிடம் இந்நல்லாள் தலையாயநேசம்பூண்டு ஒழுகினாள். நாதனைப்பிரிந்த நங்கைக்கு நல்ல உயிர்த்துணையாய் அமைந்தாள். தலைவனை நினைந்து தளரும் தலைமகளுக்கு அப்பெருமான் வருவது திண்ணமென்று ஆறுதல்கூறி திருமகளது ஆருயிர்காத்தாள். சீதை வருந்தும்போது தானும்வருந்துவாள். அரக்கனது கொடுமையை எண்ணிச் சீதை நடுங்கும்போது நல்லுரைகளால் தேற்றுவாள். கணவனைப்பிரிந்த துயரத்தால் கண்ணிமையாத தலைமகளோடு, தானும் துயிலாது கண் விழித்திருப்பாள். இத்தகைய தோழியைத் திருமகள் தன் அன்னையாகவே கருதி அவள்பால் தலையாய அன்புசெலுத்தினாள். நேசம் என்னும் பாசத்தால் பிணிப்புற்ற இருவரும் ஒருவருக்கொருவர் அருந்துணையாயினர். மையல் நோயால் நையலுற்ற இலங்கைநாதன் தன் கற்பினுக்கு ஏதம் செய்வானோ

என்று அஞ்சி அயர்ந்த சீதையின் மயக்கம் தீர்க்குமாறு திரிசடை மலரோனது சாபவலிமையை எடுத்துரைத்தாள். முறையாக மணம் புரிந்த மங்கையரை அன்றி, மற்றைய மாதரை இலங்கை வேந்தன் தீண்டுவானாயின், அவன் தலை வெடிக்கும் என்று முன்னமே அயன் அருளிய சாபத்தைத் திரிசடை நன்றாய் அறிந்திருந்தாள். அச்சாபத்தின் வரலாற்றையும், வலிமையையும் சீதையிடம் எடுத்துரைத்து அம்மங்கையின் மனத்துயரை மாற்றினாள். இத்தகைய சாபத்திற்கு அஞ்சியே, அரக்கன் தன்மெய் தொடாது தானிருந்த நிலத்தை அகழ்ந்தெடுத்து அசோக வனத்தில் வைத்தான் என்னும் உண்மையைச் சீதை அறிந்து மகிழ்ந்தாள்.

"தீண்டுவானெனில் இத்தலைச் சேண்பகல்
ஈண்டுமோஉயிர் மெய்யின் இமைப்பின்முன்
மாண்டுதீர்வன் என்றே நிலம் வன்மையால்
கீண்டுகொண்டெழுந்து ஏகினன் கீழ்மையான்"

என்று சீதை அனுமனிடம்கூறும்சொற்கள் இதனைத்தெளிவாய் உணர்த்துவனவாகும். இச்சாபத்தின் வரலாற்றை அறிந்தபோது சீதை புத்துயிர் பெற்றாற்போலமகிழ்ந்தாள். தலைவன் வரும் அளவும் தன் கற்பினுக்கு யாதும் இழுக்கு நேராது என்று அறிந்த நங்கை மயக்கந்தீர்ந்து மனத்திண்மை பெற்றாள். இவ்வாறு தனக்கு உயிர் அளித்த தோழியின் கருணையைச் சீதை மாருதியிடம் மனமாரப் புகழ்ந்தாள்.

"அன்னசாபம் உளதென ஆண்மையான்
மின்னுமௌலியன் மெய்ம்மையன் வீடணன்
கன்னி என்வயின் வைத்த கருணையால்
சொன்னதுண்டு துணுக்க மகற்றுவாள்"

என்று தோழி தன்பால் வைத்த இரக்கத்தைச் சீதை வாயாரப் புகழ்ந்து போற்றினாள்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று வள்ளுவர் உரைத்த உண்மைக்குத் திரிசடையே தலைசிறந்த சான்றாய் அமைந்தாள். சஞ்சலத்தால் நைந்த சீதையின் நெஞ்சைத்தேற்றி அம்மங்கைக்கு உயிரளித்த பெருமை திரிசடைக்கே உரியதென்னும் உண்மையை அறிந்த அநுமன் ஐயம் துறந்து ஆனந்தமுற்றான்.

இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்க்கையில் துன்பம் உறவினருடன் பேசுந்தொறும் குறையும் என்றும் இன்பம் அவ்வாறு பேசுந்தொறும் நிறையுமென்றும் அறிந்தோர் கூறுவர். ஆகவே துன்பத்தைக் குறைத்தற்குத் துணைவர் வேண்டும் என்றும், எவரிடமும் எடுத்துரையாது மனத்தகத்தே அடைத்த துன்பம் இதயத்தைப் பிளக்கும் இயல் அமைந்ததென்றும் சறறறிந்தோர் கூறுகின்றார்கள். பொறுக்கலாற்றாத பெருந்துயர் அடைந்த சீதை அத்துயரத்தைத் தன் தோழியிடம் சொல்லி ஆற்றிய தன்மையாலேயே ஆவி தாங்கியிருந்தாள் என்பது இனிதறியப்படும். இரவும் பகலும் இராமனையே எண்ணி ஏங்கிய சீதை ஒரு நாள் சில மெய்க்குறிகள் கண்டு மயங்கினாள். தனது இடக்கண்ணும் தோளும் புருவமும் துடிக்கக்கண்ட திருமகள் தலைவனுக்கு என்ன நேருமோ என்றஞ்சி அன்னைபோல் விளங்கிய தோழியை அன்பொடு நோக்கி, 'அம்மையே முன்னாள் முனிவரொடும் தம்பியோடும் என் காதலன் மிதிலைமா நகரில் வந்தபோது எனது இடப்புருவமும் தோளும் கண்ணும் துடித்தன; அப்பால் எனது ஆவி நாயகன், நாடுதுறந்து காடு புகுந்த நாளில், எனது வலக்கண்ணும், தோளும் புருவமும் துடித்தன; இன்னும் நஞ்சனைய இலங்கை அரக்கன் என்னை வஞ்சனையால் கவர்ந்த நாளில் அவ்வாறே வலம்

துடித்தது; இப்போது வலப்புறம் துடியாது, இடப்புறம் துடிக்கின்றது; இதனால் என்ன நேருமோ என்று அஞ்சுகின்றேன்; இதன் உண்மையை ஆராய்ந்து சொல்வாய்" என்று வினயமாய் வினவினாள். திருமகள் கூறிய சொற்களை அமையக்கேட்ட தோழி அகமகிழ்ந்து, "அருமருந்தே! உனது அருமை நாயகன், இங்கு விரைவில் வருவான் என்பதை இக்குறிகள் அறிவிக்கின்றன. நான் கண்ட கனவும் உனக்கு நற்காலம் விரைவில் வருமென்று நன்குணர்த்துகின்றது. எந்நாளும் துயிலுறாத நான் நேற்று சிறிது கண்ணயர்ந்திருக்கையில் ஓர் கனவு கண்டேன். இலங்கைவேந்தன் சிவந்த ஆடையணிந்து தலையில் எண்ணெய் பூசி, பேய் பூண்ட தேர்மேலேறி, தென் திசை நோக்கிச்சென்றான். அவ்வேந்தனது மக்களும் சுற்றமும், மற்றைய அரக்கரும் அவ்வாறே தென் திசை நோக்கிச் சென்றார்கள். அரக்கர் கோன் ஆதரித்து வளர்த்த அசோகவனம் அழகிழந்து அழிந்தது. 'பொன்கொண்டிழைத்து மணியைக் கொடுபொதிந்த' மன்னன் மாளிகை இடியுண்டு பொடியாய் விழுந்தது. பிடிகள் மதம் பொழிந்தன. பேரிகைகள் அடிப்பாரின்றியே இடிபோல் முழங்கின. கருமேகங்கள் வெடிபட அதிர்த்தன. விண்மீன்கள் உதிர்ந்தன. ஆதவன் பிளந்து எரிந்தது. கல்லெனத்திரண்ட இலங்கைவீரரது புயங்களில் விளங்கிய கற்பகமாலை நறுமணங்கமழாது புலால் நாற்றம் கான்றது. இலங்கைமா நகரம் எரிந்தது. வாடா விளக்குகள் அவிந்து அந்தகாரத்தில் ஆழ்ந்தன. தோரண கம்பங்கள் ஒடிந்தன. பூரணகும்பங்கள் மதுபோல் பொங்கின. வேழங்களின் வலிய கொம்புகள் முறிந்து விழுந்தன. மதியினைப் பிளந்து மின்னொளி யெழுந்தது. கடுமேகங்கள் குருதிமழை பொழிந்தன. அரக்க மங்கையரது மங்கலநாண் அற்று விழுந்தது. மயன் மகளாய மண்டோதரியின் அழகியகூந்தல்

அவிழ்ந்து, அருகேயிருந்த விளக்கில் வீழ்ந்து எரிந்து கருகிற்று. புலிக்குழாத்தின் நடுவே வந்த இரண்டரிகள் இலங்கையின் மதக்கரிகளை வளைந்து போர்செய்து கொன்றன. இந்நகரினின்றும் ஓர் அழகிய மயில் வெளியே சென்றது. ஒளியமைந்த ஓர் திருமகள் கையில் மணிவிளக்கேந்தி, இலங்கைநாதன் மாளிகையினின்றும் போந்து என் தந்தையின் மாளிகை புகுந்தாள். அந்நிலையில் என்னை நீ எழுப்பி விட்டாய்'' என்று தான்கண்ட கனவை விரிவாக எடுத்துரைத்து வணங்கி நின்றாள். இவ்வாறு கண்ட கனவினால், இலங்கைமா நகரம் அழியும் என்றும், அரக்கரெல்லாம் இறந்தொழிவர் என்றும், சீதை சிறையினின்றும் நீங்குவாள் என்றும், திரிசடையின் தந்தை இலங்கைக்கு மன்னன் ஆவான் என்றும், அறிந்து இருவரும் மனமகிழ்ந்தார்கள். அரக்கியரது கொடுமையால் ஆற்றொணாத்துயர் அடைந்த மங்கைக்கு இக்கனவே அருமருந்தாய் அமைந்தது. நாயகனைக்காணலாமென்னும் காதலால் நங்கை அரக்கரது புன்மையெலாம் பொறுத்து ஆவிகாத்து அமைந்தாள்.

திருமகளைத் தன் தீயகருத்துக்கு இசைவிக்கக் கருதிய இலங்கை வேந்தன் நயத்தால் தன் கருத்து முற்றுப்பெறாதென்றறிந்து, பயத்தால் அம்மங்கையை இசைவிக்க எண்ணினான். தனக்கிசைந்த மாற்றம் உரையாத மங்கையை நோக்கி,

"பள்ளநீரயோத்தி நண்ணிப் பரதனே
முதலினோர் ஆண்டு
உள்ளவர் தம்மையெல்லா முயிர்குடித்
தாழித்தீயின்
வெள்ளநீர் மிதிலையோரை வேரறுத்து
எளிதினெய்திக்

கொள்வென் நின்னுயிரும் என்னையறிந்
திலை குறைந்த நாளோய்''

என்று இலங்கைவேந்தன் பயமுறுத்திச் சென்றான்.

அயோத்திமா நகரில் அருந்தவம் புரியும் பரதனையும் மிதிலைமா நகரில் அரசுபுரியும் மன்னனையும் மற்றைய சுற்றத்தாரையும் வேரறுப்பதாக வஞ்சினம் கூறிச்சென்ற மன்னவன், மாயையால் ஓர் அரக்கனை மிதிலை அரசன்போல் ஆக்கி, அவனைப் பாசத்தால் பிணித்துச் சீதையின் கண்ணெதிரே கொண்டு வருமாறு ஆணையிட்டான். அரக்கனது மாயத்தை அறியாத சீதை, மாயத் தந்தையை உண்மைத் தந்தை என்றெண்ணி மயங்கி அழுதாள்; கைகளை நெரித்தாள்; கண்ணை மோதினாள்; நெருப்பில் விழுந்த மலர்போல் வாடினாள்; ஏங்கினாள், நடுங்கினாள், "ஐயோ! தந்தாய்! என்னால் உனக்கும் இத்துன்பம் வந்ததோ! மன்னர் மன்னரால் மதிக்கப்பெற்ற நீ அரக்கனது பாசத்திலகப்பட்டு மானமிழந்து உயிர்வாழ்தல் முறையோ! பெண்ணைப்பெற்ற பெரும் பாவத்தால் இப்பழியைப் பெற்றாய். நம்மிருவரையும் சிறை நீக்குவார் எவரையும் காண்கிலேனே!'' என்று மயங்கி அழுதாள். இவ்வாறு தன் தந்தையின் துயரைக்கண்டும், சீதைமனம் திரியாத திண்மையைக் கண்டு, அம்மாயா மன்னனைச் சிறைவைக்குமாறு அரக்கர்கோன் பணித்தான். தன் தந்தையென வந்த மாயோன் மறைந்தபின்னர், சீதை அருந்துயரில் ஆழ்ந்தாள். தந்தைக்கு நேர்ந்த மானத்தை எண்ணி மனங்குழைந்தாள். தலைவனும் தந்தையும் தன்னால் அடைந்த பகையையும் பழியையும் நினைந்து நைந்தாள். அந்நிலையில் திரிசடை, திருமகளை அருளொடு நோக்கி இசையினுமினிய சொல்லால், "அன்னமே, உன்னெதிரே சற்றுமுன்வந்தவன் உன் தந்தை அல்லன்; இங்குள்ள அரக்கர் எல்லாம் மாயையில் மிகவல்லோர்; அவ்வரக்கரில் ஒரு

வனுய மருத்தன் என்பவனே மாயையால் உருவம் மாற்றி மிதிலை மன்னனுக வந்தான்; ஆதலால் உன் தந்தை மான மழிந்தான் என்று மனம் வருந்தாதே,'' என்று மயக்கம் தெளிவித்தாள். இதனை

"உந்தையென்று உனக்கெதிர் உருவமாற்றியே
வந்தவன் மருத்தனென்றுளன் ஓர் மாயையான்
அந்தமில் கொடுந்தொழில் அரக்கனுமெனச்
சிந்தையில் உணர்த்தினள் அமுதின்செம்மையாள்"

என்று கம்பர் அழகாகக் கூறியுள்ளார். இவ்வாறு திரிசடை கூறிய சொற்களால் மனந்தேறி, மங்கை ஒருவாறு துயரம் தீர்ந்தாள்.

இவ்வாறிருக்கையில், இலங்கை வேந்தனது சேனைக்கும் இராம வீரனது சேனைக்கும், இலங்கைமா நகரில் கடும் போர் நிகழ்ந்தது. இலங்கை மன்னனது மகனுய மேகநாதன், வீரத்திலும் வரத்திலும் தலைசிறந்துவிளங்கினுன். தனது அரிய படைக்கலங்களைக் கொண்டு பகைவரோடு போர் செய்யப்போந்த மேகநாதன், மாயையால் விண்ணில் மறைந்துநின்று வெம்மையும் கொடுமையும் நிறைந்த மறையோன் படையை மாற்றார்மீது ஏவினுன். அப்படைவலியால் இலக்குவன் முதலிய எல்லா வீரரும் நலிந்து மாய்ந்து மண்மேல் வீழ்ந்தார்கள். வீரர் அனைவரும், மடிந்து கிடப்பதைக்கண்ட இராமனும், மனங்கலங்கி மயங்கி மண்மேல் விழுந்தான். பகைவர் எல்லாம் தன் படைக்கலத்தால் பாழாயினர் என்று அறிந்து மகிழ்ந்த மேகநாதன், நிகழ்ந்த செயல்களை இலங்கை வேந்தனிடம் சென்று எடுத்துரைத்தான். அப்போது மன்னனும் மனம் மிக மகிழ்ந்து மதுக்கடலை மாந்திக் களித்து எல்லையற்ற இன்பமுற்றுன். அமர்க்களத்தில் இறந்துகிடந்த இராமனைச் சீதை தன் கண்களால்

காணின் இனி உய்யும் வழி இல்லை யென்றறிந்து தன்னைக் கணவனாக ஏற்றுக்கொள்வாள், என்று எண்ணிய இலங்கை வேந்தன், அத்திருமகளை அழைத்துக்கொண்டு அமர்க்களத்தைக் காட்டுமாறு அரக்கியருக்கு ஆணைசெய்தான். அவ்வாறே, சீதையை ஓர் விமானத்திலேற்றி இராமன் மயங்கிக் கிடந்த இடத்திற்கு இரக்கமற்ற அரக்கியர் கொண்டு சென்றார்கள். அப்போது திரிசடையும் திருமகளுடன் விமானத்திற் சென்றாள். மயங்கிக்கிடந்த நாயகனையும் மற்றைய வீரரையும் கண்ட சீதை, அனைவரும் இறந்தார் என்று எண்ணி நஞ்சுண்டவள்போல் நடுங்கி அழுதாள். கல்லும் கரைந்துருகுமாறு திருமகள் அழுதபோது

"மங்கையழலும் வானாட்டு மயில்கள்
அழுதார், மழவிடையோன்
பங்கிலுறையுங் குயிலழுதாள், பதுமமலர்
மேன் மாதழுதாள்,
கங்கையழுதாள் நாமடந்தை யழுதாள்,
கமலத் தடங்கண்ணன்
தங்கையழுதாள் இரங்காத அரக்கிமாருந்
தளர்ந்தழுதார்"

என்று கவிகூறுமாறு விண்ணுலக மாதரும், மண்ணுலக மாதரும் மயங்கி அழுதார்கள். தலைவன் இறந்தபின் உயிர் வாழ இசையாத சீதை அந்நிலையே நாயகன்மீது விழுந்து ஆவிநீக்கத் துணிந்தெழுந்தாள். அப்போது அருகே நின்ற திரிசடை அம்மங்கையைத் தழுவிப்பற்றி, மற்றைய அரக்கியரை எல்லாம் விலக்கி, அருந்துயரில் ஆழ்ந்த திருமகளை நோக்கி "அம்மா, இதுவும், அரக்கரது மாயமென்றறிவாய். முன்னே மாயமான் விடுத்ததுவும், மிதிலை மன்னனை வகுத்ததுவும், மாயம் என்று அறிந்தாய் அல்லவோ?

"மாயமான் விடுத்தவாறும் சனகனை
வகுத்தவாறும்

பேர்யமா நாகபாசம் பிணித்தது
போனவாறும்
நீயமா நினைவாய்மாள நினைதியோ
நெறியிலாரால்
ஆயமா மாயம் ஒன்றும் அறிந்திலை
அன்னமன்னாய்."

இன்னும் நாம் கண்ட கனவும், நன்னிமித்தமும் பழு தாகுமோ? அறம் வெல்லும், பாவம் தோற்கும், என்னும் உண்மை பொய்க்குமோ? அண்டர் நாயகனான இராமனது வீரத்தன்மையை அயர்க்கலாமோ? அழியாப் பொருளாய அப்பெருமானுக்கு அழிவும் நேருமோ?

"கண்டனகனவும் பெற்றநிமித்தமும், நினது கற்பும்
தண்டவாளரக்கர் பாவச்செய்கையும், தருமந்தாங்கும்
அண்டர்நாயன்றன் வீரத்தன்மையும், அயர்க்கலாமோ
புண்டரீகற்கு முண்டோ இறுதியிப் புலையர்க்கல்லால்".

வீரன் இறப்பானாயின் அண்டகோளம் பிளக்கும்அன்றோ? ஆதவனும் நிலைகுலையுமன்றோ? அயனது படையின் வலி மையால் வீரர் அனைவரும் மயங்கினரேயல்லால் மாண்டா ரல்லர். இம்மயக்கம் தீர்ந்து இன்னும் இறைப் பொழுதில் எழுவார்கள். ஆதலால் மனம் வருந்தாதே" என்று திரு மகளைத் தேற்றினாள். அப்பொழுது சீதையும் சிறிது சிந் தித்து, அன்பு நிறைந்த தோழியை நோக்கி,

"அன்னை நீ உரைத்ததொன்று
மழிந்திலதாதலானே
உன்னையே தெய்வமாக்கொண்டு
இத்தனை காலம் உய்ந்தேன்
இன்னம் இவ்விரவு முற்றுமிருக்கின்றேன்
இறத்தல் என்பால்
முன்னமே முடிந்ததன்றே என்றனள்
முளரிநீத்தாள்".

ஒரு சடையும் திரிசடையும்.

"அன்னையே! இதுகாறும் நீ சொல்லியவெல்லாம் பொய்யாது சொல்லியவாறே நிகழ்ந்திருக்கின்றன. ஆதலால் உன்னையே தெய்வமாகக்கொண்டு என் நாயகனைப் பிரிந்த இத்தனை காலமும் வாழ்ந்து வந்தேன். இன்னும் உனது உறுதிமொழியைநம்பி இவ்விரவுமுற்றும் உயிர்தாங்கி இருக்கின்றேன்" என்று சோகம் நிறைந்த சொற்களால் மாற்றம்உரைத்தாள். அந்நிலையில் சோகத்தாளாய சீதையை மீண்டும் விமானம் ஏற்றி அசோகவனத்திற் கொண்டு சேர்த்தார்கள்.

அப்பால் அநுமன் மருத்துமாமலை எடுத்து வந்தபோது மறையோன் படையால் மயங்கிய வீரர் எல்லாம் முன்போல எழுந்து ஆரவாரித்தனர். இப்பேரொலியைக் கேட்டபோது கதிரவன் வரவு கண்ட தாமரைபோன்று திருமகள் அகமும் முகமும் மலர்ந்தாள். பகைவரெல்லாம் சிதைந்து ஒழிந்தனர் என்று செம்மாந்து, மதுவும் மதுரகீதமும் மாந்தி மயங்கிய இலங்கை மன்னனும் மற்றைய அரக்கரும் காலைக்குமுதம் போன்று கூம்பினார்கள்.

"ஆடலும் களியின்வந்த அமலையும்
அமிழ்தின் ஆன்ற
பாடலும் முழவின்தெய்வப் பாணியும்
பவளவாயர்
ஊடலும் கடைக்கண்நோக்கும் மழலை
வெவ்வுரையுமெல்லாம்
வாடன் மென்மலரேஒத்த ஆர்ப்பொலி
வருதலோடும்."

என்று கவி கூறுமாறு அரக்கரது ஆர்ப்பவிந்து ஒழிந்தது. முன்போலவே இப்பொழுதும் கன்னியின் சொல் அழியாமைகண்டு சீதை மனங்களித்து நாயகனைக் காணலாம் என்னும் காதலால் ஆவிகாத்து அமைந்தாள். இவ்வாறு

தனக்குத்தோழியாயமைந்த கன்னியை அன்னையாகவும், காக்கும் தெய்வமாகவும்கொண்டு சீதை புனையா ஓவியம் போல இலங்கையில் உயிர் வாழ்ந்தாள்.

இலங்கைப்போரில் அளவிறந்த அரக்கரும் மேகநாதனும் இராவணனும்,மடிந்தபின்னர் சீதையைச் சிறையினின்றும் அழைத்துவருமாறு இராமன் அனுமனை அனுப்பினன். சீதை செந்தீயின் மூழ்கித்தன் மாசற்ற கற்பின் பெருமையை உலகெலாம் அறியுமாறு விளக்கி, அஞ்சன வண்ணனை தன் ஆருயிர் நாயகனோடு அயோத்திமாநகரம் போகப் புறப்பட்டபோது இலங்கைக் கன்னியாயதோழியைஇனிது நோக்கி "அன்னையே! இந்நகரில் இணையற்ற அணங்காக என்றும் வாழ்வாயாக" என்று மையறு மனத்தால் வாழ்த்திப் பிரியாவிடைபெற்றுப் போயினள்.

செல்வத்தால் இலங்கிய இலங்கைமாநகரில் தந்தையாய விபீஷணன் மன்னனாய் விளங்கக் கனிந்த மனமுடைய கன்னி, செந்தாமரைச் செல்வியாய சீதையைச் சிந்தையில் அமைத்து, ஒரு சடையாய்த் தவம்செய்த திருமகளைக்காத்த திரிசடைஎன்று உலகோர் போற்ற இலங்கையணங்காக எந்நாளும் இனிது வாழ்ந்தாள்.

# கர்ணனும் கும்பகர்ணனும்.

தொன்று தொட்டு நன்றிமறவாமையை நன்னெறியாகக்கடைப்பிடித்த நாடுகளில் தமிழ்நாடு தலைசிறந்து விளங்குகின்றது. நன்றிமறப்பது நன்றன்று என்றும்

நன்றல்லதை அன்றே மறப்பது நன்று என்றும் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகின்றது. இன்னும் காலத்தி ஞற் செய்தநன்றி சிறிதாயினும் அது ஞாலத்தின் மாணப் பெரிது என்றும், தினைத்துணை நன்றிசெயினும் பனைத் துணையாய்க் கொள்ளுதலே பண்புடைமையாகும் என்றும், அறநூல்கள் நன்றியின் பெருமையை நயம்படக் கூறுகின் றன. ஒருவன் இயற்றும் ஐம்பெரும் பாதகங்களால் வரும் பாவத்தையும் அகற்றவல்ல கழுவாய் உண்டென்றும், நன்றி கொன்ற பாவத்தை எவ்வாற்ருனும் நீக்க இயலாதென்றும் நீதி நூல்கள் பசுமரத்தாணிபோல் நம்மனத்திற் பதிக்கின் றன.

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று நாயனர் கூறிய அறவுரை பொன்போல் போற்றத் தக்கதாகும். இக்குறளில் அடங்கிய கருத்தை விரித்துரைக் கப்போந்த கல்வியிற் பெரியராய கம்பர்,

"சிதைவகல் காதல் தாயைத்
தந்தையை, குருவை, தெய்வப்
பதவி அந்தணரை, ஆவை
பாலரைப் பாவைமாரை,
வதைபுரிகுநற்கும் உண்டாம்
மாற்றலா மாற்றல், மாயா
உதவி கொன்ருர்க்கு என்றேனும்
ஒழிக்கலாம் உபாயமுண்டோ"

என்று நன்றியின் பெருமையை நன்கெடுத்துரைத்தார். முன்னறி தெய்வமாய தாயையும் தந்தையையும், அறியாமை யை அகற்றும் ஆசானையும், அறம் திறம்பாத அந்தணரை யும், பயன் உவந்தளிக்கும் பசுவையும், பாவம் ஒன்ற றியாப் பாலரையும், மெல்லியலாராய மாதரையும், கொலை

புரியும் கொடியருக்கும் அறநூல்கள் கழுவாயமைத்துள்ளன. ஆனால் செய்நன்றியைச் சிதைத்தோர்க்கு எஞ்ஞான்றும் உய்யும் வழியில்லை என்று கவி நாயகராய கம்பர் போற்றி உரைத்த பொருள்நயம் ஆராய்தற்குரியதாகும். முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாட்சுமந்து அந்திபகலாய் இறைவனை வந்தித்துப் பெற்றெடுத்த அன்னையைக்கொன்ற அரும்பாவமும் அகன்றுவிடும். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று தக்கோர்போற்றும் பெருமைவாய்ந்த பிதாவைக் கொன்ற பிழையும் தீர்ந்துவிடும். இருமுது குரவர்க்கும் அடுத்த நிலையில் அமைந்து, அஞ்ஞான இருளகற்றும் ஆசிரியரைக் கொன்ற பாவமும் அகன்றுவிடும். மண்ணுலகில் வாழும் எல்லா உயிர்களிடத்தும் இன்ப அன்பு பூண்டு அறநெறியில் நிற்கும் அந்தணரைக்கொன்ற அரும்பாவமும் அகன்றுவிடும். மண்ணுலகில் வாழும் மக்கட்கெல்லாம் பிறக்கும் நாள்முதல் இறக்கும்நாள்வரை அறந்தருநெஞ்சோடு அருள்சுரந்து அமுதளிக்கும் ஆவைக்கொன்ற பாவமும் அகன்றுவிடும். இளநலம் மாறாத இளம்பாலரையும் மெல்லியல்வாய்ந்த மாதரையும் கொன்ற கொடும் பாவமும் குறைந்து ஒழிந்துவிடும். ஆனால் செய்தநன்றியை மறந்தோர் எக்காலத்தும் எவ்வாற்றானும் அப்பாவத்தினின்றும் தப்பிப் பிழைத்தல் இயலாததாகும் என்று நாயனார் சுருங்கச்சொல்லிய கருத்தை கம்பர் விரித்துரைத்து விளங்கவைத்தார். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்றும், 'உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்தல் ஆகா' தென்றும், தமிழ்நாட்டில் வழங்கிவருகின்ற பழமொழிகளே, இந்நல்லறம் இங்கு நெடுங்காலமாகப் போற்றப்பட்டு வந்ததென்பதற்குப் போதியசான்றாகும்.

செய்ந்நன்றி அறிதலென்னுஞ் செம்மைசான்ற தொல்லறம் அங்கநாட்டு அரசனாய கர்ணன் இடமும், இலங்கை

நாட்டு வீரனுன கும்பகர்ணன் இடமும், தலைசிறந்து விளங்கக்காணலாம். கர்ணன் கன்னியாயிருந்த குந்திதேவியின் மைந்தனுய்த் தோன்றினுன். கன்னிப் பருவத்திற் பிறந்த மைந்தனையும் அவனை உயிர்த்த அன்னையாய தன்னையும் உலகோர் பழிப்பர் என்றுன்னி அழகிய மைந்தனை ஓர் பேழையில் அடைத்து ஆற்றிலிட்டாள். ஆதரவற்று ஆற்றில் மிதந்துவந்த மைந்தன் ஒரு தேர்ப்பாகன் கையிற்சேர்ந்து அவர் மனையில் வளர்பிறைபோன்று வளர்ந்துவந்தான். இளமையிலேயே வீரமும் அழகும் வாய்ந்து விளங்கிய கர்ணனை பெற்றோரை அறியாப்பிள்ளை என்று இகழாது,

“கற்றவர்க்கும் நலனிறைந்த
கன்னியர்க்கும் வண்மைகை
உற்றவர்க்கும் வீரரென்று
உயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கும் உண்மையான
கோதில் ஞான சரிதராம்
நற்றவர்க்கும் ஒன்று சாதி
நன்மைதீமை இல்லையால்”

என்றவாறு துரியோதனன் அவ்வீரனை எவரும் இகழாவண்ணம் அங்கநாட்டுக்கு அரசனுக்கித் தன் ஆருயிர்த் துணைவனுய் அமைத்தான். தன் தம்பியரும் சுற்றமும் அவன் அடிவணங்குதற்குரிய தோற்றமும் ஏற்றமும் அளித்தான். இவ்வாறு ஆதரவற்று ஆற்றில் மிதந்துவந்த ஒருவனை அன்போடு வளர்த்து அரசுரிமையும் அளித்து, அயலார் நகையாதவாறு அரும் பதம் நல்கிய அரசன் செய்த நன்றியைக் கர்ணன் அருமையாய்ப் போற்றினுன் என்பது இனிது அறியப்படுகின்றது. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் கடும்போர் நிகழும் என்றறிந்த கண்ணன், அறநெறி துறந்த மாற்ருரது படையில் ஒப்புயர்

வற்ற வீரனுய்க் கர்ணன் விளங்கக் கண்டான். பாண்டவர் ஐவரும் அவனது படைவலிக்குஆற்ருர் என்றறிந்து, குந்தி தேவியைக் கர்ணன்பாலனுப்பி அவ்வீரனது வரலாற்றை அறிவித்து அங்கர்பிரானை ஐவரொடும் சேர்க்கவிரும்பினுன். அவ்வாறே குந்திதேவியை அழைத்து கர்ணனது மாளிகைக்கு அனுப்பினுன். வீரனும் குந்திதேவியை அன்பிஞல் இன்புற வணங்கி ஆசனத்தமர்த்தினுன். அப்போது குந்தி தன் மைந்தனைக் குழைந்து நோக்கி 'ஐயனே, யானே உன்னை ஈன்ற அன்னை; கதிரவன் அருளால் என்பால் நீ பிறந்தனை. பழியஞ்சி உன்னைப் பேழையில் விடுத்தேன். என்றுரைத்துப் பால்சோரநின்ருள். கர்ணனும் குந்தியைத் தன் அன்னை என்று ஐயமற அறிந்தான். அந்நிலையில், அன்னை, அங்க நாட்டரசனுய தன் மைந்தனை அன்போடு அணைத்து பொன்முடி மோந்து, ஐயனே உன்னை அருமையாய் வளர்த்தெடுகக அருந்தவம் செய்திலேன். ஆயினும்

"வருக என்மதலாய், இளைஞர் ஐவரும்நின்
மலரடி அன்பிஞல் வணங்கும்
உரிமையான் மனம் ஒத்து ஏவலேபுரிய
ஒருதனிச் செய்யகோ லோச்சி
அரசெலாம் வந்துன் கடைத்தலைவணங்க
ஆண்மையும் செல்வமும் விளங்கக்
குருகுலாதிபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கடனெனக் குறித்தாள்"

என்று கவிகூறும் வண்ணம், 'என் மைந்தனே வருக, உன் தம்பியர் ஐவரும் அன்பிஞல் வணங்கி ஆட்செய்ய நீயே அரசனுய் அமர்ந்து ஆண்மையும் செல்வமும் விளங்கச் செங்கோல் செலுத்துவது முறையாகும், என்று தாய் தன் சேய்க்குரைக்கும் முறையில் மொழிந்தாள்.

"தாயிற்சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்னும் அமுத வாக்கைக் கர்ணன் நன்கு அறிந்தவனே ஆயினும் சுயோதனன் தனக்குச்செய்த பெருநன்றியை மறந்து அன்னையின் உரைவழி நடக்க இசையானாயினான்.

"திடம்படுத்திடுவேல் இராச ராசனுக்கு
செருமுனைச்சென்று செஞ்சோற்றுக்
கடன்கழிப்பதுவே எனக்கு இனிப்புகழும்
கருமமும் தருமமும் என்றான்"

எனக்கு நன்றிசெய்த மன்னனுக்காக அமர்க்களத்திற் சென்று போர்புரிவதே அறமும் புகழும் ஆகும். அவன் உணவையுண்டு வளர்ந்த யான் செஞ்சோற்றுக் கடன் கழியாது என்தம்பியராய பகைவருடன் சேரேன் என்று கர்ணன் எடுத்துரைத்த வீரமொழிகளில் அவனது நன்றி மறவா நலத்தினை நன்கு காணலாம். பாண்டவர் ஐவரும் தன் தம்பியர் என்றும் கருதாது, தாய்மொழியைத் தலைமேற் கொள்ளுதலே தக்கதென்றும் எண்ணாது, செய்ந்நன்றி யறிதலே செம்மைசான்ற அறம் எனத் துணிந்து, அவ்வறநெறியில் நின்று அமர்க்களத்தில் ஆவிதுறந்த கர்ணனது அருங்குணம் போற்றுதற்குரியதாகும்.

இவ்வாறே இலங்கை வேந்தனது தம்பியாய்த் தோன்றிய கும்பகர்ணன், வரத்திலும் வலிமையிலும் சிறந்து விளங்கினான். கூற்றையும் ஆடல்கொண்ட கொற்றம்வாய்ந்த அவ்வீரன் அறநெறியில் நிற்கும் இயல் அமைந்துவிளங்கினான். அயோத்திமன்னனது மனையாளாய சீதையைஇலங்கை நாதன் கவர்ந்து சிறைசெய்தது அடாதசெயல் என்று அவனிடம்எடுத்துரைத்தான். பிறன்மனை நயந்த தமையனது காதல் தவறு என்று இடித்துரைத்து அவனைத் திருத்த முயன்றான். ஆயினும், தீராக் காதல்கொண்ட தமையனைத்

திருத்துதல் இயலாதென்றறிந்தபோது, அவனுக்குத் துணையாய் அமர்புரிந்து ஆவிதுறப்பதே ஏற்றதாகும் என்றெண்ணிப் போர்க்களம் புகுந்தான். கும்பகர்ணனது அருளையும் ஆற்றலையும் அறிந்த இராமன், அவ்வீரனைத் தன்பால் இழுத்துக்கொள்ளுமாறு விபீஷணனை அனுப்பினான். அவனும் கும்பகர்ணனை அடைந்து, அடிபணிந்து, 'ஐயனே, எனக்கு இன்னருள் சுரந்த இராம வீரன் உனக்கும் அபயம் அளிப்பான்; மருளுறுபிறவி நோய்க்கும் மருந்தாய் அமைவான்; எனக்கு அவன் தந்த இலங்கை அரசும் செல்வமும் உனக்கு யான் தருவேன்; ஆதலால் தீவினை புரியும் தமையனைத் துறந்து அறநெறியாய இராமனைச் சேர்தலே அறிவுடைய உனக்கு அழகாகும்' என்று நீதியின் நீர்மையை எடுத்துரைத்தான். இதைக்கேட்ட கும்பகர்ணன் மனம்வருந்தி, தம்பியைநோக்கி, "ஐய, நீரில் குமிழிபோல் நிலையற்றதாய இவ்வுலகவாழ்வை விரும்பி இராவணன் எனக்குச்செய்த பெருநன்றியை மறப்பேனோ? நெடுநாளாக என்னை வளர்த்துப் போர்க்கோலம்செய்து இங்கனுப்பிய இலங்கைநாதனுக்கு உயிர்கொடாது பகைவர்பால் போவேனோ? இலங்கையின் இருநிதியை விரும்பி என் தமையனது உயிரைவாங்கும் பகைவனைப் பணிந்து இரந்து புவிபெற்று இருத்தல் எனக்கு ஏற்றதன்று நீ சொல்லிய நீதிமுறையனைத்தும் உனக்குத் தக்கதேயாம். புலிப்புறு மரணம் எய்தலே எனக்குப் புகழாகும்" என்று வீரமொழி புகன்று, தம்பிக்கு விடைகொடுத்து அனுப்பினான். தன் தமையன் தகாதசெயல் செய்து நெடும்பகை தேடினான் என்று நன்றாய் அறிந்திருந்தும், இராமவீரனது இணையற்ற கணையால் தான் ஆவிதுறப்பது திண்ணம் என்று தெரிந்திருந்தும், ஆவியையும் அளவிறந்த செல்வத்தையும் வெறுத்து, தமையன்பொருட்டு உயிர் துறந்த வீர

னது உளப்பான்மை வியந்து போற்றுதற்குரியதாகும். ஆகவே கர்ணனும் கும்பகர்ணனும் செய்ந்நன்றி யறிதலாய அறத்தை ஆவியினும் அருமையாய் ஆதரித்த ஆன்றோர் என்பது இனிதுணரப்படும்.

# செவிச்சுவையும் கவிச்சுவையும்.

இவ்வுலகில் இன்பத்தை நாடுவது உயிர்களின் இயல்பாகும். ஐம்பொறிகளாலும் உலகப் பொருள்களை ஆரத் துய்த்தலே இன்பம் என்று கருதி அமையும் மக்கள் பெரும்பாலர் ஆவர். ஆயினும் ஐம்புலன்களால் வரும் இன்பத்தினும் அறிவினால் நுகரும் இன்பமே சாலச் சிறந்ததென்று அறிந்தோர் கூறுகின்றார்கள். இவ்வாறு அறிவினால் நுகரப்படும் அருங்கலைகளுள் செஞ்சொற் கவிதையே செவ்விய இன்பம் பயப்பதாகும் என்பது செவிச்சுவையுடைய செல்வர் கருத்தாகும்.

அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் செஞ்சொற் கவிசெய்து அழியாப் புகழ்பெற்ற கவிகள் பலராய் விளங்குகின்றார்கள். இத்தகைய கவிகள் தாம் இன்புறும் கவிநலத்தால் பிறரும் இன்புறக்கண்டு மனம் களிப்பர். இத்தன்மைவாய்ந்த கவிகளில் கல்வியிற் பெரிய கம்பரது கவிச்சுவையை ஈண்டு ஆராய்வோம்.

கம்பர் பெருமானது உள்ளம் செஞ்சொற் கவிகளால் ஆயகலைகளில் ஆழ்ந்து தாழ்ந்து ஆனந்தத் தேன் சொரியும் அழகிய கவிச்சுவையை மாந்திக்களித்துத் திளைத்து ஆரா

வின்பம் நுகரும் தன்மையை அவரது திருவாக்காலேயே அறிகின்ேறாம். இயற்கை அழகுவாய்ந்த பொருள்களும் செயற்கை அழகுவாய்ந்த பொருள்களும், கம்பரது உள்ளத்தில் கவிமயமாகவே விளங்குகின்றன. ஓவியத்தில் எழுதவொண்ணு வுருவமைந்த திருமகளாய சீதை கன்னி மாடத்தின்மீது இலங்கிய எழில் நலத்தை எழுதப்போந்த இக் கவிஞர், பொன்னின் நிறமும் பூவின்மணமும், தேனின் சுவையும் கவியின் இன்பமும்போல அம்மங்கை இலங்கினுள் என்றுரைத்த நயம் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

"பொன்னின்சோதி, போதினில் நாற்றம் பொலிவேபோல்
தென்னுண் தேனில் தீஞ்சுவை செஞ்சொற்கவி இன்பம்
கன்னிம் மாடத்தும்பரின்மாடே களிபேடோடு
அன்னம் ஆடுமுன் துறை கண்டங்கயல் நின்ருர்."

என்று கம்பர் அருளிய கவி, தமிழ் நயமறி புலவர்க்கு நல் விருந்தாகும். கன்னிமாடத்தின் மீது பொன் போலவும் போது போலவும், தேன்போலவும் திருமகள் திகழ்ந்தாள். என்றுரைத்த கம்பர், இம் மூன்றுக்கும் சிகரமாகக் கவியின்பத்தை அமைத்துப்போந்தார். கண்டறியும் புலனுக்கு இன்பம் பயக்கும் இனிய நிறத்தினும், உயிர்த்தறியும் புலனுக்கு இன்பம் பயக்கும் நல் மணத்தினும், உண்டறியும் புலனுக்கு இன்பம் பயக்கும் நறுஞ்சுவையினும், சிந்தைக்கு இன்பம் பயக்கும் செஞ்சொற்கவியே சிறந்ததென்று கம்பர் பெருமான் இனி தெடுத்துரைத்தார். இவ்வுலகில் ஐம்புலங்களால் நுகரப்படும் இன்பமே இத்தகையதென எடுத்துரைக்க இயலாதாயின், அறிவினல் துய்க்கப் பெறும் ஆனந்தத்தை எவ்வாறுரைக்க இயலும்? புலன்களால் நுகரும் பொருள்களை ஒருவாறு உவமைகளால் உணர்த்தலாமாயினும், அறிவினல் நுகரும் இன்பத்தை எவ்வாற்ருனும் உணர்த்த இயலாது. இதனலேயே பொன்

போன்ற நிறம் என்றும், மலர்போன்ற மணம் என்றும், தேன் போன்ற சுவை என்றும் ஒவ்வொன்றுக்கும் உவமை கூறிய கம்பர், கவி இன்பத்திற்கு யாதும் உவமை கூறாராயினர்.

எண்ணரிய நலம்வாய்ந்த பெண்ணால் எழுந்த பேரின்பம் செஞ்சொற் கவியால் உள்ளத்தே எழுகின்ற உலப்பிலா இன்பத்தை ஒப்பதாகும், என்று உவமித்த கம்பரது மனப்பான்மை கவிநலம் துய்த்துத் திளைத்த கற்றோர்க்கே விளங்குவதாகும்.

இன்னும் வளமார்ந்த மலையிலே பிறந்து, மருதநிலத்தே தவழ்ந்து, அகன்று குழைந்து அழகிய ஒழுக்குடையதாய் விளங்கிய கோதாவிரியைக்கண்ட கம்பரது உள்ளம் அதனை ஆன்றோர் கவியினுக்கு ஒப்பிடும் அழகு அறிந்து போற்றுதற்குரியதாகும்.

"புவியினுக்கு அணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறியளாவி
சவியுறத்தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவி சான்றோர்
கவியெனக்கிடந்த கோதாவிரியினை
வீரர்கண்டார்"

என்பது கம்பர் கவியாகும். நிலமகளுக்கோர் நல்லணியாய்த் திகழ்ந்த கோதாவிரி யாறு, உலகில் ஒப்பற்ற அணியாய் இலங்கும் ஆன்றோர் கவிபோல் அமைந்து விளங்கிற்று. மலையினடப் பிறக்கும் விலையற்ற மணியையும் மற்றைய பொருளையும் நாட்டில் வழங்கும் நதி, உயிர்க்குறுதி பயக்கும் அரும்பெரும் பொருள்களை விரித்துரைக்

கும் விழுமிய கவிபோல் விளங்கிற்று. வளம் நிறைந்த விளைபுலங்களின்வழியாய்ச் சென்று வளம்படுத்திய அவ் விரிந்த ஆறு, கலைவளம் நிறைந்த அறிவின் வழிச்சென்று அதனைவளம்படுத்தும் ஆன்றோர் கவிபோல் அமைந்தது. அரும் பாவத்தையும் அகற்றவல்ல பல துறைகளோடுவிளங் கிய அந்நதி, அகத்துறை, புறத்துறைகளோடு பொலிவுறும் தமிழ்க்கவியின் தன்மைபோலத் திகழ்ந்தது. ஐவகை நிலத் தின் வழியாய்ச்சென்ற அழகியநதி ஐந்திணைநெறியைத் தழுவிச்செல்லும் தமிழ்க்கவியின் தன்மைபோல் விளங் கிற்று. அவ்வாற்றில் கலங்காது சென்ற தெள்ளிய நீரின் தன்மை, சொல்லும் பொருளும் தெளிந்த சான்றோர் கவி யின் சீலத்தை நிகர்த்தது. இன்னும் அந்நதியின் நேரிய ஒழுக்கும்செவ்விய தண்மையும் ஆன்றோர் கவியில் அமைந்த ஒழுக்க நெறியையும் உயரிய அருளையும் ஒத்து விளங்கிற்று. இவ்வாறு இயற்கையில் இனிதாய் இலங்கிய கோதாவிரி யைக்கண்ட கம்பரது உள்ளம், கனிந்த கவிநலம் நுகர்ந்த உள்ளம்போல் களித்து இன்புற்ற தன்மை இதனால் இனிது அறியப்படும்.

இனி, இராமவீரனது தூணியின் தன்மை கூறப் போந்த கம்பர், அதனை நல்லியற் கவிஞரது நாவினுக்கு உவமை கூறும் நயம் உயரிய இன்பம் தருவதாகும். போர்க் கோலம் புனையப்போந்த வீரன்.

> **"நல்லியல் நவையறு கவிஞர் நாவரும்**
> **சொல்லெனத் தொலைவிலாத்தூணி தூக்கினன்"**

என்று கவியரசர் கூறி மகிழ்ந்தார். எடுக்கக்குறையாத இராமன் தூணியை கொடுக்கக்குறையாத கவிஞரது நாவி னுக்கும், அத்தூணியில் அமைந்த செஞ்சரங்களைக் கவிஞர் நாவிலமைந்த செஞ் சொற்களுக்கும், உவமை கூறிய நயம்

அறிந்து உவத்தற்குரியதாகும். இத்தகைய அம்புகள் ஒன்றன்பின் ஒன்றாய் ஒல்லென ஒலித்து அணி அணியாய்ப் படர்ந்து சென்று, கருதிய குறியைத் தவறாது தாக்கும் தன்மையை, செஞ்சொற்கவியின் சீலத்திற்கு உவமைகூறிய நயம் சிந்திக்கத்தக்கதாகும்.

> "நல்லியற் கவிஞர் நாவில் பொருள்குறித்து
> அமர்ந்த நாமச்
> சொல்லென, செய்யுட்கொண்ட
> தொடையென, தொடையை நீக்கி
> எல்லையில் செல்வம் தீரா
> இசையெனப் பழுதிலாத
> பல் அலங்காரப் பண்பே
> காகுத்தன் பகழிமாதோ"

என்பது கம்பர் கவியாகும். வேதம் தப்பியபோதும் குறி தப்பாத இராமனது வில்லம்புகளை, காத்தல் அரிதாய கவிஞரது சொல் அம்புகளோடு உவமித்த நயம் உள்ளத்தைக் கவர்வதாகும். இனி ஒன்றன்பின் ஒன்றாய் முறைபிறழாது நேர்மையாய்ச்சென்ற வீரனது அம்புகள் ஒரு கவியின் பின் மற்றொரு கவியாய் முறைபிறழாது செவ்விய தொடராய்ச்செல்லும் கவிநடைபோல் விளங்கிற்று. இன்னும் ஒல்லென ஒலித்துச்சென்ற இராமபாணத்தின் இன்னொலி இன்பம், செஞ்சொற்கவிதையின் இழுமென் மொழியால் எழும் இனிய ஒலி இன்பத்தை நிகர்த்தது. செஞ்சுடர் போல் பொலிவுற்றுக்கண்டோர் மனத்தைக் கவரும்தன்மை வாய்ந்து பரந்துசென்ற அம்புகள், பலவகை அணிகளோடு திகழ்ந்து கற்றோர் மனத்தைக்கவரும் கவியின் தன்மை போல்காணப்பட்டது. இவ்வாறு இராமனது வில் அம்பைப் புலவரது சொல் அம்போடு உவமித்த நயம கம்பரது நலம் சான்ற மனப்பான்மையை நன்கு உணர்த்துவதாகும்.

ஆகவே, பெண்ணருங்கலமாய் விளங்கிய திருமகளைக் கண்டபோதும், கண்ணிணைக்கவரும் அழகுவாய்ந்து விளங்கிய கோதாவிரியைக் கண்டபோதும், எல்லையற்றதுபோல் அமைந்த இராமனது தூணியையும் அம்புகள் செல்லும் அழகினையும் அறிந்தபோதும், கம்பரது உள்ளம், கவிநலம் தூய்த்த உள்ளம்போல் களித்து மகிழ்ந்து ஆரா இன்பத்திலழுந்தும் தன்மையை இதனால் நன்கு அறிகின்றோம். அழகியபொருள்களைக்காண்பதே ஆனந்தம் என்று ஓர் ஆங்கிலக் கவிஞர் ஆராய்ந்தெழுதிப் போந்தார். இத்தகைய அழகிய பொருள்களால் வரும் இன்பத்தை அறிவினால் நுகர்தல் சாலுமே அன்றிச் சொற்களால் எடுத்துரைத்தல் இயலாததாகும். ஐம்புலன்களால் அறியும் தொறும் அளவிலா ஆனந்தம் அளிக்கும் அழகிய பொருள்களை நவில் தொறும் நயம் விளைத்து உரைகுறுக ஓங்கி நிமிரும் நல்லியற்கவி இன்பத்தொடு ஒப்பிடும் பான்மை உயரிய கவிஞருக்கே இயல்வதாகும்.

இவ்வாறு கம்பர் அமைத்த உவமைகளால் தனிநலம் சான்ற தமிழ்க்கவிதையின் தன்மை இனிது இலங்குவதாகும். இயற்கவிஞரது நாவில் இயல்பாகவரும் இனிய சொற்களால் அமைந்த கவியே இன்பம் பயப்பதாமன்றி, இருந்து இடருற்றுச் சொற்களை வலிந்து வருவித்து, சீரும் அடியும் சிதையாது அமைத்து காரிகைக் கேற்பக் கவியிணையாக்கும் எளியகவிஞரது கவிதையால் உயரிய இன்பம் அடைதல் இயலாதென்னும் உண்மை இனிதறியப்படும். இன்னும் விழுமிய ஒழுக்க நெறியை இனிய மொழிகளால் எடுத்துரைப்பதே தமிழ்க் கவிஞரின் உயரிய நோக்கம் என்பதும் கம்பரது உவமையில் கனிந்து இலங்கக் காணலாம். ஆகவே இழுமென் மொழியால் விழுமியதுகூறலே தமிழ்க் கவியின் தன்மை

என்று ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியனார் அமைத்த இலக்கணத்திற்குக், கம்பரது உவமைகள் சான்று தருவது அறிந்து போற்றுதற் குரியதாகும்.

# செஞ்சொற் சதங்கை

இவ்வுலகில் வழங்கும் மொழிகள் தனிமொழி யென்றும், கிளைமொழி யென்றும் இருவகைப்படும். இவற்றுள் தனிமொழியானது, மக்கள் தமது உளத்தில் ஊறிய கருத்துக்களை வெளிப்படுத்தும் பொருட்டு அமைத்து வழங்கும் சொற்களை தன்னகத்தேகொண்டு விளங்கும். ஆதலின், ஓர் தனிமொழியில் வழங்குஞ் சொற்களை நன்கு ஆராய்வோமானால் அம்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட மக்களது மனப்பான்மை செம்மையாய் அறியப்படும். இம்முறையில் நம் தமிழ் மொழியில் வழங்கும் சில செஞ்சொற்களை ஈண்டு எடுத்து ஆராய்வோம்.

தமிழ்மொழியின் உண்மைத் தன்மையை உணராதார் சிலர் அதன்கண் அவசியமின்றிப் பல சொற்கள் அமைந்து கிடக்கின்றன வென்றும், அவற்றை வழக்காற்றினின்றும் அகற்றி, செந்தமிழ் மொழியைச் செம்மைப்படுத்த வேண்டுமென்றும் கருதுகின்றார்கள். ஒரு மொழியில் ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல்லே போதியதாயிருப்ப பல சொற்கள் வழங்குவது தவறென்று அன்னார் கருதுகின்றார்கள். நமது தமிழ்மொழியில் ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களும், ஒரு பொருளின் பல நிலைமைகளைக் குறிக்கும் பல சொற்களும் அமைந்திருக்கக் காண

இன்றேம். இதற்குச்சான்றாக பூ வென்னும் அழகிய சொல்லின் தன்மையை உற்று நோக்குவாம். அரும்பு, முகை, போது, மலர், அலர் ஆகிய ஐந்து சொற்களும் பூவின் பல பருவங்களை உணர்த்துகின்றன வென்பது தமிழ் நயமுணர்ந்தார் கண்டறிந்த உண்மையாகும். நறு மணங் கமழும் ஓர் நந்தனவனத்திற் செல்வானொருவன் அங்கு பல திறப்பட்ட பருவமமைந்த மலர்களைக்கண்டு மகிழ்வான். அப்பூக்களிற் சில அரும்பாகவும், சில முகை யாகவும், சில போதாகவும், சில மலராகவும் இலங்கக் காண் பான். செடி கொடிகளில் அரும்பித் தோன்றி இலங்கும் முதற் பருவ நிலையே அரும்பு என்று அழைக்கப்பெறும். அரும்பே பூவின் முதற் பருவமென்பது.

"அரவின் வாயின் முள்ளெயிறேய்ப்ப அரும்பீன்று
குரவம் பாவை முருகமர் சோலைக் குற்றாலம்"

என்னும் ஞானசம்பந்தப்பெருமான் திருவாக்கால் நன்கு அறியப்படும். இத்தகைய 'அரும்பு' பொழுது செல்லச் செல்ல முதிரும் நிலையில் முகை யென்று பெயர்பெறும். முகையெனினும்மொட்டு எனினும் பொருள் ஒன்றேயாம். இம்முகை அவிழும் பருவத்தில் போது என்று பெயர் பெறும். போது மலரும் நிலையில் மலர் என்று பெயர் பெறும். நன்றாக மலர்ந்த மலர் அலர் என்று பெயர்பெறும். ஆகவே ஒரு பூவின் முதற் பருவம் அரும்பென்றும், இரண் டாம் பருவம் முகை யென்றும், மூன்றாம் பருவம் போது என்றும், நான்காம் பருவம் மலர் என்றும், ஐந்தாம் பருவம் அலர் என்றும் வழங்கக் காண்கின்றோம்.

இந்நயத்தை நமக்கு உணர்த்தக் கருதிய நாயனார்,

"காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந்நோய்"

அரும்பெனப்பட்டது. அவ்வரும்பு பொழுது செல்லச் செல்ல முகையாகி முதிர்ந்து தளையவிழும் நிலையில் போதெனப்பட்டது. மாலைப் பொழுதில் போது இதழ் விரிந்து மலர்தலால் மலரெனப்பட்டது. இவ்வுண்மையை அந்திப் பொழுதின் அழகைக் கூறப்போந்த சிலப்பதிகார ஆசிரியர்

"கூடினார் பால்நிழலாய், கூடார்பால் வெய்யதாய்
காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே-கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்கும் கங்குற்பொழுது"

என்னும் வெண்பாவின் ஈற்றடியில் விளங்க வைத்தார். வானத்தில் ஊர்ந்துசெல்லும் திங்கள், போதாய் நிற்கும் பூக்களை நெகிழ்த்து மலர்விக்கும் தன்மையை ஆசிரியர் அழகாய் அமைத்திருப்பது போற்றுதற்குரியதாகும். இவ்வாறு ஒரு பொருளின் பல நிலைகளைக் குறிப்பதற்குப் பல சொற்கள் இன்றியமையாதனவென்பது சொல்லாமலே அமையும்.

இனி ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்கள் ஒரு மொழியில் அமைந்திருப்பதன் அவசியத்தைச் சிறிது ஆராய்வோம். பாவகையிலேனும், உரை நடையிலேனும் ஓர் விழுமிய பொருளை உணர்த்தக் கருதும் அறிஞன் அப்பொருளை இனியசொற்களால் எழிலுற அமைத்து அவ்வழகினைக்கண்டு மகிழ்கின்றான். இவ்வுண்மை பழந்தமிழ் நூலாய தொல்காப்பியத்தில் "இழுமென் மொழியால் விழுமியது மொழிதல்" என்று வியந்து கூறப்படும் கட்டுரையால் இனிது விளங்கும். விழுமிய பொருளை விளங்கவுரைக்கக்கருதும் வினையினீங்கிய அறிஞன் அப்பொருளைச் செவிக்கின்பம் பயக்கும் செஞ்சொற்களால் அமைப்பான் என்பதே ஆசிரியர் கருத்தாகும். இவ்வாறு சொற்களை

அமைப்பதால் வருமின்பத்தைக் கம்பர் பெருமான் 'செஞ்சொற்கவி யின்பம்' என்று சிறப்பித்துப்போந்தார்.

"பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவே போல்
தென்னுண்தேனில் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"

என்னும் அழகிய சொற்கள் அளவிலா இன்பம்தருவனவாகும். இவ்வின்பம் பயத்தற்கு இடம்தெரிந்து சொற்களை அமைத்தல் இன்றியமையாததாகும். செஞ்சொற்களால் கவிமாடம் அமைக்கும் அருஞ்செயலை மேற்கொண்ட அறிஞனுக்கு எல்லா இடங்களிலும் அமைத்தற்கேற்ற பல சொற்கள் ஒரு மொழியில் அமைந்திருந்தால் அல்லது பொருந்திய சொற்களைத் தெரிந்தெடுத் தமைத்தல் இயலாதாகும். ஒரு மொழியில் ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல்லே அமைந்திருக்குமாயின் அச்சொல்லை ஆளும் முறையில் அது செவிக்கின்பம் பயவாது போதலும்கூடும். அவ்வாறின்றிப் பல சொற்கள் ஒரு பொருளையே குறித்து நிற்குமாயின் இடத்திற் கேற்ற சொல்லை இனிதெடுத் தமைத்து கற்போரது சிந்தைக்கும் செவிக்கும் அளவிலா இன்பம் அளித்தல்இயலும். இத்தகையசொல்லின்பம் தமிழ் நூல்களில் நிறைந்திருப்பதைச் செவிச்சுவையுடைய செல்வர் நன்கறிவார்கள். இனி இத்தகைய செஞ்சொற் புலவன் செவ்விய நூல்செய்யும் தன்மையைச் சிறிது ஆராய்வோம்.

இவ்வுலகில் அழகுறத் தோன்றும் பொருள்களை அறிஞர் பலவாருகப் போற்றி மகிழ்வர். இயற்கைத் தோற்றத்தின் இனிய அழகினை ஓவியப் புலவன் சித்திரத்தில் சிங்காரமாக அமைத்து மகிழ்வான். சிற்ப நூல்வல்லான் அவ்வழகினைச் சிலையில் எழிலுற அமைத்து இன்புறுவான். நல்லியற் கவிஞன் அவ்வழகினைச் செஞ்சொற்களில் அமைத்து மகிழ்வான். முன்னர்க் கூறிய ஓவியமும்

சிற்பமும் கண்களைக் கவர்ந்து மனத்திற்கு இன்பமூட்டு
கின்றன. ஆனால் கவியின்பம் செவியினைக்கவர்ந்து உளத்
திற்கு உவகை ஊட்டுகின்றது. இவ்வுண்மையைச் சிறிது
ஊன்றிச் சிந்திப்போமாயின் நல்லியற் கவிஞனது செயல்
நன்கு உணரப்படும். சிற்பநூல் வல்லானொருவன் முதலில்
பாறையினின்றும் ஓர் கல்லைப் பெயர்த்தெடுக்கின்றான்.
அப்பால் அக்கல்லில் தான் அமைக்கக் கருதும் வடிவத்
திற்கு வேண்டாத பாகங்களைப் பெயர்த்தெறிகின்றான்.
இவ்வாறு கல்லினின்றும் வடித்தெடுத்த உருவமே
வடிவம் (Form) எனப்படும். இவ்வடிவம் அழகுற அமைந்
திருக்குமேயாயின் அவ் வழகு வடிவு என்று வழங்கப்
பெறும்.

ஆகவே ஒரு கல்லினின்றும் சிற்பநூல் வல்லானால்
வடித்தெடுக்கப்பட்டு அழகுற இலங்கும் உருவமே வடிவு
என்று பெயர் பெறும். இத்தன்மையே கவிஞனிடத்தும்
அமைந்திருப்பதைக் காணலாம். கவிஞன் ஒரு மொழியி
னின்றும் செஞ்சொற்களை வடித்தெடுத்துப் படிப்பொருள்
ளத்தில் ஓர் வடிவை எழுதி அமைக்கின்றான். இத்தகைய
செஞ்சொற்களை வடித்த சொற்களென்று கற்றறிந்தோர்
வழங்குகின்றார்கள். வடித்த சொற்கள் எனவே வடியாச்
சொற்களும் உள்ளனவென்பது சொல்லாமலே அமையும்.
உலக வழக்கில் வடித்த சோறு, வடித்த தங்கம், வடித்த
எண்ணெய் என்று வழங்கக் காண்கின்றோம். இச் சொற்
களை ஆராயும்பொழுது, வடி என்னும் சொல்லின் உண்
மைத்தன்மை நன்குணரப்படும். கஞ்சி முதலிய வேண்டாத
பொருள்களோடு கலந்து நிற்கின்ற சோற்றை அவற்றி
னின்றும் பிரித்தெடுப்பதே வடித்தல் என்பதன் பொரு
ளாகும். அவ்வாறே மாசு மறுவோடு கலந்து நிற்கும்
பொன்னைப் புடம்வைத்துப் பிரித்தெடுக்கும் செயலே வடித்

தல் என்று சொல்லப்படும். அதுபோலவே கடுகு முதலிய மாசினின்றும் விலக்கி எடுக்கப்படும் எண்ணெய் வடி எண்ணெய் என்று வழங்கப்பெறும். உலக வழக்கில் வடி என்னும் பதம் இவ்வாறு அமைந்திருப்பது போலவே நூல் வழக்கிலும் பயிலக் காண்கின்றோம். காதலனாகிய கோவலனுக்கு மாதவி எழுதிய திருமுகத்தில்,

"என் வடியாக்கிளவி மனம் கொளல் வேண்டும்"

என்று சிலப்பதிகார ஆசிரியர் அமைத்திருப்பது சிந்தித்தற்குரியதாகும். "வடியாக்கிளவி" என்னும் சொற்றொடருக்கு உரையெழுதப்போந்த அடியார்க்கு நல்லார் "குற்றமறுத சொல்" என்று பொருள்கூறியிருப்பதும் ஈண்டு கருதுதற்குரியதாகும். ஆகவே குற்றமற்ற சொல்வடித்த சொல்லென்றும் குற்றமறுத சொல்வடியாச் சொல்லென்றும் அடியார்க்கு நல்லார் கருதுவதாகத் தெரிகின்றது. இத்தகைய வடித்த சொற்களே செஞ்சொற்களாமென்பதும், அச்செஞ்சொற்களாலாய சதங்கையே சீரிய இலக்கிய நூலாமென்பதும், செஞ்சொற் சதங்கையின் ஒலியே சிந்தைக்கும் செவிக்கும் அளவிலா இன்பம் பயப்பதாமென்பதும் இனிது உணரப்படும்.

# செந்தமிழ் நாடு.

இவ்வுலகில் முன்னணியில் நிற்கும் நன்னாடுகளெல்லாம் தமது தாய்மொழியைத் தலைக்கொண்டு போற்றுகின்றன. இத் தமிழ் நாட்டில் சில காலத்திற்கு முன்னர் அன்னிய மொழிகளில் பேசுவதும் எழுதுவதும் அறிவுடைமைக்கழகென்றும் தாய்மொழியைப் புறக்கணிப்பது தவறன்

37

றென்றும் விரிவிலா அறிவினர் கருதுவாராயினர். ஆயினும், இப்பொழுது அத்தகைய அறிவினைக் கொள்கைகள் அகன்று ஆர்வம் நிறைந்த தமிழ் மக்கள் [illegible] தலைப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மொழியின் நயமறிந்த கவிஞரும் அறிஞரும் அம்மொழி பயிலும் தமிழகத்தை அன்பு ததும்பும் இன்ப மொழிகளால் எழுதும் அழகு, பழந்தமிழ்நூல்களில் இலங்குகின்றது. தமிழ்மணங் கமழும் திருநாட்டில் அமைந்த மலையும் ஆறும் மந்தமாருதமும், கவிஞரது மனத்தில் தமிழ்மயமாகவே விளங்கித் தோன்றுகின்றன. என்றுமுள தென்தமிழை இயம்பி இசைகொண்ட திருமுனிவன் வாழும் தென்மலை தமிழ் மலையாகவே திகழ்கின்றது. வடதிசையினின்றும் இலங்கையை நாடிச்சென்ற வானர வீரரை நோக்கி,

> "தென்தமிழ் நாட்டகன் பொதியில்
> திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேருகிற்பீர்
> என்றும் அவன் உறைவிடமா மாதலினல்
> அம்மலையை இறைஞ்சி யேகி
> பொன்திணிந்த புனல்பெருகும் பொருனையெனும்
> திருநதி பின்பொழிய நாகக்
> கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமாம்
> நெடுவரையும் கடலும் காண்பீர்"

என்று வானரத் தலைவன் கூறும் மொழிகளில் கல்வியிற் பெரிய கம்பரது தமிழன்பு தலைசிறந்து விளங்குகின்றது. "தென் தமிழ்நாட்டில் அமைந்த அகன்ற பொதியிலில் அகத்திய முனிவன் அமர்ந்திருக்கின்ருன். அம்முனிவன் அமிழ்தினுமினிய தமிழ்மொழியை ஆதரித்து வளர்க்குமிடம் அதுவாதலின் வானரங்காள்! அம் மலையை வணங்கி அப்பாற்செல்லுக" என்று கவிகூறும் மொழி

களில் அவாது தமிழ் அன்பு கனிந்து இலங்குகின்றது. இன்னும் அத் தென்மலையிற் பிறந்து திருநெல்வேலி வழியாய்ச்சென்று வளப்படுத்தும் பொன்றுத பெருக்குடைய பொருனை என்னும் தமிழ் ஆற்றைப் "பொன் திணிந்த புனல்பெருகும் பொருனை எனும் திருநதி" என்று கவி அரசர் போற்றிப் புகழ்ந்தார்.

இவ்வாறே செந்தமிழ் மணங்கமழும் சிலப்பதிகாரம் செய்த சேரர்பெருமான் தமிழ்வளரும் மதுரைமாநகரின் ஆற்றையும் இளங் காற்றையும் தமிழ் மயமாகவே கண்டு திளைக்கின்றார். கண்ணகியும் கோவலனும், மாட மதுரையின் மருங்கு வந்தெய்தியபோது அங்கு எழுந்து வீசிய இளங்காற்றின் பெருமையை,

"மலையத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவில் பொருந்திய தென்றல்"

என்று இளங்கோவடிகள் இனிதெடுத்துரைத்தார். தென் தமிழ்பிறந்த தென்மலையிலேயேதென்றலும் பிறந்தது. தென் தமிழ் தவழ்ந்த தென்னவன் நகரிலேயே தென்றலும் தவழ்ந்தது. புலவர் நாவிலே பூத்து நிலைபெற்ற தென்மொழி போன்று தென்றலும் புலவர் பாடும் புகழமைந்து விளங்கிற்று. இத்தகைய தென்றல் காதலர் இருவரும் களிப்பெய்த வீசிற்றென்று கவி அமைத்த நயம் சாலவும் அழகியதாகும். பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே வளர்ந்து, சங்கத்திருப்பிலே இருந்த தமிழ்மொழிபோல் அவ்வினிய தென்றலும் தென்மலையிற் பிறந்து, தென்னவன் நாட்டில் தவழ்ந்து, சங்கப்புலவரது நாவிலே பொருந்தித் திகழ்வதாயிற்று. இத்தகைய மெல்லியதென்றலை, வேறுவகையாற் புகழாது "புலவர் நாவிற் பொருந்திய தென்றல்" என்று சேரமான் அமைத்த செம்மை தமிழ் நயம் அறிந்தோர்க்கு அளவிலா இன்பம் அளிப்பதாகும்.

இன்னும் வற்றாத நீரையுடைய வையை ஆற்றின் வண்மையைப் புகழப்போந்த புலவர் பெருமான்,

> "உலகு புரந்தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
> புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
> வையை என்ற பொய்யாக் குலக்கொடி"

என்று நிறைந்த சொற்களால் போற்றிப் புகழ்ந்தார். பல பொருள்களையும் விளைத்து உலகினைப் பாதுகாத்துப், பருவம் பொய்யாமையானும் வேற்று வேந்தர் அணுகாமையானும் தென்னர் குலக்குடியா யமைந்த வையை யாற்றைப் 'புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி' என்று புலவர் போற்றினர். இவ்வாறே வளவன் நாட்டை வளம்படுத்தும் பொன்னி யாற்றை சீத்தலைச் சாத்தனார், 'தண்டமிழ்ப் பாவை' என்று மணிமேகலையிற் போற்றிப் புகழ்ந்தார்.

> "பாடல்சால் சிறப்பில் பரதத் தோங்கிய
> கோடாச் செங்கோல் சோழர் தம் குலக்கொடி
> கோணிலை திரிந்து கோடை நீடினும்
> தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை"

என்று சாத்தனார் காவிரி ஆற்றைக் கனிந்து புனைந்தார். ஆகவே தமிழ்நாட்டின் ஆறும் மலையும் அருங் காற்றும் தமிழ்ப் புலவரது மனத்தில் அழகிய தமிழ் மயமாகவே திகழ்ந்து ஆராவின்பம் அளிக்கும் தன்மை இதனால் இனிதறியப்படும்.

இத்தகைய தலையாய அன்பு பிற்காலத்திய புலவரிடமும் பொருந்தித் திகழக் காணலாம். அருந் தமிழ்ச்சுவை கண்டு செந்தேன் சொரியும் செஞ்சொற்கவி செய்த பாரதியார், தமிழ்மொழி தவழும் இத்திருநாட்டைப் போற்றிப் புகழும் மொழிகள் புதியதோர் ஊக்கம் அளிப்பனவாம்.

இந்நாட்டிற்கு நல்லணியாய் இலங்கும், பெருந் தமிழ்ப் புலவரை வாழ்த்தப்போந்த இக்கவிஞர்,

"கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்
கம்பன்பிறந்த தமிழ்நாடு.
வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு —நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி
ஆரம்படைத்த தமிழ்நாடு.

என்று அன்பால் அமைத்த புகழ்மாலை, அறிஞர் நெஞ்சை அள்ளுகின்றது. இவ்வாறு தமிழ்நாட்டை வழிபடும் புலவரது தலையாய ஆர்வம் தமிழ்மொழி அன்பை அடிப்படையாகக்கொண்டு விளங்கும் தன்மை இனிதறியப்படும். தாய்மொழி அன்பே தாயக அன்பைத் தோற்றுவிப்பதாகும். தாய்மொழியைப் போற்றும் மக்கள் எல்லாம் தாய் நாட்டில் தலைசிறந்த பற்றுடையராய் விளங்குவார்கள். தாய்மொழிபேணும் ஊக்கமற்றோரது தாயகப்பற்று,வேரற்ற மரம்போல் வீழ்ந்தொழிவதாகும். இவ்வுண்மை பாரதியார் பாடலிலமைந்த மற்றிரண்டிகளால மாண்புற விளங்கித்தோன்றும்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று கவி, தான் உணர்ந்த கருத்தைக் கரவாது உரைத்தார். இனிமையும் அழகும் பொங்கித் ததும்பும் செந்தமிழ் வழங்கும் நாடு என்று சொல்லும்பொழுது தென்தமிழின் தீந்தேன் செவிகளில் விரைந்து பாய்ந்து நிரம்புகின்றது. அன்னையின் இனிமையும் அன்பும், செந்தமிழ்நாடு எனும்

பெயரில் அமைந்திருத்தலால், நம் செவியின் வாயிலாக இன்பத் தேன்வந்து பாய்வதாகும். இத்தமிழ் நாட்டில் வாழ்ந்த அறிஞர் இனிமையும் தமிழும் வேறென்றறிந்தா ரல்லர். தமிழ் எனும் பதத்திற்கே இனிமை என்னும் பொருள் அமைத்தார்கள். இத்தகையஇனிமை வாய்ந்த தமிழ் ஒலி, இன்னொலியாய் இன்ப ஒலியாய், ஆனந்தத் தேன் சொரியும் அழகிய ஒலியாய் இன்பம் பயப்பது இயல் பேயாகும். இவ்வாறின்றி இந்நாட்டைத் தந்தையா நாடென்று கருதும்பொழுது தந்தையின் மக்களாய்ப் பிறந்த நமது உரிமை முனைந்து மனத்தில் தோன்றுவதா கும். இவ்வுரிமைக் கருத்து உள்ளத்தைக் கவரும்பொழுது வீரம் கிளம்புகின்றது. தாயை அன்பின் உருவமாகவும் தந்தையை வீரத்தின் வடிவமாகவும் அமைத்துப் போற்று தல் தமிழ் வழக்காகும். இம்முறையில் தமிழ்நாட்டை தாய் நாடு என்று நினைக்கும்பொழுது அன்பினால் இன்பம் பிறக்கும். அன்றித் தந்தைநாடு என்று கருதும்பொழுது ஆண்மையால் வீரம் பிறக்கும். இவ்வுண்மையை அறிந்த மைத்த பாரதியார், முதலில் தாயன்பை அமைத்து அப் பால் தந்தையின் வீரத்தை அமைத்த முறை அறிந்து போற்றுதற்குரியதாகும். இறைவனை அம்மையப்பர் என்று தாய் வடிவாகவும், தந்தை வடிவாகவும் அமைத்து வணங் கும் வழிபாடும் இக்கருத்தையே வலியுறுத்துவதாகும். பாசங்களினின்றும் நீங்கிப் பேரின்பம்பெற விரும்பிய பெரியார், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று இறைவனை முதலில் அன்னையாகவே கருதி அகங் குழை வாராயினர். ஆகவே இத்தென் தமிழ்நாடு முதலில் எம் தாய்நாடு, அப்பால் எம் தந்தையர்நாடு. இதுவே உண்மைத் தொண்டராய் உழைக்கும் உயர்ந்தோர் உளப்பான்மையா கும்; மெய்யன்பு வாய்ந்த மேலோர் நிலையாகும்.

இத்தகைய செந்தமிழன்னையை நாம் போற்றுவது மெய்யாயின் அத்தாயின் அருந்தவ மக்களை ஆர்வத்தோடு போற்றவேண்டும். காவிய நயங்களெல்லாம் கனிந்தொழுகும் நூல்செய்த கம்பரை நாம் இன்னும் உரிய முறையில் போற்றவில்லை. தன்னேரிலாத தெள்ளுதமிழ்ப் புலவராய வள்ளுவரை இன்னும் தமிழ்நாடு தக்கமுறையில் வழிபடவில்லை. அருந்தமிழ்ச் செல்வமே பெரும்பொருட் செல்வத்தினும் சிறந்ததென்றுதெளிந்து இளமையிலேயே துறவறம் பூண்ட இளங்கோவடிகளது பெருமையை இன்னும் உணர்ந்தோமில்லை. தமிழ்மொழிக்குற்ற குறையைத் தனக்குற்ற குறையாகக்கருதி மனமும் மெய்யும் வருந்திய மணிமேகலை ஆசிரியரது மாண்பை அறிந்தோமில்லை. நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம்குற்றமே என்று முக்கணன் முன்னின்று மொழியும் கலைப்பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த பொய்யடிமையில்லாப் புலவரைப் போற்றினோமில்லை. இன்னும் முத்தமிழ்த் துறையின் முறைபோகிய மற்றைய உத்தமக் கவிகளையும், நல்லிசைப் புலமை மெல்லியலாரையும் மனக்கோயிலில் அமைத்து மகிழ்ந்தோமில்லை. மற்றைய நாடுகள் தம் புலவரையும், கவிஞரையும் போற்றுகின்ற முறையினையும் நம் தமிழ்நாடு, தமிழறிஞரைப் போற்றுகின்ற முறையையும் நன்கறிவோமாயின் பிறரது பெருமையும் நமது சிறுமையும் வெள்ளிடை மலை போல் விளங்கும். இத்தகைய பெருந்துயிலினின்றும் விழித்து அருந் தமிழைப்போற்றும் நாள் எந்நாளோ, அந்நாளே நம் நாட்டுக்கு நன்னாளாகும்.

# தவமும் புகழ்

இவ்வுலகில் தோன்றி இயங்கும் உயிர்த்தொகுதியில் ஆறறிவுபெற்ற மக்களே தலைசிறந்தவராகக் கருதப்படுகின்றனர். இத்தகைய பெறுதற்கரிய அறிவினைப்பெற்றும் அதனால் எய்தற்பாலதாய உயரிய பயனை அடையாது பிறந்து இறந்து உழல்பவரே பெரும்பாலராவர். உயிர்வாழ உண்பதும், உண்டு உயிர்வாழ்வதும், ஐம்பொறிகளாலாய இன்பம் நுகர்வதுமே, மக்களில் பெரும் பாலாரது வாழ்க்கை நெறியாகும். இவ்வாறு உண்டு உறங்கி உயிர்வாழ்ந்து காலமென்னும் கரையிலா மணற்பரப்பில் தம் காலடியைப் பதியாது வறிதே காலங்கழித்த மக்களது வாழ்க்கை பயனற்றதன்றோ? நிலையற்ற இவ்வுலகில்பிறந்த உயிர்களெல்லாம் இறந்தழிவது ஒருதலையேயாயினும், இறந்தவரெல்லாம் உண்மையில் இறந்தவரல்லர் என்று உயர்ந்தோர் கூறுகின்றார்கள். என்பு தோல்போர்த்த புன்புலால் உடல்போல் அழியாது என்ஞான்றும் நின்று நிலவும் புகழுடம்பு பெற்றோரே மக்கட் பிறவியின் பயனை அடைந்தோராவர். இக்கருத்தை,

> **"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்**
> **தோன்றலில் தோன்றாமை நன்று"**

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் அருளிப்போந்தார். இவ்வுலகில் மக்களாய்த் தோன்றின் புகழுக்கேதுவாகிய குணங்களோடு தோன்ற வேண்டுமென்றும், அக்குணங்களில்லாதார் மக்களாய்ப் பிறத்தலினும் பிறவாமை நன்று என்றும் நாயனார் அருளிய உண்மை நன்கறிந்து ஒழுகுதற்குரியதாகும். அழியும் தன்மைவாய்ந்த இவ்வுலகத்து அழியாது நிற்பது புகழே அல்லால் வேறன்று என்பது உயர்ந்தோர் கண்டு உணர்த்திய உண்மையாகும்.

"மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

என்று புறநானூறு கூறுகின்றது. ஆதலால் உயரிய புகழ் தரும் செயல்களைச் செய்யவும் உயர்ந்தோர் பழிக்கும் செயல்களை ஒழிக்கவும் அறிவுடையார் கருதி முயல்வது இயல்பேயாகும். செயற்கரும் செயல்களைச்செய்யும் பெரு மக்களே புகழுக்குரியர் என்று தமிழ்மறைபோற்றி யுரைக் கின்றது. பெரியார் இயல்பைப்பேசப் போந்த நாயனர்

"செயற்கரிய செய்வர் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலாதார்."

என்று இனிது எடுத்துரைத்தார். ஆதலின் செய் தற்கரிய செயல்களைச்செய்வோர் எல்லோரும் பெரியரே ஆவார். அவரது வாழ்க்கை என்றும் அழியாத புகழ் வாழ்க்கையேயாகும். இவ்வாறன்றி உலகில் சிறியராய் வாழ்வோர் நிலத்திற்குப் பாரமாய் அமைந்து இறந்து ஒழிவர். பல திறப்பட்டு விளங்கும் உலக வாழ்க்கையில் எத்துறையில் தலைசிறந்து விளங்கினும் பெருமையும் புக ழும் எய்தப்பெறும் என்னும் விரிந்த கருத்தை நாயனர் நன்கெடுத்துரைத்தார். அடுபடையும் சுடுபடையும்கொண்டு அமர்க்களத்தில் மாற்றுரை அழித்து வெற்றி மாலையோடு விளங்கும் வீரனும் புகழுடையவனே ஆவான். வினையின் நீங்கிய விளங்கிய அறிவால் உலகினுக்கு ஒளிநெறி காட்டி உய்விக்கும் அறிவனும் புகழுடையவனே ஆவான். ஆசற்ற அறிவால் ஆய்ந்த உண்மைகளை இழுமென் மொழியால் இனிதெடுத்து இயம்பும் செஞ்சொற்கவிஞனும் சிறந்த புக ழுடையனே ஆவான். வறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளலும் புகழுடையோனே ஆவான். இவ் வாறே உயர்ந்தோர் ஒப்பும் உயரிய துறைகளில் தலைசிறந்த தன்மையோர் எல்லாம் புகழுடையரே ஆவர். இத்தகைய

புகழ் அவர் உடம்போடு அழியாது பின்னும் நின்று நிலவு வதாகும்.

இவ்வாறு செயற்கரும் செயல்களைச்செய்து பெரியராய் விளங்குவோரது பெருமை நாட்டில் எவ்வாறு பரவுகின்றது என்பதும் நன்கு அறிதற்குரியதாகும். பெரும்பாலும் பெரியாரது புகழ் அவர் இறந்தபின்னர் உலகெங்கும் பரவி ஒளிருமே அல்லால் அவர் வாழுங்காலத்தில் அவர் பெருமையை அறிந்துபோற்றுதல் அரிதாகும். தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழ்ந்த பெருமக்கள் பிறந்த இடமும் இறந்த இடமும் தெளிவாயறியப்படாது பிற்காலத்தில் புதைபொருளா யிருப்பதே இவ்வுண்மைக்குப் போதிய சான்றாகும். அவர் வாழுங்காலத்தில் அவரை ஓர் பொருளாகக் கருதிப் போற்றாத உலகம் பின்னர் அவரைப்பற்றி யாதும் தெளிவாக அறியமாட்டா துழல்வது இயல்பேயன்றோ? இன்னும் பல பெரியார் உண்ண உணவும், உடுக்க நல் உடையும் இன்றி வறிஞராய் பித்தர்போலவும், பேதையர்போலவும் உலகில் வாழ்ந்து மாக்களது கொடுமையால் மனமும் மெய்யும் வருந்தியுள்ளார்கள். மாண்புடைய அறிவன் எவனும், தன் நாட்டிலும் காலத்திலும் மதிக்கப்படுதல் அரிதென்று ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகின்றது. இக்காலத்தில் ஆங்கில நாட்டார் கண்ணும் ஆவியுமாகப் போற்றுகின்ற நாடகக்கவியாய "செகப்பிரியர்" தாம்வாழ்ந்த காலத்தில் ஓர் எளிய கூத்தராகவே கருதப்பட்டிருந்தார் என்று அறியப்படுகின்றது. விலையற்ற மணிகளாக இக்காலத்தில் கருதப்படுகின்ற அவரது இனிய நாடகங்கள் அக்காலத்தில் கூழுக்குப் பாடப்பெற்ற கூத்தாகவே கருதப்பட்டன. இவ்வாறே இக்காலத்தில் தமிழ் மொழியின் கண் என இலங்கும் கம்பர் அக்காலத்தில் வட

மொழிக் காவிய மொன்றைத் தென்மொழியில் அமைத்துத்தந்த ஓர் சாமானிய கவியாகவே கருதப்பட்டார் என்று அறியப்படுகின்றது. இன்னும் நமது காலத்திலேயே உள்ளொளியும் உயரிய கவி நலமும் வாய்ந்து விளங்கிய உண்மைக்கவிஞர் உண்ண நல் உணவும் உடுக்கப் போதிய உடையும் இன்றி உயிர்துறந்த பின்னர் அவரது கவிகளைப் பாடிப்பாடிக் களிகின்ற தன்மையை நாம் கண்கூடாகக் காண்கிறோம் அல்லமோ? இந்நீர்மையை நினைக்கும்பொழுது பூதவுடம்பு அழிந்த பின்னரே தக்கோர் புகழுடம்பு தோன்றுவதாகும் என்னும் பழமொழியின் உண்மை இனிது விளங்குகின்றது. இவ்வாறு மெல்லச்சென்று உலகில் பரவும் உயர்ந்த புகழின் தன்மையைக் கல்வியிற் பெரியராய கம்பர் நமக்கு அறிவிக்கும் அழகு அறிந்துபோற்றுதற்குரியதாகும். கம்பரது பெருங்காவியத்தில் அருங்குணங்களும் ஆண்மையும் நிறைந்து விளங்குபவன் அநுமனே ஆவான். நூலறிவும் நுண்ணறிவும் அமைந்து, நயம்பட மொழியும் நாவன்மை வாய்ந்து, ஐம்பொறிகளையும் வென்று அறத்தினைக்காக்கும் வேலியாய் இலங்கிய அநுமனை இராமன் துணையாகக்கொண்டான். இலங்கை வேந்தன் வஞ்சனையால் கவர்ந்துசென்ற சீதையைத் தேடும் சீரிய பணியை அவன்பால் ஒப்புவித்தான். இவ்வருந் தொழிலை மேற்கொண்ட அநுமன் எழுநூறு யோசனை விரிந்து எல்லையற்றதுபோல் நின்ற கருங்கடலைக் கடந்து இலங்கைமாநகரை அடைந்து அங்கு நிறைந்திருந்த சேனைப் பெருங்கடலைக்கடந்து புகைபுகாவாயிலும் புகுந்து சோகத்தாளாய நங்கையை அசோக வனத்தில் கண்டான். தலைவன் கொடுத்தனுப்பிய கணையாழியை தலைமகளிடம்கொடுத்து அம்மங்கையளித்த சூளாமணியை அடையாளமாகப் பெற்றான்.

அப்பால் அந்நகரில் அழகுற்று இலங்கிய அசோக வனத்தை அழித்தான். தன்னை எதிர்க்கவந்த அடலரக்கரைப் படைக்கலங்களோடு சிதைத்தான். பஞ்ச சேனுபதியரது படையை பஞ்சை எரித்தாற்போலப் பாழாக்கினுன். இலங்கைவேந்தனது அருமைத் திருமகனுன அக்கனை அரைசாந்துபோல் தரையில் தேய்த்தான். இலங்கை மாநகரை எரியினுக்கு இரையாக்கினுன். கருமனத்தரக்கர் கண்ணெதிரே மீண்டும் கருங்கடலைத் தாவிக் கருணையங் கடலாய தன் தலைவனைவந்து சார்ந்தான். அப்பால் இராம சேனையோடு இலங்கைமா நகரம்போந்து அரக்கருடன் அரும் போர் விளைத்தான்.

மாயையில் வல்ல மேகநாதன், விண்ணிலே மறைந்து நின்றுவிடுத்த மலரோன் படையால் நோவுற்ற அநுமன் சிறிதுபொழுதில் மயக்கம் தீர்ந்து மற்றைய வீரரெல்லாம் மாண்டு கிடக்கக்கண்டு மனம் தளர்ந்தான். அந்நிலையில் உலகம் முற்றும் சலிப்பின்றித் திரிந்த சாம்பன் அனுமனை, அன்போடழைத்து மேருமலைக்கப்பாலிருந்த மருத்துமா மலையினின்றும் ஓர் மருந்தெடுத்து வருமாறு ஏவினுன். அப்போது அனுமன் காற்றின் வேகத்தோடும் கனலின் வெம்மையோடும் விண்ணிலே பறந்து சென்று ஆயிர யோசனை அகன்று, ஆயிரயோசனை ஆழ்ந்து நின்ற அம் மலையைக் கண்ணுற்றுன்.

அங்கு மருந்தைத்தேடி எடுக்கும் முறையில் நெடுங் காலங்கழியும் என்று கருதி அம்மலையை நொடிப்பொழுதினுள்ளே அநுமன் பெயர்த்தெடுத்து அங்கையிலேந்தி மீண்டும் அமர்க்களத்தில் தாவினுன். இத்தகைய அநுமனது பெருமை கூறப்போந்த கவிநாயகர்,

"ஆயிரயோசனை அகலநீதுயர்ந்து
ஆயிரயோசனை ஆழ்ந்தது அம்மலை,
ஏ யெனும் மாத்திரத்து ஒருகையேந்தினன்
தாயினன் உலகெலாம் தவழ்ந்த சீர்த்தியான்".

என்று இனிதாக எடுத்துரைத்தார். ஆயிர யோசனை ஆழ்ந்து அகன்று உயர்ந்த அம்மலையைப் பெயர்த்தும் எடுத்ததும் இறைப்பொழுதில் நிகழ்ந்ததென்றும் அம்மலையை எடுத்ததும் இலங்கையில் வைத்ததும் ஒரே பொழுதில் நிகழ்ந்ததென்றும் கவி அமைத்துள்ள அழகு அறிதற்குரியதாகும். மேருவைக் கடந்து மலையினை எடுத்துத்தாவிய வீரனது புகழ் அவனைப்போல் உலகில் தாவிச்செல்லாது தவழ்ந்து சென்றது என்னும் கருத்தால் "உலகெலாம் தவழ்ந்த சீர்த்தியான்" என்று கவி எழுதிய அழகுஆயுந்தொறும் அளவிறந்த இன்பம் பயப்பதாகும்.

பெருமைக்கு உவமை கூறப்போந்த பெருங்கவிகளெல்லாம் மலையையும் கடலையுமே ஏற்றபொருளாக எடுத்து ஓதுவாராயினர். இத்தகைய பெருமை வாய்ந்த கடலைக் கடந்தும் மலையை இடந்தும் வலிமையில் ஒப்புயர்வற்ற வீரனாய் விளங்கிய அநுமன் புகழே உலகில் தவழ்ந்து செல்லும் தன்மை வாய்ந்ததாயின் மற்றையோரது புகழ் எக்கதியில் செல்லுமென்பது சொல்லாமலே அமையும். ஆகவே பெறற்கரிய பெருமை வாய்ந்து செயற்கரிய செய்யும் பெரியாரது புகழ் உலகில் தாவிச்செல்லாது தவழ்ந்தே செல்லும் தன்மை நன்கறியப்படும்."

# நல் மரமும் நச்சு மரமும்.

ஒரு நாள் ஓர் அரசிளங்குமரன் தன் தோழனைத் துணைக்கொண்டு கானகத்தில் வேட்டையாடச் சென்றான். அங்கு அவன் வேட்டவாறு வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால், எங்கும் அலைந்து திரிந்து அலக்கணுற்றான் பசியால் மெலிந்து வெயிலால் உலர்ந்து இருவரும் தளர்ந்து சோர்ந்தார்கள். அப்போது நெடுந் தூரத்தில் ஒரு சிற்றூர் தோன்றக்கண்டு அவ்வூரை நோக்கி மெல்ல நடந்து சென்றார்கள். கதிரவன் வெம்மையால் அரசிளங்குமரன் தலைநோயுற்று தன் தோழனது தோளைப் பற்றிக்கொண்டு வழி நடந்தான். அவ்வூரின் அருகே வந்தபோது இருவரும் மெய்சோர்ந்து நாவரண்டு அடிவைத்து நடப்பதற்கும் வலியற்றாராயினர். அப்போது இருவரையும் இன்முகங்கொண்டு எதிர்சென்று அழைப்பதுபோல இளந் தென்றல் எழுந்து வந்தது. அம்மெல்லிய பூங்காற்றின் இனிமையால் புத்துயிர்பெற்ற இருவரும் அகமும் முகமும் மலர்ந்து தென்றல் எழுந்துவந்த திசை நோக்கிச்சென்றார்கள். அவ்வழியில் இளந் திரைகளோடு இலங்கிய ஓர் பொய்கை இனிது அமைந்திருந்தது. அப்பொய்கையில் விளங்கிய வெண் தாமரைகளில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்களைக் கவர்ந்தது. நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் துயின்ற இயற்கை வனப்பைக் கண்ட இளவரசன் துணைவனை நோக்கி

"தோயும் திரைகள் அலைப்பத்
தோடார் கமலப்பள்ளி
மேய வகையில் துஞ்சும்
வெள்ளை யன்னம் காணாய்".

என்று தான் பெற்ற இன்பத்தைத் தோழனும் பெறுமாறு எடுத்துரைத்தான்.

அப்பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முக மலர்ந்து இருவரையும் அருகே அழைப்பனபோல அசைந் தன. அவ்வாவியின் தண்மையும் செம்மையும் கண்ட இரு வரும் தாய்முகம் கண்ட சேய்போல் மனம் களித்து அந் நன்னீரைப் பருகி மகிழ்ந்தார்கள். அருந்தாகத்தால் வருந் திய இருவருக்கும் திரைதிரையாகத் தெண்ணீரை வாரி வழங்கும் தன்மைபோல் அடுக்கடுக்காக அலைகள் கரை யருகே வந்து சேர்ந்தன. தாகம் தணிந்து மனமும் மெய் யும் குளிர்ந்த பின்னர், இருவரும் அக்குளத்தின் ஈரக் கரையில் இனிதமர்ந்து அங்கு வீசிய இளங்காற்றை நுகர் ந்து இன்புற்றார்கள். அப்போது, அவ்வாவியின் அருகே கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கனிகளைத் தாங்கி, குளிர் நிழல் விரித்து நின்ற ஓங்கிய மரமொன்றைக் கண்டார்கள். அதன் நிழலில் தங்கி இளைப்பாற எண்ணி இருவரும் அங்கு சென்றார்கள். கதிரவன் வெம்மையைத் தடுப்பதற்கு ஓங்கிய பாசிலைப் பந்தர் வேய்ந்தாற்போல விளங்கிய மரத்தின் நிழலில் இருவரும் மேலாடையைப் பாயலாக விரித்து மெல்லிய இளங்காற்றில் இனிது துயின் றார்கள். மாளிகையில் அனிச்ச மலரினும் மெல்லிய மஞ் சத்தில் துயிலும் அரசிளங் குமரன், இலைகளாலும் தழை களாலும் அமைந்த இயற்கைப் பந்தரின் கீழ் இனிது துயி ன்றான். அம்மரக் கொம்புகளில் பைங்கிளிகள் தாவி விளை யாடுவதும் குயில்கள் மறைந்து நின்று கூவுவதும் மனத்தை மிக மகிழ்வித்தன. இத்தகைய இனிய நிழலில் இருவரும் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார்கள். சில நாழிகை சென்ற பின்னர், தோழன் துயிலொழிந்து எழுந்தான். எங்கும் பசுமை நிறமும், பறவை ஒலியும், பழத்தின் மணமும்

நிறைந்திருப்பினும், பசியின் கொடுமையைப் பொறுக்கலாற்றுது வருந்தினான். கற்பக தருவெனக் கவின்பெற விளங்கிய மரக்கொம்புகளை நயந்து நோக்கினான். அவற்றில் பொன் நிறமான பழங்கள் கொத்துக் கொத்தாய் எம்மருங்கும் இலங்கக் கண்டான். அப்பொழுதே அம்மரக் கிளைகளின் வழியாய் மேலே சென்று இருவரது அரும் பசியைத் தீர்த்தற்குப்போதிய கனிகளைக்கொய்துவந்து துணைவனைத் துயிலினின்றும் எழுப்பினான். கனிகளின் நிறத்தைக்கண்டும், நல்மணத்தை நுகர்ந்தும், தீஞ்சுவையைத் துய்த்தும், இருவரும் இன்புற்றார்கள். பின்னும் சிறிது பொழுது அம்மரத்தின் நிழலில் அமர்ந்திருக்கையில், அரச குமரனது தலைநோய் மிகுந்தது. தலைநோய் தீர்க்கும் வகையறியாது, தோழன் திகைத்து எவரேனும் அவ்வழி வருவாரோ என்று எதிர்நோக்கி இருந்தான். இவ்வாறு இருக்கையில் அவ்விடத்தை நோக்கி, ஓர் முதியோன் வந்து சேர்ந்தான். "தலைக்குத்து தீர்க்கும் மருந்து தங்களிடம் உண்டோ?" என்று தோழன் அவனை வினவினான். அப்பொழுது முதியோன் புன்னகை பூத்து, "கையில் வெண்ணெயிருக்க நெய் தேடி அலையும் வெள்ளியரும் உண்டென்பதை இன்று நேராக அறிந்தேன். இம்மரத்தின் பட்டையில் சிறிது செதுக்கி அதன் சாற்றைத் தலையிற் பிழிந்தால் எவ்வகைத் தலைக்குத்தும் தீர்ந்துவிடுமே" என்று சொல்லி அப்பாற் சென்றான். இதை அறிந்த துணைவன் அளவிலா மகிழ்வடைந்து அம்மரப்பட்டையின் சாற்றை மன்னன் மைந்தனது தலையிற்பிழிந்தான். சிறிதுநேரத்தில் அரசிளங் குமரனது தலைக்குத்து அறவே ஒழிந்தது.

அந்நிலையில் தோழன், தலைநோய் தீர்ந்த தனி இளங் குமரனை நோக்கி "ஐயனே! நாம் இருவரும்

கானகம் சென்றதுமுதல் இதுவரையும் நிகழ்ந்த செயல்களை நினைவில் நோக்குவோமாயின், இவ்வுலகியல் இனிது விளங்குவதாகும். நாம் பசியாலும் வெயிலாலும் நலிந்து மெய் தளர்ந்து வருந்தும் நிலையில் இப்பொய்கை நம்மை அன்புடன் அழைத்து இன்முகம் காட்டித் தாகம் தணித்துத் தளர்வை மாற்றியது. அப்பால் இந் நல்மரம், நாம் தங்கி இளைப்பாறக் குளிர்நிழல் தந்து பசியாறப் பழங்கள் அளித்துத் தலைநோய் தீர்க்கவும் தனி மருந்தாய் அமைந்தது. இத்தன்மையை நோக்குங்கால் நல்லார் கைப்பட்ட செல்வத்தின் தன்மை நன்கு விளங்குவதாகும். வறுமையால் வருந்திவந்த விருந்தினரை, இனிய முகத்தோடு ஏற்று அவரது குறையை நிறை செய்வதே அறிவுடைய செல்வர் செயலாகும். ஆற்றுவழியாகவும் ஊற்றுவழியாகவும் நன்னீரைத் தன் அகத்தே நிரப்பிக் கொள்ளும் பொய்கைபோல் அறிவுடையார் பழுதறு வழிகளால் ஈட்டிய பெரும் பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள். நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து விளங்குதல்போல, அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் இலங்குவார்கள். தாகத்தால் வருந்துவோர்க்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம்போல், கல்வியும் செல்வமும் பூத்த மேலோர், வறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவார்கள். இன்னும், தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழும் பெரியார்பால் அமைந்த செல்வம் ஊருணியின் நீர்போல ஊரார்க்கே முழுவதும் பயன் படுவதாகும். இதனாலேயே,

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

3406 53 பாகேம்.

என்று நாயனார் அருளிப்போந்தார். இ[illegible] பழங்களைத் தாங்கி நிற்கும் இப்பயன் மரம் தன் இனிய பழங்களால் பசிநோய் அகற்றி, குளிர்நிழலால் களைப்பை மாற்றி, பட்டையால் பிணியைப் போக்கி, பல வகையாய்ப் பயன்படுதல்போல, அறிஞரிடம் அமைந்த செல்வம் வறியார்க்குப் பல வகையாய்ப் பயன்படுதலாலேயே,

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கட்படின்". என்றும்,
மருந்தாகித் தப்பாமரத்தற்றால் செல்வம்
பெருந்தகையான் கட்படின்" என்றும்

நாயனார் பொருள் உரை எழுந்தது. ஆகவே தண்மை வாய்ந்த தடாகம்போலவும், பழங்கள் நிறைந்த பயன்மரம் போலவும்,வாழ்வதே பண்புடைமையாகும்என்று இனிதாக எடுத்துரைத்தான். அரசிளங் குமரனும் அதன் உண்மையை அறிந்து அப்பொருள் உரையைப் பொன்போற் போற்றினான்.

அப்பால், இருவரும் தமது ஊரை நோக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில் ஓர் சிற்றூர் குறுக்கிட்டது. அவ்வூரின் நடுவே செல்லும்போது இருவரும் முன் கண்டறியாத ஓர் மரத்தினைக் கண்டு வியந்து நின்றார்கள். அம்மரம் கவையாகிக் கொம்பாகிக் காட்டு மரம்போல் ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் கொம்புகளிலும், கிளைகளிலும் கூரிய முள் நிறைந்திருந்தது. இலைகளும் தழைகளும் இல்லாது பட்டமரம்போல் நின்ற அதன் கிளைகளில் செவ்வையாய்ப் பழுத்த பழங்கள் கொத்துக் கொத்தாய் அமைந்து கண்களைக் கவர்ந்தன. இம்மரத்தைக் கண்டு இருவரும் வியந்து நிற்கையில், அவ்வழியாக ஓர் இளைஞன் வந்து சேர்ந்தான். அவன் மரத்தருகே நின்ற இருவரையும் இனிது

நோக்கி, "ஐயா! நீங்கள் இருவரும் அயலூரார் என்பதை ஐயமற அறிந்தேன். ஏனெனில் இவ்வூரார் எவரும் இப் பாழான பழுமரத்தைக் கண்ணெடுத்தும் பாரார்கள். இம் மரத்தில் எந்நாளும் இலைகளும் தழைகளும் இல்லாமையால் விலங்குகளும் இதனடியில் நில்லாது விலகிப்போம்; கண் களைக் கவரும் வனப்பு வாய்ந்த இக்கனிகள் நச்சுக்க கனிக ளாய் இருத்தலின், உண்டாரைக் கொல்லும் தகையனவாம்; இம்மரத்தின் கொம்புகளை விறகாய் வெட்டி எரிப்பதற்கும் இதனிடம் அமைந்த முள் இடையூறு யிருக்கின்றது; இப் பாழ்மரம் கடுங்காற்றில் அகப்பட்டு முறிந்து வேரற்று விழ வேண்டுமென்று இவ்வூரார் இறைவனை நாளும் வழிபடுகின் றார்கள். இம்மரம் என்று விழுமோ அன்றே இவ்வூருக்கு நன்றாகும்" என்று அதன் தன்மையை விரிவாகக் கூறி முடித்தான். இதைக்கேட்ட அரசிளங் குமரன், முன் தங்கி இளைப்பாறிய மரத்தின் இனிமையையும், இம்மரத்தின் கொடுமையையும் ஒப்பு நோக்கி நச்சுமரத்தில் அமைந்த நன்னிறக் கனிகள் பேதையர் கைப்பட்ட செல்வம்போல் பிறர்க்கு இடர்விளைப்பதாகும் என்று எண்ணிவருந்தினான்.

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத்தற்று"

என்னும் பொய்யாமொழியின் பொருளைத் தெளிந் தான். இத்தகைய செல்வம் நிறைந்த பேதையர், நிலத் துக்குச் சுமையாகவும், உலகத்திற்கு உற்ற தீமையாகவும் அமைந்திருத்தலால், அன்னார் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை பயப்பதாகும். அறிவுடைய செல்வனை உலகம் போற்றும்; அறிவற்ற செல்வனை உலகம் தூற்றும்; அறிவு டைய செல்வனது ஆக்கம் கண்டு உலகம் களிக்கும்; அறி விலாச்செல்வனது அழிவைக்கண்டு உலகம் மகிழும்; அறிவு

டைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி இம்மையிற் புகழும், மறுமையில் இன்பமும் எய்தவான்; அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறியாப் பேதையனாய் இம்மையிற் பழியும், மறுமையில் துன்பமும் எய்துவான்.

"நல்லார் கட்பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார் கட்பட்ட திரு."

என்பது என்றும் பொய்யா மொழியேயாகும்.

# பந்து விளையாட்டு.

இந் நாட்டுக் கல்விச்சாலைகளில் கலை பயிலும் இளைஞர்கள் உடல்நலம் பேணும் ஊக்கமற்றவராய், அல்லும் பகலும் அருங்கலைகளையே கண்ணும் கருத்துமாய்ப் பயின்று வருகின்றார்கள் என்பது உண்மையாகும். மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது கல்விகற்று உடல் நலிந்து சாறு பிழிந்த கனிபோல் பொலிவிழந்த மாணவரே பெரும் பாலராவார். இவ்வாறு உடல் நலம்பேணாது உயிர் வாழும் வழக்கம் தமிழ் மக்களது தொன்மை சான்ற வழக்கமென்றும், ஆங்கில மக்களொடு பலகால் பழகியும் உடல் நலம் பேணும் உயரிய ஒழுக்கத்தை நாம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் குறை கூறப்படுகின்றது. இவ்வாறுரைப்போர், இந்நாட்டின் பழைய பழக்க வழக்கங்களை அறியாத விரிவிலா அறிவினர் என்பது நன்கு விளங்குவதாகும். இந்நாட்டில் கந்த மூலம் உண்டு கடுந்தவம் புரிந்த முனிவரும் உடலின்பெருமையை உணர்ந்து அதனைப்பேண

வேண்டுமென்று அருளிய பொன்னுரைகள் ஆன்றோர் நூல்களில் ஆங்காங்கு இலங்குகின்றன.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே."

என்பது திருமூல முனிவர் அருளிய திருமந்திரமாகும். ஆகவே, பழந்தமிழ் மக்கள் உயிரைப் பேணியவாறே உடலையும் பேணினார்கள் என்பதும், உடலை இகழத்தலைப்பட்ட பேதைமை இடைக்காலத்தில் இந்நாட்டில் புகுந்த பாழான கொள்கையேயாம் என்பதும், அருங்கலை தேரும் அறிஞரது கருத்தாகும்.

உடம்பைச் செம்மையாய் உறுதியாய் வளர்ப்பதற்கு நல்லூணும் நற்பயிற்சியும் இன்றியமையாதன வென்பது சொல்லாமலேஅமையும். இத்தகைய உடற் பயிற்சிக்கேற்ற உயரிய விளையாட்டுகள் பல அக்காலத்திய தமிழ் மக்கள் வாழ்க்கையில் அமைந்துவிளங்கின. இக்காலத்தில் இளைஞர் விரும்பி விளையாடும் பந்தாட்டம் பழந்தமிழ் நாட்டிலேயே வழங்கியதாக அறியப்படுகின்றது. மன்னன் வாழும் மணி நகரத்தில் அமைந்திருந்த அரிய காட்சிப் பொருள்களில் பந்தாடும் இடமும் ஒன்றாய் விளங்கிற்று. இவ்வாறு அமைந்த அரங்குகள் பல பத்திகளாய் வகுக்கப்பட்டுப் பத்தி தோறும் பசும் பொன்னும் பன்மணியும் இழைக்கப்பட்டு விளிம்பில் முத்து அழுத்தப்பட்டுக் கண்களைக் கவரும் வனப்புவாய்ந்து விளங்கின. இவ்வரங்கின் அழகை,

"முத்தம் வாய் புரித்தன மொய்
கதிர்ப் பசும்பொனால்
சித்தி ரத்தியற்றிய செல்வம்
மல்கு பன்மணி

பத்தியிற் குயிற்றிவான் பதித்து
வைத்த போல்வன
இத்திறத்த பந்தெறிந்து
இளையராடு பூமியே''.

என்று சிந்தாமணி செம்மையாய் உரைக்கின்றது. இவ்வாறு வகுத்தமைத்த அழகிய அரங்கத்தில் மைந்தரேயன்றி மங்கையரும் பந்துவிளையாடி மகிழ்ந்தார்கள் என்பது,

''மாநெடு மழைக்கண் நோக்கி
வானவர் மகளுமொப்பாள்
பாலெடும் தீஞ்சொ லாள் ஓர்
பாவை பந்தாடுகின்றாள்''

என்னும் அழகிய பாவால் இனிது விளங்கும். இத்தகைய வரம்பமைந்த அரங்கத்தில் விரும்பி விளையாடிய விமலை என்னும் மங்கையின் பந்து, வரையிறந்து எழுந்துபோந்து வீதியில் விழுந்ததென்றும், அதனை எடுப்பதற்கு விரைந்து சென்ற மங்கை ஓர் தலைமகனது கட்டழகைக் கண்டு காதலுற்றாள் என்றும் சிந்தாமணி கூறுகின்றது.

''மந்தார மாலை மலர் வேய்ந்து
மகிழ்ந்து தீன்தேன்
கந்தாரம் செய்து களிவண்டு
முரன்று பாடப்
பந்தார்வம் செய்து குவளைக்
கண்பரப்பி நின்றாள்
செந்தாமரை மேல் திருவின்
உருவெய்தி நின்றாள்''

என்னும் செய்யுளின் சொல்நயம் சிந்தைக்கு இன்பம் பயப்பதாகும். இன்னும், மயில்போன்ற சாயலமைந்த ஓர் மெல்லியல் மாது, வளையணிந்த முன்கையால் வலப்புறமும் இடப்புறமும் பந்தைப் போக்கி ஊக்கமாய் விளையாடக் கண்ட

தோழியர், தம் தலைமகளது கொடியினும் மெல்லிய இடை ஒசிந்து வருந்தும் என்று இரங்கி நின்றாள் என்பது,

"துணையில் தோகை மஞ்ஞை
ஈயற் கிவரும் வகைபோல்
மணியார் வளைசேர் முன்கை
வலனும் இடனும் போக்கி
இணையில் தோழி மார்கள்
இறுமால் இடையென் றிரங்க
அணியார் கோதை
பூம்பந்தாடு மவளைக் காண்மின்"

என்னும் கவியால் இனிது அறியப்படும். மென்மையும் அழகும் அமைந்த மாது, அரங்கத்தில் அங்கு மிங்கும் ஓடி ஆகாய வழியேவரும் பந்தைத் தன் அழகிய கைகளால் எடுக்கும் ஆர்வம், மெல்லிய தோகை வாய்ந்த மயில் பறந்து வரும் ஈயலைப்பற்றுதற்கு அவற்றின்மேல் விரைந்து செல்லும் பான்மையில் அமைந்திருந்ததென்று ஆசிரியர் அமைத்த இயற்கையணி சாலவும் அழகியதாகும்.

இவ்வாறு அரங்கில் விளையாடுவதேயன்றி மங்கையர் சிறுபந்துகளை மேலே வீசிப்பிடித்து விளையாடும் வழக்கமும் அக்காலத்தில் இருந்ததென்று விளங்குகின்றது. இப் பந்துகள் தூய வெண்மை வாய்ந்தனவாய்ப் பளிங்கு போல் இலங்கிய பான்மையையும் சார்ந்ததன் வண்ணமாய் விளங்கிய தன்மையையும்,

"மையரி நெடுங்கண் நோக்கம்
படுதலும் கருகிவந்து
கைபுகிற் சிவந்து காட்டும்
கந்துகம் பலவும் கண்டார்"

என்று கவி வியந்துரைக்கின்றார். அஞ்சனம் எழுதிய அழகிய கருங்கண்களுடைய மங்கையர் பளிங்குபோன்ற

பந்துகளை மேலே எறிந்து அவற்றை மீண்டும் செந்தாமரைபோற் சிவந்த கைகளால் ஏந்திப் பிடித்தபோது, அப்பந்துகள் அடைந்த நிற வேற்றுமையைக் கம்பர் அழகுற எழுதிப்போந்தார். இயற்கையாலும் செயற்கையாலும் கருநிறம் வாய்ந்த கண் எதிரேவந்தபோது, அப்பந்துகள் அந்நிறத்தை ஏற்றுக் கருமையாய் விளங்கின என்றும், அப்பால் அம்மாதரது சிவந்தகையிற் சேர்ந்தபோது அந்நிறத்தை ஏற்றுச் செம்மையாய் விளங்கின என்றும் கவி யருளிய நயம் கனிந்து திகழ்வதாகும். தீயரைச் சேர்ந்தோர் தாமும் தீயர் ஆவதுபோலவும், செய்யரைச் சேர்ந்தோர் தாமும் செய்யராய்த் திகழ்வது போலவும் பளிங்குபோன்ற பந்து இனத்தியல்பெற்று இலங்கிற்று.

இவ்வாறு மாதர் மகிழ்ந்து பந்தாடும்பொழுது இறைவனையும் மன்னனையும் வாழ்த்திப் பாடும் வழக்கமும் அக்காலத்தில் இருந்ததாக அறியப்படுகின்றது. நீதிதவறியதென்று அறிந்த நிலையே உயிர்துறந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனை வாழ்த்தப்போந்த மாதர்,

“பொன் இலங்கு பூங்கொடி
பொலஞ்செய் கோதை வில்லிட
மின் இலங்கு மேகலைகள்
ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று
சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே”

என்றும்,

“மின்னும் முன்னும் எங்கணும்
பெயர்ந்து வந்து எழுந்துலாய்
மின்னும் மின்னிளங் கொடி
வியனிலத் திழிந்தெனத்

தென்னன் வாழ்க வாழ்க என்று
சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே

என்றும்,

"துன்னிவந்து கைத்தலத்
திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்றும் அந்தரத்
தெழுந்ததில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று
சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே"

என்றும் பாடி மன்னனை வாழ்த்திய மாண்பினைச் சிலப்பதிகாரக் கந்துவரியிற் காணலாம்.

இவ்விருவகை விளையாட்டோடு காலால் பந்தடித்து விளையாடும் வழக்கமும் இளைஞரிடம் அமைந்திருந்தது. பந்தைக் காலால் எடுப்பதும், கையினால் அடிப்பதும், தலையால் தட்டுவதும், பத்தி பத்தியாய் உயரப்புடைப்பதும், பறந்துபோகுமாறு அடிப்பதும் ஆகிய பலவகை விளையாட்டுகளை இளைஞர் விரும்பி ஆடி எல்லையற்ற இன்பமுற்றார்கள் என்பது,

"வைத்த பந்தெடுத்தலும்
மாலையுட் காத்தலும்
கைத்தலத்தின் ஒட்டலும்
கண்ணி நெற்றி தீட்டலும்
பத்தியிற் புடைத்தலும்
பையரவ் விடுடலும்
இத்திறத்த பந்திேனுடு
இன்பம் எல்லை இல்லையே"

என்னும் சிந்தாமணியால் சிறந்து விளங்கும். இப்பொழுது காற்பந்தாடும் முறையில் மத்தியில்வைத்த பந்தைக் காலால் எடுப்பதும், எடுத்த பந்தை மாற்றார் கவராத வண்ணம் கொண்டு செல்வதும், நீள அடிப்பதும், உயர அடிப்பதும் உயர்ந்துவரும் பந்தைத் தலையால் அடிப்பதும், அமைந்திருக்கக் காண்கின்றோம். இதுபோன்ற பந்தாடு முறை அக்காலத்தும் இருந்ததென்பது இதனால் இனிது விளங்குகின்றது. காலால் எடுக்கும் பந்துபோல், கையால் பந்து எடுத்து விளையாடுமுறை இப்பொழுதும் ஆங்கில மக்கள்பால் வெகுவாய் வழங்கக் காணலாம். பந்தைக் கையில் தாங்கி மாற்றாரது பத்தியிற் புகுந்து அவர் கைப்பற்றா வண்ணம் கரந்தும் வீசி எறிந்தும் விளையாடுவதே கைப்பந்தாடும் முறையாகக் கருதப்படுகின்றது. இதுபோன்ற ஒரு முறையும் தமிழ்நாட்டில் வழங்கியிருந்ததாக விளங்குகின்றது

இன்னும் இக்காலத்தில் பந்து முதலிய விளையாட்டுகளை விரும்பும் இளைஞர் அகன்று பெரிதாய ஆடைகள் ஆட்டையைத் தடைசெய்யுமென்று கருதி இடையினின்றும் முழந்தாள் அளவாகவுள்ள சிற்றுடை உடுத்துச் செல்வத்தைக் காண்கின்றோம். இத்தகைய சிற்றுடை அக்காலத்தில் "வட்டுடை" என்னும் பெயரால் விளங்கிற்றென்பது பழந்தமிழ் நூல்களில் விளங்குகின்றது. சிந்தாமணியின் காளையாய் இலங்கும் வீரனை "வட்டுடைப்பொலிந்த தானை வள்ளல்" என்றும்,

"வட்டுடை மருங்குல் சேர்த்து
வாள் இரு புடையும் வீக்கி"

என்றும் ஆசிரியர் கூறுமாற்றால் வட்டுடையின் தன்மை நன்கு விளங்குவதாகும். வட்டுடையின் இயல்பைக் கூறப்

போந்த நச்சினார்க்கினியர், அது முழந்தாள் அளவாக வீரர் உடுக்கும் உடை என்று உரை வரைந்திருத்தலும் ஈண்டு உணரத்தக்கதாகும். ஆகவே இக்காலத்திய போர் வீரரும் பந்தாடும் இளைஞரும் உடுக்கும் சிற்றுடையின் நலங்களை அக்காலத்திய தமிழ் மக்களும் அறிந்திருந்தார்கள் என்பது நன்கு விளங்கும்.

# பயிர் வண்டும், படர் கொடியும்.

"வம்பார்குன்றம் நீடுயர் சாரல்
வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு
யாழ்செய் குற்றாலம்"

என்று பிள்ளைப்பெருமான் போற்றும் பெருமை வாய்ந்த திருகூட மலையின் ஒருசார் ஓங்கிவளர்ந்த ஓர் வேங்கை மரம் விண்ணளாவி விளங்கிற்று. அதன் மருங்கே முளைத்தெழுந்த ஓர் மெல்லிய பூங்கொடி அவ்வேங்கையின் அழகிய கொம்புகளில் பின்னிப்படர்ந்து செழித்து வளர்வதாயிற்று. மஞ்சுதோய வளர்ந்து மாண்புற்று இலங்கிய வேங்கையின்மீது அவ்விளங்கொடி வரிவரியாய்ச் சுற்றி விளங்கிய கோலம் கண்டோர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் தன்மைவாய்ந்து விளங்கிற்று. அவ்வேங்கையின் பூங் கொம்புகளில் தீங்குயில்கள் மணந்து மகிழ்ந்தன. வண்டினங்கள் பண்ணமைந்த இசைபாடி மலர்களின் மதுவை மாந்திக்களித்தன.

"தீங்குயில் மணந்து தேன் துஞ்சவண்டு பாண்செய
வேங்கைநின்று பொன் உகுக்கும்"

என்று சிந்தாமணி ஆசிரியர்வியந்துரைத்த இயற்கை அழகு அளவிலா உவகையளித்தது.

அவ்வேங்கை மரத்தின் அடிப்புறத்தில் ஆழ்ந்து அகன்ற ஓர் ஆறு அணிபெறச் சென்றது. மலையிடைப் பிறந்து சவியுறத்தெளிந்து ஆழ்ந்து அமைந்து ஆன்றோர் மனம்போல் அவ்வாறு அழகுற நடந்துசென்றது. அம் மலையில் வீசிய மெல்லிய இளங்காற்றில் வேங்கையின் பூங் கொம்புகள் அசைந்து பொன்மலர் சொரிந்தன. இளங் கொடி வேங்கையின் கிளைகளில் இனிதாய்த் துவண்டது. இளந்திரைகள் ஆற்றில் அலைந்து இன்புற்று இலங்கின. அப்போது சேய்மையில் ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது. அதன் தன்மையை மனத்தாற் கருது முன்னமே கடுங் காற்று வேகமாய்ச் சுழன்று வீசத் தலைப்பட்டது. விண் ணுக் கடங்காமல் வெற்புக்கடங்காமல் வீசிய புயல் காற் றின் வெம்மையால் மலைப் பொருள்கள் எல்லாம் மயங்கிச் சுழன்றன. அக்கடும் புயலின் வேகத்திற்கு ஆற்றாது மலையே நிலைகுலைந்தது. வெறிகொண்ட புயலில் அகப்பட்ட வேங்கை மரம் வேரோடு அற்று அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து பூத்துச் செழித்து விளங்கிய வேங்கை விழுவதைக்கண்ட எமது உள்ளம் வெதும்பியது. உலகப் பொருள்களின் நிலையா மையை நினைந்து நெஞ்சம் குழைந்தது.

இவ்வாறு வேங்கை சாய்ந்து வேகமாய்ச் செல்லும் ஆற்றில் விழுந்தபோது, அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரற்று அம்மரத்தோடு ஆற்றில் மயங்கி விழுந்தது. ஆயினும் அவ்வேங்கையில் தீந்தே னுண்டு திளைத்த வண்டுகள் மரத்தொடு பூவும் மாளக்கண்டு நிலையழிந்த வேங்கையை நீத்து ஆர்த்தெழுந்து அயல் நின்ற மற்றோர் மலரில் சென்று சேர்ந்தன. இதனை நோக்

கியபோது மதுவுண்டு மயங்கும் வண்டின் இழி குணம் மனத்தை வாட்டி வருத்தியது.

> "காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
> மேலாடுமீனில் பலராவர்-ஏலா
> இடர் ஒருவர் உற்றக்கால், ஈர்ங்குன்ற நாட
> தொடர்புடையேம் என்பர் சிலர்"

என்னும் பெரியாரது மொழிகளின் பொருளைத் தெள்ளிதில் தெரிந்தேம். கெடுமிடத்துக் கைவிடும் கருவண்டு போலாது பெருந்துயர் நேர்ந்தபோதும் பிரியாத பெருந் தன்மை வாய்ந்து திகழ்ந்த பூங்கொடி அருங்குல மங்கையர் போல் அமைந்து விளங்கிற்று. வேரூன்றி முளைத்த இடத்தினின்றும் படர்ந்து போந்து வேங்கையைப்பற்றித் தளிர்த்து வளர்ந்த கொடியின் தன்மை, மணப்பருவம் வாய்ந்த மங்கைபிறந்த மனையினின்றும் போந்து தலைமகனைச் சேர்த்து வாழும் தகைமையில் அமைந்திருந்தது. பூங்கொடி படர்வதற்கு ஏற்ற கொழு கொம்பாய் அமைந்த பெருமை சான்ற வேங்கையின் தோற்றம், ஆண்மையும் பெருமையும் பொருந்தித் திகழும் தலைமகனது விழுமிய கோலம்போல் விளங்கிற்று. அவ்வேங்கையில் நன்றாய்ப்படர்ந்து அதன் கிளைகளுக்குப் புதியதோர் அழகளித்த கொடியின் கோலம், தலைமகனுடன் ஒன்றிவாழ்ந்து இல் வாழ்க்கைக்கு அழகளிக்கும் குலமங்கையின் குணத்தைவிளக்கி நின்றது. இன்னும் வேங்கை துயர் உற்று ஆற்றில் வீழும் நிலையில் அதனோடு தானும் வீழ்ந்து துயர் உற்ற கொடியின் தன்மை, தலைவன் துயருறும்போது தானும் துயருறும் நிறை அமைந்த மங்கையின் மனப்பான்மையை விளக்கி நின்றது. இத்தகைய பெருமை கற்பமைந்த மாதர் வாழ்க்கையில் கவின் பெற விளங்கக் காணலாம்.

தேனடைந்த சோலைத் திருநாடு துறந்து கானகம் செல்ல இசைந்த கமலக் கண்ணன், தலைமகளாய சீதையிடம் விடைபெறுமாறு அவள் மாளிகை சென்றான். அங்கு அறமே உருவாயமைந்த திருமகளைக்கண்டு "மாதே இணையற்ற என் தம்பி இந்நாட்டை அரசாள்வான்". நான், தாய் தந்தையரது ஆணையைத் தலைமேற்கொண்டு வெளியே போந்து மலைவளங்கண்டு வருவேன். நான்வரும் அளவும் நீ வருந்தாதிரு" என்று மொழிந்தான். அம்மாற்றம் கேட்ட மங்கை நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றேனும், நாடாளும் நற்பதத்தை இழந்தான் என்றேனும் வருந்தினாள் அல்லள். ஆயினும் "நீ வருந்தாதே நான் உன்னைவிட்டுப் பிரிவேன்" என்று நாயகன் உரைத்த சொல் நஞ்சுபோல் மங்கையின் நெஞ்சை நலிந்தது.

"நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றும்
மேயமண்ணிழந்தான் என்றும் விம்மலள்
நீ வருந்தலை நீங்குவன் யான் என்ற
தீயவெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்."

என்று கவி அரசராய கம்பர் மங்கையின் மனப்பான்மையை மாண்புற விளக்கிப்போந்தார். இவ்வாறு மயங்கித் தளர்ந்த மங்கையை நோக்கி, மன்னவன் "மாதே பஞ்சினும் மெல்லிய உன் கமலபாதம் வெம்மை நிறைந்த கானகத்தில் தோய்ந்து வருந்தும்; கதிரவன் கொடுமையால் கானகக் கற்களெல்லாம் கனல் உமிழும்; அக்கொடிய சூடு உன்னால் தாங்குதற்கரிதாகும் என்று வனத்தின் வெம்மையை மங்கை அறியுமாறு எடுத்துரைத்தான். அப்போது மையறு மனத்தளாய மங்கை "ஐய, நின்பிரிவினும் சுடுமோ அப்பெருங்காடு" என்று வினவினாள். தலைவனைப் பிரிவதே பெருந்துன்பம் என்றும் அத்துன்பத்திற்கு இணையாய துன்பம் வேறில்லை என்றும் நிறை அமைந்த மாதர் கருதுவர் என்பதற்குச் சீதை ஓர் சிறந்த சான்றாய் அமைகின்றாள்.

இவ்வாறே கலியின் கொடுமையால் நாடும் பீடும் இழந்து கல்லும் முள்ளும் நிறைந்த கானகம் நோக்கிச்சென்ற நளன் தன்னொடு போந்த தமயந்தியின் மென்மை நோக்கி மனம் நொந்து விதர்ப்ப நாட்டிற்குச் செல்லும் வழியைக்கண்ட போது "மாதே உன் தந்தையின் ஊருக்குச் செல்லும் வழி இதுவே" என்று எடுத்துரைத்தான். அதுகேட்ட மங்கை மனம் பொருது அழுது,

"ஆங்கதுகேட்டலும் அழுது மாழ்கிநொந்து
ஈங்குநின் அடியனேன் பிழைத்தது யாதுகொல்!
பூங்கழற் குரிசிலோய்! பொறியிலேன்தனை
நீங்கவோ இவ்வுரை நிகழ்த்தினாய் என்றாள்."

என்று கவிகூறுமாறு தயங்கித் தலைவனைப் பிரியாது பின் தொடர்ந்து சென்றாள் என்று இனிது அறியப்படுகின்றது.

இன்னும் பெற்றோர் சேர்த்துவைத்த பெருஞ்செல்வம் எல்லாம் பொது மாதிடம் இழந்து வறியனாய், மாடமதுரையில் மனையாளது மணிச்சிலம்பை விற்று வாணிகம் செய்யுமாறு புகார் நகரினின்றும் போந்த கோவலனைப் பிரியாது பின்னே சென்று, கடுமையார் கானகத்தில் கமல பாதமும் மெல்லிய மேனியும் தளர்ந்து வருந்த, அத்துயரைப் பொறுத்து தலைவனது துயரைக்கண்டு தளர்ந்த கண்ணகியின் பெருமையை

"கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி நாப்புலரவாடித்
தன்துயர்காணாத் தகைசால் பூங்கொடி"

என்று சிலப்பதிகாரம் இனிதெடுத்துரைக்கின்றது. இவ்வாறு மண்மகளும் அறியாத வண்ணச் சீறடிகள் வருந்தக் கானகத்தில் நடந்து கணவன்துயர்களைந்த கண்ணகியின் பெருமையை கோவலன் கண்டு மனநொந்து குழைந்தான்.

"நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னொடு போந்து ஈங்கு என்துயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங்கோதாய்"

என்று புகழ்ந்து போற்றினன்.

இவ்வாறு கணவனைப் பிரியாத பெருவாழ்வு வேண்டி இறைவனை வாழ்த்துவதே நிறை அமைந்த மாதர் நெறியாகும். இத்தகைய மாதர் கணவரோடு இன்பமும் துன்பமும் ஒருங்கே நுகர்ந்து அவர் ஆவிதுறப்பின் அந்நிலையே உயிர் நீப்பர் என்பதும் அறியப்படுகின்றது. நீரில் அமைந்து வாழும் நீலமலர் அந்நீர் வற்றியபோது அவ்விடத்தேவற்றி உலரும் தன்மைபோல் கற்பமைந்த மங்கையர் கணவன் வாழுங்காலத்து அவனுடன் இனிது வாழ்ந்து அவன் அழியும் காலத்து தாமும் அகமகிழ்ந்து அழிவர். இத்தன்மை வாய்ந்த குலமாதர் நெறியை,கொடியின் தன்மையோடு ஒப்பு நோக்கிக் கம்பர் அமைத்துள்ள கற்பனை தேன் எனத் தித்திக்கும் தகையதாகும்.

"நிலமரங்கிய வேரொடு நேர்பறித்து
அலமரும் துயர்எய்திய ஆயினும்
வலமரங்களை விட்டில மாசிலாக்
குலமடந்தையர் என்னக்கொடிகளே"

என்னும் கம்பர் கவியில் அமைந்துள்ள சொல் நயமும் பொருள் நயமும் ஆயுந்தொறும் அளவிறந்த இன்பம் பயப்பதாகும். குலமாதர்போல் விளங்கிய கொடிகளை விலைமாதர் போல் விளங்கிய வண்டுகளோடு ஒப்புநோக்கி வேற்றுமை உணரத்தக்கதாகும். பொருளையே விரும்பும் பொதுமாதர் உள்ளத்தில், அன்பெனும் பசை இறையும் இல்லையென்று கலங்கா அறிஞர் கண்டுணர்த்தியுள்ளார்கள். இத்தன்மை வாய்ந்த வண்டோர் அனைய பெண்டிரை

"நறுந்தாதுண்டு நயனில்காலை
வறும்பூத்துறக்கும் வண்டுபோல் குவர்"

என்று மணிமேகலை ஆசிரியர் மாண்புற விளக்கிப்போந்தார். ஒரு மலரில் உள்ள மதுவை மாந்தும் அளவும் அதன்கண் அமைந்து மகிழ்ந்து அப்பால் மற்றொரு மலரை நாடி அடையும் வண்டுபோன்ற நாரியர்பால் மயங்காத நகரின்பெருமையை,

"கண்வலைக் காமுகர் என்னும் மாபடுத்து
ஒண்ணிதித்தசை தழீஇ, உடலம் விட்டிடும்
பெண்வலைப் படாதவர் பீடின் ஓங்கிய
அண்ணலங்கடிநகர் அமைதிசெப்புவாம்"

என்று சிந்தாமணி ஆசிரியர் செம்மையாய் எடுத்துரைத்த நயம் சிந்திக்கத்தக்கதாகும். ஆகவே அற்றகுளத்து அறுநீர் பறவைபோல், இடருற்றபோது நீங்கும் வண்டனையாரோடிணங்காது இணைபிரியா இயல் அமைந்த கொடியனாரைத் துணையாகக் கோடலே இருமையும் இன்பம் தருவதாகும் என்னும் உண்மை இனிதறியப்படும்.

# வண்மையும் வறுமையும்.

சோழ நாட்டின் தலைநகராய் விளங்கிய புகார் நகரத்தில் வண்மையிற் சிறந்த வணிகர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்.

"கலம் சுரக்கும் நிதியம் கணக்கிலா
நிலம் சுரக்கும் நிறைவளம்"

என்று கம்பர் பெருமான் கூறியவாறு கலத்தாலும் நிலத்தாலும் விழுமிய செல்வம்பெற்று விளங்கினர். அவ்வணிகரது சுற்றத்தார் பலர் அந்நகரில் வாழ்ந்து வந்தார்கள். அக்கிளைஞர் செல்வம் அமையப்பெறாத ஏழையராயினும்

ஒழுக்கம் குன்ருு உயரிய நெறியில் நின்றூர்கள். இவ்வாறு வறுமையிற் செம்மை வாய்ந்த சுற்றத்தார்க் கெல்லாம் அவ் வணிகர், உற்ற துணையாய் அமைந்தார். "செழுங்கிளை தாங் குதல் செல்வர்க் கழகு" என்னும் உண்மை யுணர்ந்து ஒழுகி வந்தார். இவரது வண்மையால் உற்ருரும் உறவினரும் வறு மையின் கொடுமை யறியாது செழித்து ஓங்கிப் பெருகி ஞர்கள். மஞ்சு தோய்ந்த மலையைச்சார்ந்த மரங்கள் செழுங் கிளைகளோடும் தழைகளோடும் செழித்துப் பணைத்துவளர் தல்போல, அச்செல்வரது ஏழை யுறவினரும் இனிது வாழ்ந்தார்கள்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் அளவிறந்த அரும் பொருள்களை எடுத்து வந்த அவரது கலங்கள் ஓர் சுழிக் காற்றில் அகப்பட்டு கருங்கடலில் ஆழ்ந்தன. கடும் புயலின் வெம்மையால் தன் செல்வமெல்லாம் சிதைந்தது என்றறிந்த வணிகர் சிறிது நேரம் ஓவியத்தில் எழுதிய உருவம்போல் அசைவற்றிருந்தார். அப்பால் மனம்தெளிந்து "மெய்த்திரு வந்துற்ருலும் வெந்துயர் வந்துற்ருலும் ஒத்திருக்கும் உள் ளத்துறவி"யர் போல், ஆழ்ந்த கலங்களில் அரும்பொருளை ஏற்றி அனுப்பிய அயல் நாட்டு வணிகர்க்குத் தம் வளம் நிறைந்த நிலங்களை ஈடாக அளித்து வறியராயினர்.

வறுமையிற் பொறுமை காட்டிய இவ்வள்ளலைப்போன்று உயரிய மனப் பண்படையாத உற்ருரும் உறவினரும் அடக் கலாற்ருத அருந்துயரால் அலறி அழுதார்கள். அந்நகரில் வாழ்ந்த நன்மக்களெல்லாம் தம் அரும்பொருளை இழந்தவர் போல் தேம்பி அழுதார்கள். நகரின் நடுவே கதிரோன் வெம்மையைக் காத்து, குளிர் நிழலால் எல்லா உயிர்கட் கும் இன்பம் அளித்த ஓர் இனியமரம் வேரற்று விழுந்தாற் போல அந்நகரம் பொலிவழிந்து வெம்மையால் துயருற்றுத் தளர்ந்தது.

இவ்வாறு தன்னை நோக்கித் தளரும் நகரத்தில் வறிய ராய் உயிர்வாழ இசையாத அவ்வணிகர் ஒரு நாள் பொழுது புலரு முன்னமே தமது பெருமைசேர் வீட்டினின்றும் வெளிப் போந்தார். அப்போது அவரது அருமந்த மைந் தரும்,சுற்றமும் அவரைப் பிரிந்து வாழும் வகையறியாராய் நீர் வழிச் செல்லும் மீன்போல அவரைத் தொடர்ந்து சென்றார்கள். இருளில் வழிநடந்து செல்லும் வணிகர்க்குத் தன் ஒளியால் நெறி காட்டக் கருதுவான்போலப் பகலவன் கதிர்வீசி எழுந்தான். நன்றாய் விடிந்த பொழுது அனைவரு வெண்ணெய்நல்லூர் அருகே வந்துற்றார்கள்.

அந்நகரில் செல்வமும் செம்மையும் இனிதமைந் திலங் கிய ஓர் வள்ளல் வாழ்ந்து வந்தார். அவர் வண்மை யென் னும் ஒள்ளிய குணத்திற்கோர் உறைவிடமாய் விளங்கினார். பசியால் வருந்துவோர்க்குப் "பால் நினைந்தூட்டும் தாயி னும் சாலப் பரிந்து" அமுதளிக்கும் பான்மையில் தலை நின்றார்.

> "இரவலர் கன்றாக ஈவார் ஆவாக
> விறகிற் சுரப்பதாம் வண்மை"

என்று ஆன்றோர் அருளிய வாய்மைக்கு அவரே இலக்கிய மாய் அமைந்தார். அப்பெரியாரது வண்மை, வறுமைநோய் அகற்றும் அருமருந்தாய் அமைந்தது. இத்தகைய வள்ள லது பெருமை தமிழ்நாடெங்கும் தவழ்ந்து பரவியிருந்தது. வரையாது பொருள் வழங்கித் தஞ்சமடைந்தோரைத் தாங் கும் தன்மை வாய்ந்த இவ்வள்ளலைச் சடையன் என்னும் பெயரால் உலகம் போற்றி மகிழ்ந்தது. சென்னியில் சடை யைத்தாங்கிய சிவபெருமான் தன்னைத் தஞ்சமடைந்த அந்த ணனைக் காக்குமாறு காலனைக் காலால் உதைத்த கருணை யைப் போற்றப் போந்த பெரியார்,

வண்மையும் வறுமையும்.

71
3406

"அந்தணாளன் உன் அடைக்கலம்புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண்டடியேன்
எந்தைநீ எனை நமன் தமர் நலியின்
இவன் மற்றென் அடியான் என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூர்உளானே".

என்று தேவாரத் திருமுறையிற் போற்றிப் புகழ்வாராயினர். இவ்வாறு அடைக்கலம் புகுந்தோரை ஆதரிக்கும் அருள் வாய்ந்த அவிர் சடைக்கடவுளின் தன்மை வாய்ந்து திகழ்ந்த வெண்ணெய்நல்லூர வள்ளலைச் சடையன் என்று அப்பெருமான் பெயராலேயே வழங்கிய பான்மை மிகப் பொருத்தமாய் அமைந்திருந்தது. பிறரை வருத்தும் வெம்மையைக் கண்டபோது அனலருகே போந்த வெண்ணெய் போல் அகங்கரைந் துருகிய அருளாளரை "வெண்ணெய்ச் சடையன்" என்றே தமிழ்நாடு வழங்குவதாயிற்று!

இத்தகைய சீலம் வாய்ந்த சிற்றூரின் அருகே வந்த போது, இளம் பாலர்கள் வழிநடக்க இயலாது வருந்திப் பசியால் நலிந்தார்கள். பாலும் பழமும் உண்டு பழகிய பாலர்கள் பசிநோயால் வருந்தக் கண்ட தந்தையார் மனம் தளர்ந்தார். பின்னும் சிறிதுபொழுது சென்றபின்னர், சுற்றத்தார் அனைவரும் வாடி வருந்தினார்கள். தன் துயர் காணாத் தகைமை வாய்ந்த அத் தக்கார் மக்களும் மற்றையோரும் அடைந்த துயரைக்கண்டு மனம் பொறாது சடையனைத் தஞ்சமடையக் கருதி அவர் மனையகம் சென்றார்.

பூம்புகார் வணிகரைக் கண்டபோது சடையனார் அன்பால் முகமலர்ந்து முகமன் மொழிந்தார். அப்போது வணிகர், தமக்கு நேர்ந்த வறுமையைக் கரவாது எடுத்து

ரைத்து, "ஐயனே! என் மக்களோடும் கிளைஞரோடும், உன்னையே தஞ்சமாக அடைந்தேன்." என்று சொல்லிக் கண்ணீர் உகுத்தார். இதைக்கண்ட சடையன் மனம் பொறுது வருந்தி வணிகரை நோக்கி "அன்பரே! இவ்வுலகில் நல்லார் பலர் வறுமையால் வருந்துவது முன்வினைப் பயனே ஆகும். இதற்காக நீர் வருந்தித் தளர்வது தகாது. உம்மையும் உம்மைச்சார்ந்த அன்பர் அனைவரையும் நான் பாதுகாக்கும் பொறுப்புடையேன். மலைபோல் செழித்து விளங்கிய தாங்கள் மலைவதைக் காண நான் மனம் பொறேன்" என்று ஈரமளாவிய மொழிகளால் எடுத்துரைத்தான். இவ்வாறு சடையனது வண்மையால் பூம்புகார் வணிகர் வறுமைக் கடலில் விழுந்தும், அதன்கண் ஆழ்ந்தழியாது இனிதமைந்து வாழ்ந்தார். இத்தகைய வள்ளலது வண்மையை உவமையாகக் கொண்டு, கம்பர் அமைத்துள்ள கவியின் நயம் கற்றோர் கருத்தைக் கவர்வதாகும்.

"மஞ்சினில் திகழ்தரும்
மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிதெடுத்து
எறியவே, நளன்,
விஞ்சையில் தாங்கினன்
சடையன் வெண்ணெயில்
தஞ்சமென்றோர்களைத்
தாங்கும் தன்மைபோல்"

என்னும் கவியின் கனிந்த நயம் ஆராய்தற் குரியதாகும்.

சேது பந்தனம் செய்யப்போந்த வானர வீரர்கள், மஞ்சுதோய உயர்ந்த மலைகளைப் பெயர்த்துக் கடலில் வீசி எறிந்தார்கள். அப்போது ஓங்கி உயர்ந்து பசுமை நிறம் வாய்ந்து விளங்கிய ஓர் மலை நிலைகுலைந்து தன்பால் அமைந்த மணிகளோடும் மரங்களோடும் மற்றைய பொருள்களோடும்

கருங்கடலை நோக்கி விரைந்து சென்றது. ஆயினும், நிலை யழிந்து வருந்திய அம்மலை கடலில் விழுந்து ஒழியா வண்ணம், வானரத் தச்சனாய நளன் என்பான் அம்மலையைத் தாங்கி அன்போடு அணையில் அமைத்தான் என்று கம்பர் கருதி அமைத்த அழகு சாலவும் இனியதாகும். ஈரமென்பது இறையளவுமின்றி மலையை இடம்விட்டுப் பெயர்த்த வானரம், செல்வனை வீட்டை விட்டுப் பெயர்த்து நிலை குலைத்த வல்வினையை நிகர்ப்பதாகும். கருமையை விரித்துப் பரப்பினாற்போன்று, கடுமையான தோற்றத்தோடு விளங்கிய பெருங்கடல் கூற்றினும் கொடிய வறுமையைப் போல்வதாகும். அத்தகைய கடலில் ஆழ்ந்து அழிய வரும் மலையைத் தன் கலைநுண்மையால் ஆதரித்துத் தாங்கி அணையில் அமைத்த வானரத் தச்சன், வறிஞரைத்தாங்கி வண்மையால் ஆதரிக்கும் வெண்ணெய் வள்ளல்போல் விளங்கினான். இன்னும், இக் கவியின் நயம் எவ்வகையிலும் சிறந்து திகழ்வது மதிநலம் வாய்ந்தோர் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

இத்தகைய வெண்ணெய்நல்லூர் வள்ளலாரே கம்பர் பெருமானது அரும்புலமையை அறிந்து அவரை ஆதரித்த ஆன்றோராய் விளங்குகின்றார். கலையினதகலம் கண்ட கம்பர் வறுமை வாய்ப்பட்டு வருந்தாவண்ணம் உற்ற துணையாய் நின்றுஉதவிய வள்ளலைத்தமிழகம் என்றும் போற்றும் கடப்பாடுடையதாகும். கல்வியால் உயர்ந்த கம்பருக்கு அன்னார் செய்த உதவி, மேலோர்க்குச்செய்த நன்றிபோல் மேம்பட்டு,

"உதவி வரைத்தன்று உதவி, உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு வாய்த்த சான்றாய் அமையும் தன்மை நன்கு அறியப்படும்.

# வீணைக் கொடியோன்.

இக்காலத்தில் தன்னரசுபெற்ற நாடுகள் தனிக்கொடியுடையனவாய் விளங்குதல் போன்று, முற்கால மன்னரும் கொடியுடைய கொற்றவராய் விளங்கினார்கள். மாநிலங்காக்கும் மன்னரும், தேவரிற் சிறந்த மூவரும், தமக்குரிய தனிக் கொடியோடு திகழ்ந்தார்கள். அண்டங்களனைத்தையும் ஆக்கும் தொழிலுடைய அயன் அழகிய அன்னத்தைக் கொடியில் எழுதி அன்னக்கொடியோனாய் அமைந்தான். காக்கும் தொழிலுடைய திருமால் வலிய கலுழனைத் தன் கொடியில் எழுதிக் கருடக்கொடியோன் என்று பெயர் பெற்றான். அழிக்கும் தொழில்கொண்ட அரன் மழ விடையைத் தன் கொடியில் எழுதி விடைக் கொடியோன் என்று வழங்கப் பெற்றான். இவ்வாறு நீரில் வாழும் அன்னமும் விசும்பில் வாழும் கருடனும், நிலத்தில் வாழும் காளையும் மூவரது கொடிகளாய் முறையே அமைந்து புகழ் பெற்றன.

இவ்வாறே முடியுடைய மன்னராய் முற்காலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த மூவேந்தரும் அழகிய கொடியுடையோராய் அமைந்திருந்தார்கள். சேரநாட்டை ஆண்டு வந்த அரசன் தன் கொடியில் வில் எழுதி வில்லவன் என்று பெயர் பெற்றான். சோழ நாட்டை ஆண்டுவந்த அரசன் காட்டில் வாழும் கடும் புலியைக் கொடியில் எழுதி புலிக் கொடியோன் என்று போற்றப் பெற்றான். தென் தமிழ் நாட்டை யாண்ட தென்னவன் நீரில் வாழும் கயல்மீனைக் கொடியிலமைத்து மீனவன் என்று பெயர்பெற்றான். ஆகவே வீரம் செறிந்த சேர சோழ பாண்டியர் வில்லையும், புலியையும், மீனையும் முறையே கொடியில் எழுதி மகிழ்ந்தார்கள்.

இன்னும் மறைந்து நின்று மாயப்போர் புரியும் மாரவேள் மீனக்கொடியோன் என்றும், குழைந்த அன்பர்க்கு அருள் செய்யும் குமரவேள், சேவற் கொடியோன் என்றும் செந்தமிழ் நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நிகழ்ந்த பாரதப் பெரும் போரில் துற்குணக் கொழுந்தாய துரியோதனன் நஞ்சுமிழும் நாகக் கொடியோடு நின்முன். தன்னேரிலாத தருமன், முரசு எழுதிய கொடியோடு முனைந்து நின்முன். ஆகவே விண்ணரசாளும் தேவரும் மண்ணரசாளும் மன்னரும் தம் மனப்பான்மைக்கு ஏற்ற உருவினைக் கொடிகளிற் பொறித்து அமைத்தார்கள், என்னும் உண்மை இனிதறியப்படும்.

தென்னவன்நாட்டிற்குத் தென்பாலமைந்த கடல்சூழ் இலங்கைக் காவலனுகிய இராவணன் தனது வீரக்கொடியில் வீணையை எழுதி அமைத்தான். தேவரையும் மூவரையும் வென்று திசையானைகளின் வலி யழித்து மன்னர் மன்னனாய் இலங்கிய இலங்கைநாதன் வீணைச்செல்வமும் வாய்ந்து விளங்கினான். இவ்வரசனது சபையில் நயம் தெரிந்து பாடவல்ல நாரதன் முதலிய முனிவரும் தேவரும் நல் இசை நிகழ்த்தினார்கள்.

> "சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே
> பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணிடை
> வீணையின் நரம்பிடை விளைத்த தேமறை
> வாணியின் நாரதன் செவியின் வார்க்கவே"

என்று கல்வியிற் பெரிய கம்பர் கூறுமாறு நரம்பின் நயம் தெரிந்த நாரதன் முறைதிறம்பாது பாடற்கிசைந்த பண்ணோடு மறையை இசையிலமைத்து இலங்கை மன்னன் மனமகிழப் பாடினான். இன்னும் இசைவல்லார் பலர் இராவணனது வீரத்தையும் வெற்றியையும் இசையிலமைத்துப்பாடி இன்புறுத்தினார்கள். இவ்வாறு இசை இன்பம் நுகர்ந்து

மகிழ்ந்த இராவணனது நகரமெங்கும் இன்னொலியே நிரம்பி நின்றது. அரசன்வழி நின்ற அரக்கரெல்லாம் ஆடலும் பாடலும் நிகழ்த்தி அகமகிழ்ந்தார்கள். இத்தகைய இசைச் செல்வம் நிரம்பிய இலங்கைமா நகரை நோக்கிய அநுமன் அதன் பெருமையை வியந்து புகழ்ந்தான். நகரமெங்கும் மகர வீணையின் மந்திர கீதமும், ஆடலும், அமிழ்தின் ஆன்ற பாடலும் நிறைந்து நின்ற நீர்மையை,

"பளிக்கு மாளிகைத் தலந்தொறும்,
இடந்தொறும், பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண் நறும்
சோலைகள் தோறும்,
அளிக்கும் தேறல் உண்டு ஆடுநர்
பாடுந ராகிக்
களிக்கின் றாரலால் கவல்கின்றார்
ஒருவரைக் காணேன்"

என்று மாருதி மனமாரப் புகழ்ந்தான். அந்நகரில் வாழ்ந்த மங்கையரும் இசையினும் இனிய சொல்லமைந்தவராய் இலங்கிய பெருமையைக் கண்ட இராமதூதன்,

"குழலும் வீணையும் யாழும்
என்றினையன குழைய
மழலை மென்மொழி கிளிக்
கிருந் தளிக்கின்ற மகளிர்"

என்று புகழ்ந்து மகிழ்ந்தான்.

இத்தகைய இனிய குரலமைந்த மங்கையர் இசைத்த பாடலின் இன்சுவையை நுகர்ந்து இலங்கை வேந்தன் இன் புற்றான்.

"அரம்பை மங்கையர்
அமிழ்துகுத்தா லன்ன பாடல்
வரம்பி லின்னிசை
செவிதொறும் செவிதொறும் வழங்க"

இராவணன் இனிது வீற்றிருந்தான் என்று கவி அரசர் கூறுகின்றார்.

இவ்வாறு இன்னிசை மாந்தி இன்புற்ற இலங்கை நாதன், நாரத முனிவனும் நயக்குமாறு இசையில் வல்லனு யிருந்தான் என்பது இனிது விளங்குகின்றது. இறைவன் வீற்றிருக்கும் வெள்ளிமா மலையை அசைத்த வீரனாய இராவணன் அப்பெருமானது சேவடிக்கொழுந்தின் சீற்றத்திற்கு ஆற்றாது அம்மலையினுள்ளே அகப்பட்டு நைந்தபோது இனிமையாய் பாடிய இசையினுக்கு இரங்கி, ஈசன் அருள் செய்தான் என்று வழங்கும் வரலாறு அவ்வரசனது இசைப்புலமைக்கு இணையற்ற சான்றாகும். இவ்வுண்மை

"வண்ண மால் வரை தன்னை
மறித்திடலுற்ற வல்லரக்கன்
கண்ணும் தோளும் நல் வாயும்
நெரிதரக் கால்விர லூன்றிப்
பண்ணின பாடல் கைநரம் பாற்
பாடிய பாடலைக் கேட்டு
அண்ணலார் அருள் செய்த
அடிகளுக்கிடம் அரைசிலியே"

என்னும் தேவாரத் திருவாக்கால் இனிது விளங்கும். இன்னிசை கேட்ட இறைவன் இலங்கை வேந்தன் செய்த தீமையைப் பொறுத்து நெடிய வாழ்நாளும், கொடிய வாளும் ஆர்வத்தோடு அருளினன். இவ் வாளின் வன்மையாலேயே இலங்கைநாதன் கழுகரசனையும், காலகேயரையும் வென்றான். இவ்வாறு இறைவன் இசையினுக் கிரங்கி அருள் செய்யும் திறத்தினை அறிந்த ஆன்றோர்

"பண்ணொன்ற இசைபாடும்
அடியார்கள் குடியாக

மண்ணின்றி விண் கொடுக்கும்
மணிகண்டன் மருவு மிடம்”

என்று போற்றிப் புகழ்ந்தார்கள்.

இவ்வுலகில் இசைத்திறம் வாய்ந்த மக்கள் உயர்ந்தோராகவும், அத்திறம் அமையப்பெறுதார் ஏற்றமில்லாதோராகவும் எண்ணப்படுகின்றார்கள். மக்களது கருத்தைக் கவர்ந்து கவலையை ஒழிக்கும் அருங்கலைகளுள் இன்னிசையே தலை சிறந்ததென்று எந்நாட்டினரும் இசைந்து கூறுகின்றார்கள். நஞ்சுமிழும் கொடிய நாகமும், வெம்மை சான்ற வேழமும் இன்னிசையில் இன்புற்று அடங்குமென்றால் இசையின் பெருமையை இசைக்க வல்லார் யாவர்? குழலோசை கேட்ட நாகம் புற்றினின்றும், புதரினின்றும் வெளிப்போந்து அவ்விசையினை நுகர்ந்து இன்புறுதலை இந்நாட்டில் எங்கும் காணலாம். யாழ் ஒலி கேட்ட ஓர் வேழம் தன் வெம்மையை இழந்து அடங்கிப் பணிசெய்த பான்மையைப் பழந் தமிழ் நூலாய பெருங்கதை பாராட்டிக் கூறுகின்றது. இவ்வாறு யாழிசையால் யானையை அடக்கி வென்ற வீரன் பெருமையை,

“வளமையும் வனப்பும் வண்மையும் திறலும்
இளமையும் விச்சையும் என்றிவை பிறவும்
இன்பக் கிழமையும் மன்பே ருலகினுள்
யாவர்க் காயினும் அடையும், அடையினும்
வார்கவுள் யானை வணக்குதற் கியைந்த
வீணை விச்சையொடு விழுக்குடிப் பிறவரிது”

என்று பெருங்கதை வியந்துரைக்கின்றது.

ஆகவே நஞ்சுமிழும் நாகமும், மதம் பொழியும் நாகமும் நல்லிசையில் இசைந்து நிற்கும் தன்மை நன்கறியப்படும். இன்னும் அறிவற்ற பொருளாகிய கருங்கல்லும் இசை இன்பத்தால் நெகிழ்ந்து இளகுமென்று பழந்தமிழ் நூல்கள்

பாராட்டுகின்றன. அருந்தமிழறிந்த அகத்திய முனிவர் இசைப் புலமையிலும் ஒப்புயர்வற்று விளங்கினார். அப்பொழுது இலங்கை வேந்தன் அகத்தியரை இசையில் வெல்லக் கருதி அம்முனிவரது தென்மலையை அடைந்தான். அரக்கன் கருத்தறிந்த முனிவர், தமிழ் மணக்கும் திருக்கரத்தில் யாழ் ஏந்தி, இசை பாட அருகே இருந்த கடும்பாறை இளகிற்று. அதன்மீது அகத்தியர் தம் யாழை வைத்தார். இன்னிசை நின்றவுடன் இளகிய பாறை இறுகி யாழைப் பற்றிக் கொண்டது. பாறையை நெகிழ்த்து யாழை எடுக்கக் கருதிய இராவணன் நெடும்பொழுது பாடியும் இளகாத கருங்கல் மீண்டும் அகத்தியனார் பாடியபொழுது நெகிழ்ந்து யாழைக் கைவிட்டதென்று பழந்தமிழ் வரலாறு கூறுகின்றது. இதனால் உயிரற்றபொருள்களையும் உருக்கும் திறம் வாய்ந்த இன்னிசையில் இலங்கை வேந்தன், முத்தமிழ் முனிவர் ஒருவரை அன்றி மற்றைய முனிவர்க்கும் தேவர்க்கும் தலைவனாய் விளங்கிய தன்மை இனிது உணரப்படும். இத்தகைய இலங்கை வேந்தன் அரசு புரிந்த நகரில் எந்நாளும் இன்னொலியே எழுந்து இன்பம் பயந்ததென்றும், அவ்வேந்தன் தங்கை மானபங்கம் அடைந்து இலங்கையிற் புகுந்த நாளிலேயே அங்கு அழுகுரல் பிறந்ததென்றும் கம்பர் அமைத்துள்ள நயம் சாலவும் அழகியதாகும்.

> "முழவினில் வீணையில் முரளி யாழினில்
> தழுவிய குழலினில் சங்கில் தாரையில்
> எழுகுர லின்றியே என்றுமில்ல தோர்
> அழுகுரல் பிறந்தது அவ்விலங்கைக்கு அன்றரோ"

என்பது கம்பரது அருங்கவியாகும்.

இவ்வாறு ஏனைய செல்வங்களோடிசைச் செல்வமும் இனிது பெற்று அச்செல்வத்தை மற்றைய செல்வங்களினும் மாண்புடையதாகக் கருதி மகிழ்ந்த இலங்கை மன்னன்

உலகெலாம் புகழும் ஓங்கிய கொடியில் வீணையை எழுதிய தன்மை வியப்பாகுமோ? இத்தகைய மன்னன் இசையால் உலகாண்டான் என்று கருதுதல் இழுக்குடையதாகுமோ? இலங்கை வேந்தனைப் போன்ற திருந்திய இசை வல்லார் இருந்திருப்பினும் அக்கலையில் அளவிறந்த ஆர்வமுற்று இறைக் கொடியில் இசைக் கருவியை எழுதியமைத்த பெருமை அவ்வீரனுக்கே உரியதாகும். இன்றளவும் இத் துறையில் அவ்வீரனை வென்றார் எவருமிலர். இசைக்கொடி யோடு இலங்கையை ஆண்ட இராவணன், தன் இசைக் கொடியை இவ்வுலகில் என்றும் அசைக்க இயலாதவாறு நிலைநிறுத்தினன்.

பன்னிரு கட்டுரை முற்றிற்று.

# கட்டுரைக் கவிகளின் பொழிப்புரை.

## ஆண்மையும் அருளும்.

1. "மாதரை ... ... ... காட்டினன்"
(கம்பராமாயணம்)

மாதரைக் கொல்வதும், பாவத்தின் நீங்கிய குருவைக் கொல்வதும், அழிவுசெய்தாராயினும் தூதரைக் கொல்வதும், ஆகாதென்று (விபீஷணன்) சிறந்த காரணங்களை இராவணனுக்கு எடுத்துரைத்தான்.

2. "ஆருகி ... ... ... உருகினளே"
(வில்லிபாரதம்)

இரண்டு விசாலமாய கண்களும், ஆறுபோல் பெருகி வெம்மையான மைகலந்த கண்ணீரை வடிக்க, கூந்தல் அவிழ்ந்து சோர, தன் உடம்பினின்றும் நெகிழ்ந்த ஆடையை நீங்காமல் தடுத்த கை சோர, உடல் முழுதும் சோர, வேறொரு சொல்லும் சொல்லாது, கோவிந்தா கோவிந்தா, என்று கதறி அகம் குளிர்ந்து, நாவில் என்றும் ஊறாத அமிழ்தம் சுரக்க உடல் சிலிர்த்து பாஞ்சாலி உள்ளம் கரைந்தாள்

3. "மலைகண்ட ... ... குறிக்கின்றாயே"

மலைபோல் விளங்கும் என் கையிலமைந்த தண்டாயுதத்தின் வலிமைகண்டும், இந்திரன் மைந்தனாய அர்ச்சுனனது வில்லைக்கண்டும், நகுல சகாதேவரது போர்

வலிமைகண்டும், நமக்கு உதவியாக திருமால் நின்ற நிலை கண்டும், பாஞ்சாலிவிரித்த கூந்தலைக்கண்டும், பகைவரைக் கொன்று மகிழாமல் துரியோதனன் குடைக்கீழ் அமைந்து உயிர்வாழக் கருதுகின்றாயே. (என்றான் வீமன்)

4. "ஆளையா ... ... வள்ளல்"

கம்பராமாயணம்.

இலங்கையை ஆளும் ஐயா இராவணா, உனக்கமைந்த படைகளெல்லாம் காற்றிலறைபட்ட பஞ்சுபோல் ஆயது கண்டாய் (ஆதலால்) நீ இன்று போய்ப் போருக்கு நாளை வருவாயாக என்று கோசல நாட்டு வள்ளலாய இராமன் விடைகொடுத்தனுப்பினான்.

5. "அன்று ... ... ... ஆண்மையினான்"

(வில்லி பாரதம்)

வெற்றிபொருந்திய கட்டமைந்த வில்லின் வன்மையால், வலிய கொடிய அரக்கரை முன்னாளில் கொன்ற வீரனாய இராமனை ஒத்த, புகழோடு பொருந்திய ஆண்மையமைந்த அர்ச்சுனன் அன்று ;போர்புரிந்த துரியோதனன் சேனைக்குத் தலைவனான கர்ணனைப்பார்த்து "நீ இன்று போய் போருக்கு நாளைவா" என்று இனிதாகக் கூறினான்.

6. "ஒறுத்தார்க்கு ... ... புகழ்"

(திருக்குறள்)

தமக்குத் தீங்குசெய்தவனை ஒறுத்தவர்க்கு ஒரு நாளை இன்பமே உண்டாம், அவ்வாறன்றி அத்தீங்கைப் பொறுத்தவர்க்கு உலகம் அழியுமளவும் புகழுண்டாம்.

# ஒருசடையும் திரிசடையும்.

1. "நிந்தனை ... ... ஆமரோ"
(கம்பர்)

பெரியோரால் நிந்திக்கப்படும் மதுவும் நன்னெறிக்கு ஒவ்வாத ஊன்களும் விபீஷணன் மாளிகையில் காணேன், தருமதானமும் முறையாகத் தொழுதற்குரிய இடங்களும் மற்றும் அதைச்சார்ந்த இடங்களும் மாண்புற அமைந்து அந்தணர் மனைபோல் அம்மாளிகை விளங்கிற்று.

2. "தீண்டு ... ... கீழ்மையான்"
(கம்பர்)

கீழோனாகிய இராவணன் என்மேனி தீண்டினனாகில் இந்நெடுங்காலம்வரை, என் உடம்பில் உயிர்பொருந்தி நிற்குமோ? இமைப்பொழுதின் முன்னமே நான் மாள்வது திண்ணம் என்று மனத்தில் எண்ணியே, அவன் தன் வலிமையால் நானிருந்த நிலத்தை அகழ்ந்து எடுத்துச் சென்றான்.

3. "அன்னசாபம் ... ... அகற்றுவாள்"
(கம்பர்)

ஆண்மையும் வாய்மையும் அமைந்து மின்னும் மணிமுடி புனைந்து விளங்கிய விபீடணன் மகளாய (திரிசடை) என்பால் வைத்த கருணையால், என்னைப்பற்றிய பயத்தைப்போக்குமாறு அத்தகைய சாபம் (இராவணனுக்கு) உண்டென்று என்னிடம்சொல்லியருளினாள்.

4. "காலத்தினால் ... ... பெரிது"
(திருக்குறள்)

ஒருவனுக்கு இறுதிவந்தபொழுது ஒருவன் செய்த உபகாரம் அளவிற் சிறிதாயிருந்தாலும் காலத்தை நோக்க உலகினும் மிகப்பெரிது.

5 "பள்ளநீர் ... ... நாளோய்"
(கம்பர்)

ஆழமாய நீர் நிலைகளையுடைய அயோத்திக்குச்சென்று அங்குள்ள பரதன் முதலிய எல்லோரையும் கொன்று ஊழித்தீயின் வெம்மையோடு பெருகிய நீர்வளமுடைய மிதிலையில் வாழ்வோரை அடியோடு அறுத்து, எளிதில் இங்குவந்து உன் உயிரையும் வாங்குவேன். வாழும் நாள் குறைந்தவளே, என்னை நீ நன்ருய் இன்னும் அறிந்தாயில்லை

6. உந்தை ... ... செம்மையாள்"
(கம்பர்)

உன் கண்எதிரே, உன் தந்தையென்று தன் உருவம்மாற்றி வந்தவன் மருத்தன் என்னும் அரக்கன்; மாயையில் ஒப்பற்றவன்; எல்லையற்ற கொடுந்தொழில் இயற்றும் இயல் புடையோன் என்று அமுதம்போன்ற செம்மை வாய்ந்த திரிசடை உள்ளங் கொள்ள உணர்த்தினுள்

7. "மங்கை ... ... அழுதார்"
(கம்பர்)

சீதை அழுதபொழுது வானுலகில் வாழும் மயில் போன்ற மங்கையர் அழுதார்கள்; இடபவாகனனுகிய ஈசன் பாகத்திலமர்ந்த குயில்போன்ற உமாதேவி அழுதாள். செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் அழுதாள்; கங்காதேவி அழுதாள்; கலைமகள் அழுதாள்; கமலக் கண்ணனுகிய திருமாலின் தங்கையழுதாள்; இரக்கமென்பதே இல்லாத அரக்கியரும் வருந்தி அழுதார்கள்

8. "மாயமான் ... ... அன்னாய்"
(கம்பர்)

அன்னமே! மாயமானை அனுப்பியதும், மாயாஜனகனை ஆக்கியதும், இராமசேனையைப் பிணித்த நாகபாசம் இற்றுப்போனதும், அம்மையே! நினைந்து கொள்வாயாக இறப்பதற்கோ எண்ணினாய், நன்னெறியறியாத அரக்கராலாய மாயம் ஒன்றும் நீ அறிந்திலை

9. கண்டன ... ... அல்லால்"
[கமபர்]

நாம்கண்டகனவையும் நன் நிமித்தங்களையும் உனது கற்பின் பெருமையையும், கொடுமை நிறைந்த அரக்கரது பாவச்செய்கையையும் அறத்தைக் காப்பதற்கு அவதரித்துள்ள அண்டர் நாயகனான இராமனது வீரத்தன்மையையும் மறக்கலாமோ? இப்புலையர்க்கு அழிவுண்டே யல்லாமல்(அழியாப் பொருளாய) திருமாலுக்கு அழிவுநேருமோ?

10. அன்னை ... ... நீத்தாள்"
(கம்பர்)

என்தாயே! இதுவரையும் நீ சொல்லியதொன்றும் பொய்த்திலது, ஆதலால் உன்னையே தெய்வமாகக்கொண்டு இவ்வளவு காலமும் இலங்கையில் உயிர்தரித்தேன், இன்னும் இவ்விரவு முழுதும் உயிரோடிருக்கின்றேன், இறத்தல் என்பது நான் முன்னமேகொண்ட முடிவன்றோ? என்று செந்தாமரையை வெறுத்துவந்த திருமகளாய சீதை கூறினாள்.

11. ஆடலும் ... ... வருதலோடும்"
(கம்பர்)

இராமசேனைசெய்த ஆரவாரம் செவியிற் பட்டபோது ஆடலும், கள்ளுண்ட வெறியால் எழுந்த முழக்கமும், அமு

தினும் இனிய பாடலும், மத்தளத்தில் எழுந்த முழக்கமும், பவளம் போன்ற வாயையுடைய மங்கையரது ஊடலும், அவரது கடைக்கண் நோக்கமும், மழலைச் சொற்களும், வாடிய மென்மலர்போல், மடங்கி ஒடுங்கின.

## கர்ணனும்-கும்பகர்ணனும்.

1. "எந்நன்றி ... ... மகற்கு".
(திருக்குறள்)

பெரிய அறங்களைச் சிதைத்தோர்க்கும் அப்பாவத்தினின்று நீங்கும் வழியுண்டு, ஆனால் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோர்க்குப் பாவத்தின் நீங்கும் வழியில்லை.

2. சிதைவகல் ... ... உபாயமுண்டோ.
[கம்பர்)

அழியாத அன்புவாய்ந்த தாயையும், தந்தையையும், குருவையும், தெய்வப்பதவியமைந்த அந்தணரையும், பசுவையும், பாலரையும், பெண்களையும், வதைசெய்பவர்க்கும், அப்பாவத்தை மாற்றும் வழியுண்டு. ஆனால் அழியா உதவியைச் சிதைத்த ஒருவனுக்கு அப்பாவத்தை எக்காலத்திலேனும்ஒழித்தற்குரிய வழியுண்டோ (இல்லை)

3. "கற்றவர்க்கும் ... ... இல்லையால்"
(வில்லிபாரதம்)

கற்றவர்க்கும், அழகுவாய்ந்த கன்னியர்க்கும் கொடையாற் சிறந்தவர்க்கும், வீரராய்ப் புகழ்பெற்றோர்க்கும், எவ்வகைச் செல்வமும் நிறைந்த அரசர்க்கும், உண்மையான குற்றமற்ற ஞான சரிதராய நல்ல தவத்தோர்க்கும் சாதி ஒன்றே, சாதிவேற்றுமையால் வரும் நன்மை தீமை இல்லை.

4. "வருக ... ... குறித்தாள்"

(வில்லிபாரதம்)

என்மைந்தனே வருக, உன் தம்பியர் ஐவரும் அன்போடு உன் தாமரைபோன்ற பாதங்களை வணங்கும் உரிமையால், மனம் ஒத்து ஏவல் செய்ய, ஒப்பற்ற செங்கோல் செலுத்தி, மற்றைய அரசரெல்லாம், உன் வாயிலில் வந்து வணங்க ஆண்மையும் செல்வமும் விளங்க, குருகுலத் தலைவர்க்கும் அரசனாய் சிறப்பாக வாழ்வதே உன் கடமை என்று கூறினாள்.

5. "திடம் ... ... என்றான்"

(வில்லிபாரதம்)

வலியவேற் படையையுடைய இராசராசனாய துரியோதனனுக்கு உதவியாகப் போர்க்களத்திற் சென்று செஞ்சோற்றுக் கடன் கழிப்பதே, எனக்குப் புகழும், கடமையும், தருமமும், ஆகும் என்று கர்ணன் கூறினான்.

## செவிச்சுவையும்-கவிச்சுவையும்.

1. "பொன்னின் ... ... நின்றார்"

(கம்பர்)

பொன்னின் ஒளிபோலவும், போதின் மணம் போலவும், வண்டுகள் உண்ணும் தேனின் தீஞ்சுவைபோலவும், செஞ்சொற்கவியின் இன்பம் போலவும், கன்னிமாடத்தின் மேடையில் அன்னங்கள் பேடையோடு களித்து ஆடும் இடத்தைக்கண்டு, சீதை நின்றாள்.

2. "புவியினுக்கு ... ... கண்டார்"

(கம்பர்)

இவ்வுலகிற்கு அணியாய் அருமையான பொருள்களைத் தந்து புலன்களின் வழியாய்ச் சென்று, பாவத்தை ஒழிக்கும்

துறைகளையுடையதாய் ஐவகைப்பட்ட திணையையும் தழுவி செவ்வையாய்த் தெளிந்து குளிர்ந்து, நேரிய ஒழுக்குடைய தாய் சான்றோர் கவிபோல் அமைந்திருந்த கோதாவிரியை, இராமனும் இலக்குவனும் கண்டார்கள்.

3. "நல்லியல் ... ... தூக்கினான்"
(கம்பர்)

குற்றமற்ற நல்லியற் கவிஞரது நாவில் வருகின்ற சொற்கள் போல, எல்லையற்றதா யமைந்த அம்பறாத் தூணியை இராமன் எடுத்துக் கட்டினான்.

4. "நல்லியற்கவி ... ... மாதோ"
(கம்பர்)

இராமனது வில்லினின்றும் எழுந்துசென்ற அம்புகள் நல்ல இயற் கவிஞரது நாவினின்றும்வரும் பொருள்சேர்ந்த சொற்கள் போலவும், செய்யுளாலாகிய தொடர் போலவும், அத் தொடரின் இடையே எழுகின்ற எல்லையற்ற இசை போலவும், பழுதற்ற பலவகை அலங்காரத்தோடுசென்றன.

## செஞ்சொற்சதங்கை.

1. "அரவின் ... ... குற்றாலம்"
(திருஞானசம்பந்தர் தேவாரம்)

அரவத்தின் வாயிலமைந்த முள்போலும் கூரிய பற்களைப்போன்ற அரும்புகளை ஈன்று குரவம் மணம் கமழும் சோலைகளையுடைய குற்றாலம்.

2. "காலை ... ... நோய்"
(திருக்குறள்)

நோய் செய்யும் காதல், காலையில் அரும்பி, பகற்பொழு தெல்லாம் போதாகி, மாலையில் மலர்வதாகும்.

3. "கூடினார் ... ... பொழுது"
(சிலப்பதிகாரம்)

அரசனது வெண் கொற்றக்குடை, தன் கீழ் அமைந்து வாழும் குடிகளுக்கு இன்பத்தையும், அமையாத பகைவர்க்குத் துன்பத்தையும் கொடுத்தல்போல, வானத்தே ஊர்ந்து செல்லும் சந்திரன் கதிர்விரித்துப் போதாய் நிற்கும் பூக்களை நெகிழ்க்கும் அந்திமாலை கோவலனோடு வாழ்ந்த மாதவிக்கு இன்பத்தையும், அவனைப் பிரிந்த கண்ணகிக்குத் துன்பத்தையும் அளித்தது.

4. "பொன்னின் ... ... கவியின்பம்"
(கம்பர்)

பொன்னின் விளங்கிய ஒளிபோலவும், பூவின் நறுமணம் போலவும், வண்டினம் விரும்பியுண்ணும் தேனின் தீஞ்சுவை போலவும், செஞ்சொற்களாலாய கவி இன்பம் போலவும் சீதை விளங்கினாள்.

## செந்தமிழ் நாடு.

1. "தென்தமிழ் ... ... காண்பீர்"
(கம்பர்)

தென்தமிழ் நாட்டிலுள்ள அகன்ற பொதியிலின் கண்ணே உள்ள அகத்தியமுனிவரது தமிழ்ச் சங்கம் சேர்வீர்கள். அம்மலை அகத்தியமுனிவர், என்றும் உறையுமிடமாதலால் அதனைத் தொழுதுசென்று, பொன்கலந்த நீர்ப்பெருக்கையுடைய பொருனை யென்னும் தாம்பிரவர்ணியைக் கடந்து யானைக் கன்றுகள் வளரும் அகன்ற பக்கங்களை யுடைய மகேந்திரம் என்னும் மலையையும், அப்பால் கடலையும் காண்பீர்காள்.

2. "மலையத் தோங்கி ... ... தென்றல்"
(சிலப்பதிகாரம்)

பொதிய மலையிலே தோன்றி மதுரையில் வளர்ந்து புலவர் நாவில் நிலைபெற்ற தென்றல்.

3. "உலகு ... ... குலக்கொடி"
(சிலப்பதிகாரம்)

பல பொருள்களையும் விளைவித்து உலகத்தைப் பாது காத்து, புலவர் நாவிலே பொருந்திய பூங்கொடி, வையை என்ற பொய்யாத தென்னர் குலக்கொடி.

4. "பாடல் ... ... பாவை"
(மணிமேகலை)

பாடல் சான்ற சிறப்பமைந்த பரதநாட்டில் ஓங்கி வளையாத செங்கோலோச்சும், சோழர் குலக்கொடியாயும், கோன் நிலை திரிந்து, கோடை பெரிதாயினும், தான் நிலை மாறுத தண்தமிழ்ப் பாவையாயும் அமைந்த காவிரி.

5. "கல்வி ... ... நாடு"
(பாரதிபாடல்)

கல்வியிற் சிறந்த தமிழ்நாடு, புகழமைந்த கம்பன் பிறந்த தமிழ்நாடு, திருவள்ளுவரை தன்னகத்தே தோற்று வித்து உலகினுக்களித்த உயர்ந்த புகழ்கொண்ட தமிழ்நாடு, நெஞ்சை அள்ளுகின்ற சிலப்பதிகாரம், என்ற ஓர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு.

6. "செந்தமிழ் ... ... மூச்சினிலே,"
(பாரதி பாடல்)

செந்தமிழ் நாடென்னும் பொழுது, இன்பத் தேன் வந்து செவிகளில் பாய்கின்றது, நமது தந்தைநாடு என்னும் பொழுது மூச்சினிலே ஒரு சக்தி பிறக்கின்றது.

## தவமும் புகழ்.

1. "தோன்றில் ... ... நன்று"
(திருக்குறள்)

மக்களாய்ப் பிறந்தால் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்கவேண்டும், அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலினும் பிறவாதிருத்தல் நன்று.

2. "செயற்கரிய ... ... செய்கலாதார்"
(திருக்குறள்)

மக்களுள் செய்தற் கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர், எளியவற்றைச்செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர்.

3. "மன்னு ... ... மாய்ந்தனரே"
(புறநானூறு)

யாக்கை நிலையாத இவ்வுலகத்தில் நிலைபெறக் கருதியோர், தம்புகழை இவ்வுலகில்நிறுத்தித் தாம் இறந்தார்கள்.

4. "ஆயிரயோசனை ... ... சீர்த்தியான்"
(கம்பர்)

ஆயிரயோசனை அகலமுடையதாய் மேலேயுயர்ந்து ஆயிரயோசனை பூமியினுள்ளே ஆழ்ந்துநின்ற அம்மலையை நொடிப்பொழுதில் ஒருகையில் ஏந்தினன்; இலங்கையில் தாவினன்: உலகெலாம் தவழ்ந்து பரந்த புகழமைந்த அநுமன்

## நல்மரமும்-நச்சுமரமும்,

1. "தோயும் ... ... காணாய்"
(சிந்தாமணி)

இதழ்பொருந்திய தாமரைப் பூவாகிய மஞ்சத்தில்

மெல்லிய அலைகள் அலைப்ப இனிதாகத் துயிலும் வெள்ளை அன்னத்தைக் காண்பாயாக.

2. "ஊருணி ... ... திரு"

(திருக்குறள்)

உலகத்தார் விரும்புகின்ற பேரறிவாளரிடம் அமைந்த செல்வம் நீரால் நிறைந்த ஊருணியை நிகர்ப்பதாகும்.

3 "பயன் ... ... படின்"

(திருக்குறள்)

பயன்படவாழும் ஒருவனிடம் அமைந்த செல்வம் பயன்படும் மரம் ஊர்நடுவே பழுத்ததை ஒக்கும்.

4. "மருந்தாகி ... ... படின்"

(திருக்குறள்)

உபகார சிந்தையுடைய பெருந்தகைமை வாய்ந்தவனிடம் பொருந்தும் செல்வம் எல்லா உறுப்பும் பிணிகளுக்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும்.

5. "நச்ச ... ... பழுத்தற்று"

(திருக்குறள்)

வறியவர்க்கு ஒன்றும் கொடாமையால் அவரால் விரும்பப்படாதவனிடம் அமைந்த செல்வம், ஊர்நடுவே நிற்கும் ஓர் நச்சுமரம் பழுத்தாற் போல்வதாகும்.

6. "கல்லார் ... ... திரு"

(திருக்குறள்)

கல்லாரிடம் அமைந்த செல்வம் கற்றாரை வருத்தும் வறுமையினும் துன்பம் பயப்பதாகும்.

## பந்துவிளையாட்டு.

1. உடம்பார் ... ... தேனே"

(திருமூலர்)

3406.

உடம்பு அழியுமாயின் அதன்கண் அமைந்த உயிரும் நிலைகெடும், உறுதியாய மெய்ஞ்ஞான[illegible]மாட்டார், உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன், அறிந்து உடம்பை வளர்த்தேன், உயிரையும் வளர்த்தேன்.

2. "முத்தம் ... ... பூமியே"
(சிந்தாமணி)

இளைஞர் பந்தாடு பூமிகள் முத்து விளிம்பிலே அழுத்தப்பட்டன, பொன்னாலே பண்ணப்பட்டன, பத்தியில் மணி குயிற்றப்பட்டு, வானை இவ்வுலகத்திலே இருத்தினாற் போல விளங்கின.

3. "மாநெடு ... ... ஆடுகின்றாள்"
(சிந்தாமணி)

பெரிய நெடிய கருங்கண்களையுடைய மங்கை இமை கொட்டாமையால் வானமங்கையை ஒப்பாள், பால்போலும் தீஞ்சொல்லையுடைய ஒப்பற்ற பாவை பந்தாடுகின்றாள்.

4. "மந்தார ... ... நின்றாள்"
(சிந்தாமணி)

வண்டுகள் மந்தாரமாலையின் மலரில் மொய்த்து அங்குள்ள தேனையுண்டு, மகிழ்ந்து, காந்தாரமென்னும் பண்ணைப் பாடும்படி, பந்திலே ஆர்வம் செய்துநின்று, தலைமகனைக் கண்டபொழுது அவன்மேலே கண்ணைப்பரப்பி இமையாது நின்றவள், திருமகள்போல விளங்கினாள்.

5. "துணையில் ... ... காண்மின்"
(சிந்தாமணி)

பேடையில்லாத தோகையுடைய மயில் சுற்றிப்பறக்கின்ற ஈயலைப் பிடிப்பதற்கு அவற்றின்மேல் செல்வது போல, ஒப்பற்ற தோழியர்கள் மங்கையின் இடை ஒசிந்து இற்றுவிடுமோ, என்றிரங்க, மணிகள் அமைத்த வளையணிந்த கையால், பந்தை வலப்பக்கமும் இடப்பக்கமும்

போக்கி அழகிய மங்கை பூம்பந்தாடும் வண்ணத்தைக் காண்மின்.

6. "மையரி ... ... கண்டார்"
(கம்பர்)

மைதீட்டிய செவ்வரி படர்ந்த நெடிய கண்களின் பார்வை படும்போது கருமை நிறம் காட்டியும், சிவந்த கையிற் சேர்ந்தபொழுது செம்மைநிறம் காட்டியும் விளங்கிய பந்துகளைக் கண்டார்கள்.

7. "பொன் ... ... பந்தடித்துமே"
(சிலப்பதிகாரம்)

பொன் இலங்கு பூங்கொடியே, பொன்னாற்செய்த மாலைகள் வில்விடவும், மின்போல் இலங்கும் மேகலைகள் ஆர்த்து ஒலிக்கவும், தென்னன் வாழ்க, தேவரார மார்பன் வாழ்க என்று வாழ்த்திக்கொண்டு பந்தடிப்போமே.

8. "பின்னும் ... ... பந்தடித்துமே"
[சிலப்பதிகாரம்]

பின்னும், முன்னும், எப்பக்கத்திலும் பெயர்ந்துவந்து எழுந்துலாவி, மின்னும் மின்னற்கொடி இவ்வுலகத்தில் இழிந்தாற்போல, தென்னன்வாழ்க தேவரார மார்பன் வாழ்க என்று வாழ்த்திக்கொண்டு பந்தடிப்போமே.

9. "துன்னி ... ... பந்தடித்துமே"
[சிலப்பதிகாரம்]

நெருங்கிவந்து கையில் இருந்ததில்லை, நிலத்தினின்றும் ஆகாயத்தில் எழுந்ததில்லை, என்னும்படி தென்னன் வாழ்க தேவரார மார்பன்வாழ்க என்று வாழ்த்திக்கொண்டு பந்தடிப்போமே.

10. வைத்த ... — இல்லையே
[சிலப்பதிகாரம்]

பந்தைக் கையால் தொடாது காலாலே தட்டி எடுத்

தலும் மாலையினுள்ளே ஒழித்தலும், கையிலே கொள்ளலும் செல்லஓட்டுதலும், கண்ணியையுடைய நெற்றியாலே அடித்தலும், பத்தியில் அடித்தலும், தாம் நிலையிலே நின்று அரவுபோலப் பந்து பரந்துலாவும்படி அடித்தலும், ஆகிய இவ்விளையாட்டால் விளையும் இன்பத்திற்கு எல்லை யில்லை.

## பயிர் வண்டும் படர் கொடியும்

1. "வம்பார் ... ... குற்றாலம்"
[தேவாரம்]

மணம் பொருந்திய மலையின் நீண்டு உயர்ந்த பக்கத்தில் வளரும் வேங்கைக்கொம்பில், சோலையில்வாழும் அழகிய வண்டு யாழ் ஒலி இசைக்கும் குற்றாலம்.

2. "தீங்குயில் ... ... உருக்கும்"
[சிந்தாமணி]

இனிய குயில்கள் மணம்செய்யவும், தேனினங்கள் தூங்கவும், வண்டுகள் இன் இசை நிகழ்த்த, வேங்கை நின்று பொன்போன்ற பூக்களைச் சொரியும்.

3. "காலாடு ... ... சிலர்"
[நாலடியார்]

குளிர்ந்த மலைநாட்டின் அரசனே, செல்வத்தால் ஒருவன் சிறப்புற்று வாழுகையில் அவனைச்சேர்நது களித்து வாழும் உறவினர், விண்மீனிலும் (நட்சத்திரத்திலும்) அதிகமாய் விளங்குவார்கள், ஆனால், அவன் வறுமையுற்ற காலத்தில் உறவு முறை பாராட்டுபவர் சிலரேயாவர்.

4. "நாயகன் ... — தேம்புவாள்"
[கம்பர்]

நாயகனான இராமன் கானகம்செல்லக் கருதினான் என்றும், தனக்குக்கிடைத்த அரசுரிமையை இழந்தான்

என்றும் (சீதை) மனம் வருந்தவில்லை, ஆனால் நீ வருந்தா திரு, நான் உன்னைவிட்டு நீங்குவேன், என்று நாயகன் உரைத்த தீய கொடியசொற்கள் செவியைச்சுட, சீதை தேம்பி அழுதாள்.

5. "ஆங்கது ... ... என்றாள்"

[நைடதம்]

அச்சொற்களைக் கேட்டபொழுது (தமயந்தி) அழுது மனம் நைந்து, நொந்து அழகிய கழல் அணிந்த அரசே! அடியேன் உனக்கு என்ன தவறுசெய்தேன், அறிவில்லாத என்னைவிட்டு நீங்குவதற்கோ, இம்மொழிகளை உரைத்தாய், என்றாள்.

6. "கடுங்கதிர் — ... கொடி"

[சிலப்பதிகாரம்]

கடுமையான சூரியனது வெம்மையால், தன் காதலன் (கோவலன்) உடல் வருந்தியதென்று நடுங்கித் துயரமுற்று, நாவுலர்ந்துவாடி, தன் துயரென்று வேறுகாணாத பெருமை யமைந்த பூங்கொடியை ஒப்பாள் (கண்ணகி)

7. "நாணமும் — — கோதாய்"

[சிலப்பதிகாரம்]

நாணமும் மடமையும் நல்லோரால் ஏத்தப்படும் அழ கும் கற்பும் ஆகிய நான்கையும் துணையாகக் கொண்டு என னோடு வந்து என் தனிமையைத் தீர்த்த பொன்னே, கொடியே, புனைபூங்கோதாய்.

8. "நிலமரங்கிய — — கொடிகளே"

[கம்பர்]

நிலத்தில் பொருந்திய வேரோடு நேராகப் பறித்தலால் அலமந்து அருந்துயர் அடைந்தனவாயினும், மாசற்ற குலமங்கையர்போல் தாம் பற்றியிருந்த வலிய மரங்களை விட்டு கொடிகள் வேறாகப் பிரியாதிருந்தன.

9. "நறுந்ாது ... ... போல்குவர்"
[மணிமேகலை]

மலரில் மது உள்ளளவும் அதனை உண்டு, மதுவற்ற பொழுது அவ்வறுமைபடைந்த பூவைவிட்டுச் செல்லும் வண்டு போன்றவர்கள் (பொதுமாதர்)

10. "கண்வலை ... ... செப்புவாம்"
[சிந்தாமணி]

கண்ணாகிய வலையை வீசி, காமுகர் என்னும் விலங்குகளைப்பிடித்து, ஒள்ளிய பொருளாகிய தசையைப் பறித்துக் கொண்டு உடலை விட்டுவிடும் பெண்களது வலையில் அகப் படாத முனிவருடைய தவப்பயன்போலே செல்வம் ஓங்கிய இராசபுரம் என்னும் நகரத்தின் அமைப்பைக் கூறுவாம்.

## வண்மையும் வறுமையும்

1. கலம் ... ... வளம்"
[கம்பர்]

அளவற்ற செல்வத்தை மரக்கலம் அளிக்கும். நிறைந்த வளத்தினை நிலங்கள் சுரக்கும்

2 "இரவலர் ... ... வண்மை"
[நாலடியார்]

ஈவோர் பசுப்போலவும், ஏற்போர் கன்றுபோலவும் அமைந்து அன்புடன் கொடுப்பதே வண்மை எனப்படும்

3 'அந்தணாளன் ... ... உளானே"
[தேவாரம்]

செழுமையான சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூர் என்னும் பதியில் அமர்ந்த ஈசனே! உன்னை அடைக்கலம்

புகுந்த அந்தணனாகிய மார்க்கண்டனைக் காக்கும் பொருட்டு அவனுயிரைக் கவரவந்த காலனைக் காலால் உதைத்த உன் வள்ளன்மை அறிந்து அடியேனையும் நமன் முதலியோர் நலிந்தால் இவன் என் அடியான் என்று விலக்கும் நின் கருணையை நினைத்து என் தந்தையே, உன் திருவடியடைந் தேன்.

4 "மஞ்சினில் ... ... போல்"
[கம்பர்]

மேகமண்டிலம்வரை உயர்ந்தோங்கிய மலையை ஓர் வலிய வானரம் கடல் நீர் வற்றும்படியாக விரைந்து வீசி எறிந்தபொழுது அக்கடலில் நின்ற நளன் என்னும் வான ரத் தச்சன், தன் கல்வியின் மாட்சியால் அம்மலையைத் தாங்கி அணையில் அமைந்தான், இச்செய்கை, வெண்ணெய் நல்லூரில் தஞ்சமென்று வந்தடைந்தோரைத் தாங்கி ஆதரிக்கும் சடையப்பவள்ளலது தன்மையையொத்திருந்தது.

5 "உதவி ... ... வரைத்து"
[திருக்குறள்]

ஒருவர்க்குச்செய்த உதவி, அவ்வுதவியின் அளவில் அமைந்ததன்று, அவ்வுதவியை ஏற்றுக்கொண்டாரது, தன் மைக்குத்தக்க பெருமையுடையதாகும்.

## வீணைக்கொடியோன்

1. 'சேனையர் ... ... வார்க்கவே'
[கம்பர்]

செப்பமாயமைந்த ஒழுங்கு தவறுமல் மத்தளம் ஒலிக்க பழுதற்ற பண்ணோடு நாரதன் தெய்வமறைகளை வீணையில்

அமைத்து கலேமடந்தைக் கொப்பாக வாசித்து இசை இன்பத்தை இராவணன் செவிகளில் வார்த்தான்.

2. "பளிக்கு ... ... காணேன்"
[கம்பர்]

பளிங்கினுல்செய்த மாளிகைகளிலும் மற்றைய இடங்களிலும் பசுமையான தேன் சிந்துகின்ற, கற்பக தருக்கள் நிறைந்து குளிர்ந்த மணம் வீசுகின்ற சோலேகளிலும், மதுவைஉண்டு ஆடிப்பாடி அகங்களிப்பாரையல்லால் கவலேப் படுவார் ஒருவரையும் காணேன்.

3. "குழலும் ... ... மகளிர்"
[கம்பர்]

சிறந்த இசைக்கருவிகளாய, குழலும், வீணேயும், யாழும் இன்னும் மற்றைய இசைக்கருவிகளும் தோற்கும் படி மெல்லிய மழலேச் சொற்களே கிளிகளுக்குப் பயிற்றுகின்ற மங்கையர்

4. "அரம்பை ... ... வழங்க"
[கம்பர்]

அளவுபடாத இன்னிசையால் தெய்வப் பெண்கள் அமுதம் சொறிந்தாற்போன்று பாடிய பாடல் இராவணனது, பல செவிகளிலும் புகுந்துபாய

5. "வண்ணமால் ... ... அரைசிலியே'
[தேவாரம்]

அழகிய பெரிய கைலயங்கிரியைப் பெயர்த்து எடுக்கப் போந்த வலிமை பொருந்திய இராவணனது, கண்ணும், தோளும், நல்லநாவும், நெரியும்படி இறைவன் தன் கால் விரலே ஊன்றிய பொழுது அவ்வரக்கன், கை நரம்பில் பண்ணெடு பாடிய இனிய கீதத்தைக்கேட்டு அருள்செய்த சிவ பெருமான் அமர்ந்திருக்கும் இடம் அரைசிலி, என்னும் பதியாகும்,

6. பண்ணொன்ற ... ... மருவுமிட
[தேவாரம்]

பண்ணோடு இசைந்த பாடல் நிகழ்த்தும் அடியார் இம்மைச் செல்வமும், மறுமைச் செல்வமும் கொடுக் ஈசன் அமர்ந்த இடம்

7. "வளமையும் ... ... பிறவரிது
[பெருங்கதை]

வளமையும், அழகும், வள்ளன்மையும், வீரமும், இ மையும், கல்வியும் இவைபோன்ற பிறவும், இந்நிலவுலகி எவரிடமும் பொருந்தும் ஆயினும், மதம் பொழிபு யானையை, வீணைக் வித்தையால் அடக்கிய விழுமிய கு யில் பிறத்தலரிது.

8. "முழவினில் ... ... அன்றோ
[கம்பர்]

மத்தளத்திலும், வீணையிலும், யாழிலும், குழலிலும், சங்கிலும், தாரையிலும், எழுந்த இனிய குரலே அன்றி எந்நாளுமில்லாத குரல் அன்று இலங்கையிலெழுந்தது.

பொழிப்புரை முற்றும்